"கொற்றவை"

படைப்பும் பார்வையும்

தொகுப்பு : 2



உள்ளே...

தமிழ்நேயம் 32

கண்ணகி கோயில் வழி கிடைக்குமா?

தேனி மாவட்டத்தில் தமிழக எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ளது கண்ணகி கோயில். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை முழுநிலவு நாளன்று மட்டும் பக்தர்கள் இங்கு வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு கண்ணகி கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர்.

கண்ணகி கோயில் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் திருச்செங்கோடு மலை என்றும், வென்வேலன் குன்று என்றும் அழைக்கப்பட்டதாகச் சிலப்பதிகாரச் செய்திகளிலிருந்து அறியலாம். அக்காலத்தில் சேர நாட்டு மன்னனாக விளங்கிய சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைத்தான், விழா நடத்தினான். இவ்விழாவில் அண்டை நாட்டு மன்னர்களும் ஆரியர்களும் இலங்கை மன்னர் கயவாகுவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தமிழக அரசியல்வாதிகளில் ஆத்திகர்களும் இருக்கிறார்கள், நாத்திகர்களும் இருக்கிறார்கள். ஆத்திகர்களாக இருந்தாலும் நாத்திகர்களாக இருந்தாலும் இவர்களிடையே மூடப்பழக்கம் ஒன்று உண்டு.

ஆண்டு தோறும் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிடத்தில் விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்துகொண்டால் பதவி பறிபோகும் என்ற ஒரு மூட நம்பிக்கையால் நமது அரசியல்வாதிகள் யாரும் நீண்ட காலமாக அவ்விழாவில் பங்கு கொள்வதில்லை. ஒருவேளை இதுபோன்ற ஒரு மூட நம்பிக்கையால் கண்ணகி கோயில் வழிபட்டாலோ அல்லது கண்ணகி கோயிலை உருவாக்கி நல்ல நிலைக்குக் கொண்டுவந்தால் தமக்குத் தீது வந்து விடுமோ என்று தவறாக எண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

அண்மையில் நடந்து முடிந்த கண்ணகி கோயில் விழாவில் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடு நடத்தினர். ஆனால் அங்குள்ள கேரள மாநில காவல்துறையினர் மற்றும் அலுவலர்களின் வன்கைப்பற்றல் அதிக அளவில் இருந்ததாகச் செய்திகள் வந்துள்ளன.

கோயில் வளாகத்தில் கேரள பக்தர்கள் வழிபடும் கோயில் உள்ள இடத்தில் தென்னங்கீற்றாலான தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் கண்ணகி கோயில் அமைந்துள்ள இடத்தில் தோரணங்கள் கட்டுவதற்குக் கேரள மாநிலக் காவல்துறை, வருவாய்த் துறை மற்றும் கானகத்துறை அலுவலர்கள் இசைவளிக்க மறுத்துவிட்டனர்.

கேரளக் காவல்துறையினர் அதிக அளவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு அம்மாநில பக்தர்களுக்கு விழகாட்டும் விதமாக மலையாளத்தில் எழுதப்பட்ட தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் தமிழில் எழுதி வைக்கப்பட்டிருந்த தட்டிகள் அனைத்தையும் கேரளக் காவல்துறையினர் அகற்றி விட்டனர். அது மட்டுமல்லாமல் தமிழகக் காவல் துறையினர் கோயில் வளாகத்துக்குள் நுழைந்தபோது அவர்கள் கேரளக் காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். பின்னர் இரு மாநில அலுவலர்களும் பேசிய பிறகே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்ற செய்தி வருத்தத்தை அளிப்பதாகும்.

(தொடர்ச்சி : பின் அட்டை உள்பக்கம்)

முன் அட்டையில் :

சிதைவடைந்த நிலையில் உள்ள கண்ணகி மங்களாதேவி கோவில்

கொற்றவை - பன்முக நோக்கு

முனைவர் நா. நளினிதேவி

அறிமுகம் :

பழந்தமிழ் இலக்கியங்களின் மீதான மறுபடைப்புக்கள் இன்றைய இலக்கிய வளர்ச்சிக் கூறுகளில் ஒன்றாக இடம்பெற்று வருகின்றன. சமகாலத்தில் காண்பதற்கு அரிதாகி விட்ட இலக்கிய இனிமையும் மொழி வளமும் தமிழ் சான்ற கற்பனையும் நிரம்பி, இன்சுவையும் பல்துறைக் கருத்தும் கொண்ட நூல்களுள் ஒன்று ஜெயமோகனின் கொற்றவை. கடல் நீரைக் குடத்துக்குள் அடக்குவதை ஒத்துக் கொற்றவை நூலின் கருத்துக்கள், அரசியல், சமுதாயம், சமயம், ஒப்புமை, பெண்நோக்கில் ஆராயப்பட்டு நின்ற நிலையில் மதிப்பிடப்பட்டுள்ளன. நாம் தரும் அடையாளங்களை வைத்துக் கணினி வரையும் ஓவியம் போன்று நூலின் கருத்துக்கள் மட்டுமே, இக் கட்டுரையில் காணப்படும் செய்திகளே தவிர, இதற்கு அப்பால் எதுவுமில்லை.

1. அரசியல், சமூகம் / நோக்கு

அரசியலைக் களமாகக் கொண்ட சமுதாயப் பின்னணியில் முகிழ்க்கும் இலக்கியம், தாம் மலர்ந்த காலத்து நிகழ்வுகளின் தாக்கத்தை உள்ளடக்கியுள்ளது.. வறுமையில் அன்றி உண்மையின் அடிப்படையே கற்பனை. ஆகையால், கற்பனை சார்ந்த இலக்கியங்கள் வரலாற்று மூலச் சான்றுகளுள் ஒன்றாக அமைகின்றன. எனவே, வரலாற்றுத் துளிகள் இன்றிக் காப்பியம் போன்ற பேரிலக்கியப் பசுமை வளம் இல்லை எனலாம். இவ்வகையில் கொற்றவை வரலாற்றுத் தொடக்கக்காலம் முதல் சமகாலம் வரையிலான மிக நீண்டகால வரலாற்றின் மைல்கல்களையும், திருப்பங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழரும் தொன்மையும்

கடல்கோள்கள் எனப்படும் பல பேராழிப்பெருவெள்ளப்பெருக்குகள், இன்றைய இந்துக்கடல் மூடியுள்ள குமரிக்கோடு, பஃறுளி, ஆற்றுடனான பன்மலை அடுக்குமாகிய குமரிக்கண்டம் அல்லது இலெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த மக்களை வடக்கு நோக்கிப் பெயர்ந்துசெல்ல வைத்தமையால், இந்தியா முழுவதும் அவர்கள் பரவினர். இயற்கையன்றி வேறுஎதுவும் அறியாமக்கள், கற்காலத்தையும், இரும்பு, வெண்கலம், ஈயம் என உலோகப் பயன்பாடு கண்ட காலத்தையும் கடந்து, ஐம்பெரும் பருக்களின் வழியே ஐம்புலன்களையும் அறிந்து, ஐவகை நிலத்தின் அடிப்படையில் வாழ்வும்

வழிபாடும் அமைந்து, தனக்கென மொழிகண்ட மிகநெடிய வரலாற்றை, ஐவகைப் பருக்களிலும் நிலத்திலும் முதலிடம் பெறும் 'நீர்' எனும் முதற்பகுதி, நேரில் காணும் உணர்வைப் படிப்போர் உணரும்வகையில் எடுத்துக்காட்டியுள்ளது.

சங்ககாலம் குறித்து இறையனார் களவியல் உரை கூறும் செய்திகளின் அடிப்படையில் அதன் தொன்மையைத் தமிழ் இலக்கிய உலகு ஏற்றுக்கொண்டதால், அச்சங்ககாலத்துக்கும் தொன்மையான தமிழரின், தமிழ்மொழியின் சிறப்பு மறைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை உறுதி செய்யும் வகையில், மூத்த குடிகளான தமிழரின் தோற்றம் பற்றிக் கொற்றவை கூறுவதாகக் கொள்ளலாம்.

தமிழும் தொன்மையும்

தமிழின் பிறப்புக் குறித்து ஆராயும் கால்டுவெல் போன்ற ஒப்பிலக்கண, மொழி வரலாற்று ஆய்வாளர்கள், தமிழின் மூலமொழி ஒன்று இருந்திருக்க வேண்டும்; அம்மூலமொழியிலிருந்து அல்லது தமிழிலிருந்து பிற கிளைமொழிகளும் பிறந்திருக்க வேண்டும் என்பர். இந்த அடிப்படையில் குமரிக்கண்ட மக்கள் புலம்பெயர்ந்து வடக்கே பரவி வாழ்ந்த காலத்துக் கண்டறிந்து, தமக்குள் உரையாடிய மொழி, தமிழின் மூலமொழியே. கால வளர்ச்சியில் தமிழ் செம்மையுற்ற பின்பு அம்மொழி வழக்கொழிந்தது. பொருள் புரியாமொழியில் கொற்றவையின் கதையுறுப்பினர்கள், பேசுவதாகவும், பாடுவதாகவும் சன்னதம் கூறுவதாகவும், நாகர் போன்ற பிறநாட்டார் அம்மொழியைப் புரிந்து கொள்வதாகவும் இடம்பெறுவது இம் மூலமொழியே என்பதில் ஐயம்.ல்லை. அம்மொழி எழுத்துக்கள் வளைவுகளும் கோடுகளும் கொண்டதாக இருந்திருக்குமோ எனக் கொள்ளும் வகையில், தொன்மை மொழி மறந்த மக்கள் அம்மொழியைக் கோலங்களில் வரைந்து நினைவு கூர்வதாகக் கொள்ளின் மிகையில்லை.

குடிகளும், சிற்றரசுகளும்

தம்மிடம் உறைந்துள்ள பண்புகள் பலவற்றின் வடிவங்களே கானுறை உயிர்கள் என்று புரிந்து அறிவு வளர்ச்சி பெற்ற நிலையில், அவற்றைப் பேணுவதும் அஞ்சுவதும் விலக்குவதுமான செயல்கள் காலப்போக்கில் மேற்கொள்ளப்பட்டன. ஐவகை நிலத்தின் இயற்கைச்சூழல் அடிப்படையில், உணவும், உறையுளும், வாழ்வும், வழிபாடும், தொழிலும், பெயரும் தன்னிச்சையாக அமைய, இவற்றின் அடிப்படையில் குலங்களும், குடிகளும் தோன்றின. அனைவரும் அன்னையின் மக்களே என்ற உண்மையை மறவாதிருக்க அவள் அணிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குலத்துக்கு உரிமையாக்கிக் கொண்டனர்.

குடிகளும், ஏற்றத்தாழ்வும்

சோறு எனப்படும் அன்னம் தரும் நெல்லின் ஒப்பற்ற பயன் உணர்ந்த பின், அதனை விளைவிக்கும் உழவுத்தொழில் உலகிலேயே முதன்முதல் தோன்றியது. பசிப்பிணி போக்கி, உயிர்காக்கும் தன்மையுடைய உழவுத் தொழில் உயர்ந்ததாகக் கருதப்பட்டாலும், பின்னர் அத்தொழில் தந்த வளம், மக்களின் இயற்கைப் பண்பை மாற்றி உயர்வு தாழ்வையும், உரிமை மகளி ரையும், மக்களையும் உருவாக்கியது. தொழில் அடிப்படையில் குலங்க ளும், குடிகளும் உருவாக, அவற்றுக்கு எனத் தனித்தனி ஒழுக்க, வாழ்வியல் நெறி களும் வகுக்கப்பட்டுக் குடித்தலைவர்கள் உருவாயினர். குடிகளுக் கிடையே, ஏற்றத்தாழ்வு முளைவிட்டது.

தனியுடைமை அரசுகளும், தோற்றமும்

எல்லாம் எல்லாருக்கும் என்று வாழ்ந்த பன்னெடுங்காலப் பொது நெறி சிறிது சிறிதாக மறைய, தனியுடைமை உணர்வு வலுப்பெறத் தொடங் கியது. வலியது வாழும் மெலியது நலியும், என்ற வகையில், வலிமை பெற்ற குடிகள் பிற குடிகளை வென்று ஒன்றிணைந்து அரசாக்கிக் கொண்டன. மகட்பாற் காஞ்சித்துறை சார்ந்து தாம் விரும்பும் பெண்களைத் தரக் கேட்டு, மறுப்பின், போரும், இசையின் மணமும் புரிந்து கொண்டனர். குடித்தலைவர் களாகிய சிற்றரசர்கள், சன்னதம் அறிந்தும், அஞ்சியும், விரும்பியும் அரசருக்குப் பணிந்தபோதும் அவற்றின் மீதான [illegible] உரிமையை மீண் டும் பெறும் முனைப்பு அவர்கள் உள்ளத்தி[illegible]யாது கனன்று கொண்டே இருந்தமையை போகூர்ப் பழையனி[illegible]பாடுகள் வாயிலாக அரண் செய்யலாம். மண்ணையும் மக்களையும் [illegible]ருவாக்கிக் கொண்ட சிற்றரசுகளால் அரசுகள் உருவான முறை சிறப்பாக விளக்கப் பெற்றுள்ளது.

அரசுகளும், ஆட்சி நெறிகளும்

பல சிற்றரசுகளை வென்றடக்கி மலைகளையும், காடுகளையும் கொன்று தம் எல்லையை விரித்துக் கொண்டிருந்தமையால், போரும், வீரமும் உயர்வாகக் கருதப்பட்டன. அரசநெறிகள் வகுக்கப்பட்டு, அரசவையில் குடித் தலைவர்களுக்கும் இடமளிக்கப்பட்டது. எண்குடித்தலைவர்களின் எண் பேராயமும் ஊர் மன்றுகளில், குடித்தலைவர்களின் தலைமையில் அறங்கூறு அவையங்களும் இருந்தன. குடிநெறிகளைக் காப்பது அரசநெறி எனவும் இவ்வரசநெறி அன்னையின் அறநெறிக்கு உட்பட்டது எனவும் வரையறை செய்து கொண்டனர். குடித்தலைவர்கள் அரசவையில் தம் குறைகளைக் கூறிப் போக்கிக்கொள்ளும் உரிமை இருந்தது. நாட்டு நிகழ்வு களைக் கண்டறிந்து அரசனுக்குத் தெரிவிப்பதோடு செவியறிவுறுத்தும் உரிமையும் இருந்தது. ஒற்றர்கள் உளவறிய, யவன, சோனக வீரர்கள், அரண் மனை

வாயிலரும், காவலருமாயினர். இவைபோன்ற அன்றைய அரசியல் நிர்வாக முறைகளைக் 'காப்பியம் கூறியது' எனும் கொற்றவையின் மதுரைக் காண்ட விரிவுப்பகுதிக், கற்பனை உரையாடல்களில், அக்காலச் செயல்முறை, வரலாற்று உண்மைகளைக் கதைச்செய்திகளாக்கியுள்ளது.

அறநெறி பிழைத்தலும் உட்பூசலும்

சிற்றரசுகள் அல்லது குடித்தலைவர்கள் தம் செல்வாக்கால் அரசியல் ஆதிக்கம் செலுத்த, பிற குடிமக்கள், இதனை எதிர்த்தனர். மக்கள் தலைவர்களாக மன்னர்களானவர்கள் மக்கள் நலம் மறந்து, மனமகிழ் தலைகளில் நாட்டம் கொண்ட போது விதைநெல் கவர்தல், சிலம்பு கவர்தல் போன்ற கரவுச் செயல்களும் இதன் விளைவுகளாக உட்பகையும் வேரூன்ற மன்னனை மக்கள் எதிர்த்து வெறுக்க இழிசினர், கடைசியர், களமர், தொழும்பர், இரவர் எனக் கடைநிலைப்படுத்தப்பட்ட மக்கள், தன் மன உணர்வுகட்கு வடிகாலாக வன்முறை வழியை நாடும் நிலையை, மன்னன் காவாதொழிந்த விளைவான உட்பூசலோடு பசியும் பிணியும் பஞ்சமும் உருவாக்குகின்றன. ஆட்சியில் ஊடுருவித் தம் வளம் பெருக்கிக் கொள்ளும் தன்னலப் பற்றாளர்களை இனம்கண்டு விலக்கமுடியாத இயலாமையே ஆட்சியின் வீழ்ச்சிக்கு அடித்தளமிடுவதை வெகு ஆழமாகவும், நுட்பமாகவும் அக்காலச்சூழலில் கூறப்பட்டிருப்பினும், அவை இன்றைய அரசியல் நிகழ்வுகளுடன் ஒப்புநோக்கத் தக்கவையாக உள்ளன.

சொல் மறப்பும் பொன் விருப்பும்

தமிழின் மடியில் சேயாகத் திகழ்ந்த மதுரை, தான் நாள்தோறும் ஆய்ந்த சொல்லும், பொருளும் மறந்து பொன்னும் பொருளும் நாடிய நிலையில், பொலங்கடைத் தெருக்களிலும், நாளங்காடிகளிலும் வந்து குவிந்த வேற்று நாட்டுப் பொருட்களின் குவியல்தான் எத்தனை! எத்தனை! அரண்மனையில் சாவகப் பவளமும், காந்தாரப்பொன்னும், முத்தும், கலிங்கப்பட்டும் அன்றாட இயல்பாயின. கண்ணகியும் கோவலனும் காணும் காட்சிகளின் வாயிலாக நாமும் அவர்களுடன் சென்று தமிழ் மறந்த நினைவின்றிப் பொருட்குவை கண்டு, காணும் உணர்வும், தொடு உணர்வும், இன்றியும் கூடப் பேருவகை கொள்கின்றோம் எனின், அது ஆசிரியரின் கற்பனைத் திறமும், எழுத்தாற்றலும் விளைவித்த பயனாகும்.

மறையோரும் மெய்யறிவாளரும்

கபிலர், அந்தணர் இனம் சார்ந்தவர் என இலக்கியம் கூறுகின்றது. அந்தணர் என்பவர் மெய்யறிவு சான்றவர் என்ற பொருள் தரும் வகையில் கொற்றவை, கார்க்கியின் கூற்றுமூலம் விளக்கியுள்ளது. ஆட்சியில் மறையோரின் ஆதிக்கத்தை மறுக்கும் வகையிலும், அவர்களின் நூல்களையும் வேள்விகளையும் எதிர்க்கும் முறையிலும் மெய்யறிவு

கொளுத்துவோர்க்கும், மறையோருக்கும் இடையேயான போருக்கு, மறைஓதும் அந்தணர் வேறு; பின்னவர் வாழ்க்கையின் அனைத்துச் சிக்கல்களையும் மண்ணில் வைத்துத் தீர்ப்பவரும், கருவிகளையும், படைக்கலங்களையும், மருந்துகளையும் உருவாக்குபவருமாவர்; மறையறிவு மறைஒழுக்கம் வேறு, மெய்யறிவும், மெய்யறிவுசார் ஒழுக்கமும் வேறு, மெய்யறிவுசார் ஒழுக்கமும் வேறு என்று கூறும் விளக்கம் இன்றுவரை தொடரும் பார்ப்பன ஆதிக்கம், எதிர்ப்புச் சிக்கலுக்குரிய தீர்வாக அமைந்துள்ளது. இத்தொடர்பான கருத்துக்கள் பிறிதோரிடத்திலும் இடம்பெற்றுள்ளன.

கடைவீதிகளும், கடைப்பொருட்களும்

கதையும், கற்களும் பாவப்பட்ட பாதை உள்ளே நீண்டு சென்ற கடைவீதித் தெருக்களில் வெண்கலச் சகடங்களுடன் எருமைக் கடாக்கள் இழுத்த தேர்கள் ஓட உலர்ந்த மீன்களும், சிப்பிகளும், சங்குக் கிளிஞ்சல் நகைகளும், பொன்நகைகளும், செம்பு, வெண்கலப் பாத்திரங்களும் எனப் பொருட்கள் குவிக்கப்பட்டுக் கூவி விற்கப்பட்டன. மரவுரி நார் ஆடைகள் அணிந்த பெண்கள், தோலாடை அணிந்த அணிகள், வெண்கல அரணமும், செம்பு உடை வாளுமணிந்த படை வீரர்கள் உலவும் கடைவீதிகளில் முத்துப்பதித்து முத்திரையிடப்பட்ட பண்டங்கள் குவிந்த வணிக நகரில் எங்கும் வணிகக் குரல்களும் கேளிக்கை ஓசைகளும் நிரம்பிய மதுரையின் கடைவீதிகள், அக்காலத்தே அங்காடியில் விற்கப்பட்ட பொருள் வளத்தைக் குறிப்பன என்றே சொல்லலாம்.

உரிமை மக்களும், வணிகமும்

கருந்தோல், கடுந்தொழில் உரிமை மக்களை வடநாட்டு வணிகருக்கு விற்று அனல் நிறங்கொண்ட வடநாட்டு உரிமை மகளிரைப் பெற்றுக்கொண்டு வந்து மன்னர்களுக்கும் தலைவர் களுக்கும் தென்னாட்டு வணிகர் விற்பதும் கோப்பெருஞ்சோழன் முறைநெறி பேசிய பின்பு ஆண்டில் ஒரு மாதம் மட்டும் அறுவடை முடிந்த பிறகு குழந்தைகள், பெண்டிர் தவிர்த்து இழிசினர் மக்களை மட்டும் உரிமை மக்களாக விற்கலாம் என்ற ஆணை வளர்ச்சியின் பக்கவிளைவான வீக்கம் போன்று வளத்தின் விளைவாக இவ்வாறான வணிகம் சோழநாட்டு மருதநிலத்தில் செழித்தது என்று கொள்ளவேண்டும்.

உழவுத்தொழிலின் உயர்வும், அடிமை நிலையும்

தோல் பிளவை நோயென வயல்கள் காட்டை உண்டு, விரிய உலகையே உழுதாலும், தீராத, மேழி விடாய் தவிர்க்க மலைக்குற மக்கள் காட்டுக் கொடிகளால் பிணைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட, களமர் குலமக்கள் அவர்கள் மீது உமிழ்ந்தும் கம்புகளால் அடித்தும் இழிசொல் உரைத்தும் எள்ளி நகையாடி, வயல் வரப்பு நடுவே இருந்த மேட்டில் அமரச்

செய்து மரங்களோடு பிணைத்துக் கட்டி மேழியில் இணைத்துச் சேற்று வயலில் இறக்கப்பட்டனர். எருக்கிலை சேர்த்த மாலையை அணிவிக்க, அவர்கள் அழுதும், முனகியும் இழுத்தனர் என வரும் தொடர்கள், உழவுத்தொழில் உயர்வடைந்த மறுபுறம் மக்களை மக்கள் அடிமையாக்கிய இழிநிலையின் தோற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன.

துறைமுகங்களும், வணிகத்தொடர்பும்

கொற்கை, முசிறி, புகார்த் துறைமுகங்கள் வாயிலாக யவன, சோனக (காப்பிரி) நாடுகளுடனான தொடர்பு வணிகத்தின் மூலம் வலுவுடையதாக இருந்தது, துறைமுகங்களில் நடந்த வணிகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளைக் கொற்றவை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. யவனமரக் கலங்கள் புகாரும் கொற்கையும் விட்டுக் கடல் நுழைந்த பின்னர், சோனகர் துறையில் கலம் அடுக்கச் செய்வது, அதன்பின்னர் யவனநாடு வரை எங்கும் கரையடுக்காமல் ஆழ்கடலூடு செல்லும் பொருட்டேயாம். இதற்கென அங்குச் சோனக மன்னர்கட்குக் காட்சிப்பொருளும், பிறருக்குக் கைப்பொருளும் அளிக்க வேண்டும் தவிர துறைகளுக்குக் கலத்திறை செலுத்த வேண்டும். காப்பிரிகள் கலங்களை அழிப்பவராகையால், இங்ஙனம் சுற்றிச் சென்றதாகவும் - கடல் வணிகச் சிக்கல்களை எதிர்கொண்ட முறை விளக்கப்படுகின்றது.

உழவுத்தொழிலும் உரிமை மக்களும்

பயிர்த்தொழிலைக் கண்டுபிடித்த பெண்கள் ஆணாதிக்க சமுதாயத்தில் வீட்டு வேலைகளில் முடக்கப்பட்ட பின்னர் அது ஆண்களின் தொழிலாயிற்று. உழவுத்தொழிலை முதலில் அறிந்து நுகத்தையும், மேழியையும், எருதுகளையும் பயன்படுத்தியவர் என்ற வகையில் கங்கைக்கரையின் சதுப்புநிலக் காடுகளில், உழவுத்தொழில் நுட்பம் அறிந்த களமர்கள், உரிமை மக்களாக அழைத்துச் செல்லப்பெற்று, அங்குத் தன் குருதியையும், உழைப்பையும் சிந்தி அடிமைகளாய் அல்லலுற்றனர். இலங்கை, மியான்மர், பீஜித் தீவுகளில் தமிழர்கள் உழைத்து அந்நாடுகளின் வளம் பெருக்கிய போதும் வாழும் வளமின்றிக் கண்ணீர் வெள்ளத்துள் ஆழ்ந்துள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

மருதநிலமும், வேற்றவர் கலப்பும்

மருதநிலத்தின் செழிப்பும், வளமும் வேற்று இனத்தவரையும் தம்பால் ஈர்த்தன. மருதநிலத்து ஊர்களில் நெல்கொள்ள காவிரி வழியாக வணிகர் பெரும்படகுகளில் வருதல்; "விதைப்புக்கு முன்பும், அறுப்புக்குப் பின்பும் வேள்வி செய்யவும் வருகின்றனர்"; மருதநில இறைவி வில்வக்காட்டு இறைவி பெயரால் வில்வராணி என்றே அழைக்கப்படுதல். பார்ப்பனர்களையும், சாரணர்களையும், சாக்கையர்- களையும் பேணியதால்

தங்கள் குலம் தழைப்பதாக நம்புவதாகக் கூறல் போன்ற உரையாடல்கள் மருதநிலத்து வாய்ப்புக்கள், நன்மையைப் போலவே தீமைகளும் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன.

வடவரும், வாணிகமும்

கடலோர நகரங்கள் யாவும் பெருந்தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன. பட்டு வணிக வளம் நிரம்பியது பெருவாயிற்புரம். உப்புக்கு நெல் பெற்று நகருக்கு உணவூட்டினர் உமணர்; பரதவர் அள்ளி வந்த முத்தும், பவளமும், மீனும், சங்கும் வடதிசை வணிகர்க்கு விற்கப்பட்டன. இவற்றால் நிறைந்த அத்தினபுரி, கவிஞர்களால் மாயபுரி எனப் போற்றப்பட்டது. உவரிப் படணமாய் விரிந்த ஊரில், பெண்களின் மேனியில் சிப்பியின் மேன்மையும், குழந்தைகளின் கண்களில் முத்துக்களின் ஒளியும், குரலில் அலைகளின் முழக்கமும் ஒலிக்கும் வண்ணம் கடல் வணிகம் செழிக்க, குமரி மலையிறங்கி மக்கள் வந்துகொண்டே இருந்தனர்.

பஃறுளியாறும், வள்ளியாறும் சுற்றி ஒழுக, நடுவே தெங்குச் சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த நிலமாகிய கோட்டாற்று முகத்தில் கொற்கையிலிருந்து பாண்டி வணிகர் கொண்ட பொருட்கள் ஏற்றப்பட்ட வஞ்சிகளும் தோணிகளும் அசைய நெல்லும், வணிகப் பொருட்களும் குவிந்து கிடந்த அங்காடி வீதிகளில் கடலொளி என வணிகக் கூச்சல் நிறைய, அங்காடி முகப்பில் மன்னன் திறைகொள்ளும் சுங்கச்சாவடி ஓங்கி நின்றது என்பன போன்ற சான்றுகள் வடவரோடு வணிகத் தொடர்பு கொண்டமையும், அவர்கள் மொழி, பழக்கவழக்கங்கள், தமிழில் கலந்தமையும் கதை ஓட்டத்துடன் இணைந்த செய்திகளாச் செறிக்கப்படுகின்றன.

மெய்யியலும், மறைஇயலும்

விழவெழுந்த வஞ்சி மாநகரில் முத்தமிழ்நாடு, வடவர் நாடு, சாவகம், சீனம் கடாரம், சோனகம் முதலிய நாடுகளிலிருந்து அறிஞர்கள் பலர் கூடித் தத்தம் நெறிகளைத் தேரும் உண்மைகளைப் புகன்று கலந்துரையாடும் மரபு இருந்தது. மாறுவது ஒன்றே மெய்யெனும் சாக்கையர் நெறி; வேதவியாசனும் கிருதகோடியும், சைமினியும் சொன்ன அறுவகை அளவை, மெய்யை அறிந்து, மெய்யுருவாகி வாழ்ந்தவரே மாந்தருள் தெய்வம் எனும் பிரமவாதி நெறி, நீரில் துடிக்கும் சிறு புழு முதல் புயல்பட்டெழுந்து சுழன்றாடும் ஆழப் பெருவெளி வரை காணும் ஓயாப் பெருநடனமே - சைவநெறி, அலைகடல் துமிகளே புடவிகள்; அக்கடல் வெளியில் துயிலும் விண்ணவர் நெறி, ஊழ்கத்தில் ஏறி உறுவினை அறுத்தோரே அறிவமர் செல்வராவர் எனும் அருகநெறி; ஒலி நுழையாது இலை செறிந்த காட்டிலும் கிளை விரித்து விரியத் தன் இடமறியும் பெரு மரமென, மண் மீது தன் இடத்தை நிறைப்பவர் பல தலைமுறை வணங்கும் முதல் மனிதர் எனும் சீனக் கன்பூசியஸ் நெறி, பருமையாகி நிற்பன எல்லாம் உள்ளுறையும் நுண்மைகளின் வெளிப்பாடே நுண்மை

மீண்டும் மீண்டும் பருண்மையில் தன்னை நிகழ்த்தி நிரை வற்றாது முன் நகர்கின்றது எனும் யவன நெறி எனக் கருத்துக்கள், விற்கள் என வளைந்து உள்ளங்கள் நாணாகிச் சொற்கள் அம்பு என எழுந்து பறக்கும் சொற்போர்கள் இரவு எழுந்தும் சொற்புட்கள் கூடு சேராமல் தொடர்ந்து நடைபெற்றன.

மொழி ஆய்வும் அறிவுத்தேடலும்

சங்கம் வைத்து மொழி ஆய்ந்து இலக்கியம் இலக்கணம் வகுத்த தமிழகத்தில், பல்வேறு சமயம் சார்ந்த கருத்துக்களை ஆயும் மெய்யறிவுத்தேடல், சொற்போர் மூலம் மேற்கொள்ளப்பட்டு ஐம்பருக்களின் உள்ளுறையும் பொருளையும், வாழ்க்கையின் நோக்கத்தையும் உணர்ந்து, அவரவர் உணர்ந்த வழி, அவற்றைக் கருத்தும் நெறியுமாக்கினர். அனைத்து நெறிகளுமே அறவாழி என்னும் சக்கரத்தின் ஆரங்களே என மக்கள் கற்று உணரும் நிலை நிலவியது எனலாம்.

ஆரியரும் பல்கிய இனமும்

அறிவுக்குவை நிறைந்து, உணவாசை இன்றிக் கொல்லாமை அகற்றி அன்பு கனிந்து, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகிக் காட்டு விலங்குகளும், நச்சரவங்களும் புரிந்து கொண்ட அன்புடைய தொல்குடி மக்கள். இவர்களின் போர் வலிமை இல்லாமையைப் பயன்படுத்தி மலைகளை அழிக்கும் காட்டுத்தீயெனப் பரந்து போர் புரிந்து, வென்று மக்களைத் தம்முன் இணைத்துக் கொண்டு பல்கிப் பெருகிய வண்ணம் நீண்ட காலப் போர் நடந்தது. எனவே இவர்களை அஞ்சி வெள்ளிப் பனி மால் வரை, நீர் பெருகும் பேராறுகளும், காடுகளும், மலைகளும், பாலையுமாய் நால்திசையும் வலம் வந்த நாவலந் தீவிலிருந்து வந்த அவருள் ஒருவனே பாண்டியன் சடையன் பெருவழுதி, இவன் முரசுக் கருவிகள் அதிர, வெண்கலத் தேரில் வலம்வரச் செய்து வரவேற்ற அகத்தியர், காட்டகத்தே இருந்து வந்தமையால் அகத்தவன் என்ற பெயர் அகத்தியர் ஆனது என்பன போன்ற செய்திகள், ஆரியர் திராவிடரின் நீண்டகாலப் போரையும், ஆரியர்கள் பல்கிப் பெருகிய நிகழ்வையும் உணர்த்துகின்றன.

மன்னர்களும், உண்மைகளும்

ஆரியர்களின் தலைவனே இந்திரன் எனவும், இவனின் குடிநிரைகளே; இருநூறு தலைமுறை கழிந்துப் பல மன்னர்கள் குடிகளாகப் பரவி நாகர்களை வென்று அழித்தனர். இடவாகைக் குடிமன்னன் இராவணனின் போர் நெறிப்படி அவர்களின் அரசியைச் சிறையெடுத்தமையும், அதனாலாகிய போரும், தென்நில மக்களுக்கு சினமும், அருவருப்பும் தந்தன.

குறுநில மன்னர்கள் ஐவரும், நூற்றுவரும் தங்களுக்குள் போரிட்ட செயல் இம்மக்களை அதிரவைத்த ஒன்றாக இருந்தது.

ஆறு திசைகளை ஆண்டதால் ஆறுமுகன் என்ற குடிப்பெயர் பெற்று இந்திரன் மகள் தெய்வானையையும், மலைக்குறப்பெண் வள்ளியையும் மணந்த மன்னர் குலம்.

வடக்கேயும் கபாடபுரம் எனும் பெயரில் ஆயர் அரசு தோன்றியது. அதன் தலைவன் கார் வண்ணமுடைய கண்ணன். அவன் தமையன் வெண்மை நிறம் கொண்ட பலராமன். இவர்களுடைய கதைகள், வாய்மொழிச் செய்தியாகவும், வட வணிகர், தென்னக நாளங்காடிகளில் பாடியதைப் பாணர் தமிழில் பாட, அதைச் செவியுற்று அவன்பால் அன்பு கொண்டு இறையென வழிபட்டனர். நுதி நுதல் எனும் அங்கத்தின் பெயரால் ஆன அங்கநாட்டைத் துரியோதனன் கர்ணனுக்குக் கொடுத்தல்.

பாண்டிய சேர, சோழ அரசுகள் தோன்றியமை, அவ்வரசுகளின் மன்னர்கள் குறித்த செய்திகள் வரலாற்றியல் சார்ந்தும், கற்பனை சார்ந்தும் அமைந்து காப்பிய இலக்கணத் தகுதியை வலுப்படுத்தி யுள்ளன.

வேற்றுமக்களும் குறுமக்களும்

அறிவுக்குவை நிறைந்து உணவாசை இன்றிச் செல்லாமை அகற்றி அகம்கனிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு காட்டு விலங்குகளும், நச்சரவங்களும் புரிந்துகொண்ட அன்புடையராகிய தொல்குடிகளின் போர் வல்லமை இல்லாமையைத் துணைகொண்டு வடக்கிருந்து வந்த ஆரியர் அம்மக்களை வென்றனர். தொடர்ந்து குதிரைகள் மேலேறி வந்த அவர்களை அஞ்சி அம்மக்கள் மீண்டும் தென்திசை நோக்கி வந்தனர். வெள்ளிப்பனி மால் வரை, நீர் பெருகும் பேராறுகளும், காடுகளும், மலைகளும், பாலையுமாய் நால்திசை வலம் வந்த அவருள் ஒருவனே பாண்டியன் சடையன் பெருவழுதி முரசதிர வரவேற்று வெண்கலத் தேரில் வலம் வரச் செய்தவன்; காட்டகத்தே இருந்து வந்த அகத்தவனே அகத்தியர் ஆனான் என அகத்தியன் ஆரியன் என்ற கருத்து மறுக்கப்பட்டுள்ளது.

ஆற்றலும் அறிவும்

குமரி முனையில் எடுத்துச்சென்ற ஒரு கல் இலச்சிறையாக்கி குறியாகிப் பின் லிங்கமாகியது. இதனை வழிபட்ட தென்திசை மூதாதையர் வாழ்விடத்தில் உடலைக் குறுக்கி உணவை முப்பதில் ஒரு பங்காக மட்டுப்படுத்தி ஆயுளை மும்மடங்கு ஆக்கிக்கொள்ளும் கலை அறிந்தவர்கள் எனக் கூறுவது சித்தர்களின் ஆற்றலைக் குறிப்பதாகும். அகத்தியன் சித்தருள் முதல்வனாகவே குறிக்கப்படுகின்றான். ஒலிவடிவான வானம் குறிஞ்சியும், மணமிக்க காற்று முல்லையும், சுவை வடிவான மண் மருதமும், குளிர்நீர் நெய்தலும் ஒளிர் நெருப்பு பாலையும் எனப் பகுத்தனர். கிழமை,

பிறை, நாண்மீன், ஓகம், கரணம் என ஐந்து களமும், பன்னிரு ஓரைகளும், வகுத்து மொழியும், இசையும் கண்ட நீண்ட வரலாறு கொற்றவைக் கதையின் வித்துக்குரிய களமாக அமைந்துள்ளது.

கல்வியும், கலைகளும்

இயற்கையறிவு சான்ற மக்கள் கல்வியிலும் கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். வேறெந்த மொழியிலும் காணப்படாத வகையில் சங்கம் வைத்து மொழி ஆய்ந்து வளர்த்த சிறப்பு தமிழுக்கே உண்டு. அதங்கோட்டாசானும். பனை நிறைந்த சிற்றூர் பனம்பாரனாரும் வேளிர் நிலக்குடி பேணும் குமுதகன் முதலிய எண்ணற்றோர், அவையிலிருந்து தமிழ் ஆய்ந்து மொழி வளர்த்தனர். சோழநாடு உட்படப் பல தொலைவிலிருந்து தமிழ் தேடி மாணவர் பெருவாயற்புரம் வந்தனர்.

நற்றத்தன் கட்டிய மதுரை நகர் சாக்கிய நூலோரும், சீனத்துச் சிற்பிகளும் சேரநாட்டுப் பெருந்தச்சனும் எழுப்பிய மங்கல மடந்தை ஆலயம் போன்ற ஒரு சோற்றுப் பதமான சான்றுகள் கட்டடக் கலையையும் மாதவியின் நடனக்கலை, கோவலனின் இசைத்திறன் தொல்குடி மக்களின் ஓவியம், சிற்பம் போன்றவை பிற கலைகளையும் உணர்த்துகின்றன.

பெருஞ்சிறப்பும் பெருவாயில் புரமும்

அகத்தியனின் மெய்யறிவும் தவம் மூலம் சென்று தொட்ட, மாணவன் நற்றத்தன் வடிவமைத்த அப்பெரு நகரம் வடக்கு நோக்கி வாயில் திறந்து, தென்திசையைத் தடித்த பெரும் சுவர்களால் முற்றாக மூடிக் கொண்டிருந்தது. அந்நகரின் அனைத்து மக்களும் ஒரே சமயம் வெளியேறக் கூடியதாக அதன் முகவாயில் அமைக்கப்பட்டது. ஏழு வருடம் ஏழாயிரம் கற்றச்சர்கள் கூடிச் செதுக்கிய அந்தப் பெருநகரின் வாயிலின் அருகே எக்கணமும் பயணம் கொள்ள அணிமயமாகச் சகடங்கள் நின்றிருந்தன. கோட்டை மீது படகுகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாயில் காரணமாக அந்நகரம் பெருவாயிலூர் என்றழைக்கப் படுகிறது. திசை வணிகர்கள் கபாடபுரம் என்றனர். பிறகு வந்த வடபுலக் கவிஞர்கள் துவாரகை என்றனர்.

நகரங்களும் செழிப்பும்

நகர்நடுவே பாண்டியனின் வெண்சுதை மாடத்தில் மீன்கொடி துவண்டது. வலப்பக்கம் தொல்குடித் தெய்வமான மீன்கொடி அன்னையின் கருங்கல் கோயில் - இடப்பக்கம் மேரு வடிவில் முக்கண் முதல்வன் ஆலயம், வலப்பக்கம் கடல் வண்ண மேனி கொண்ட நெடுமாலின் ஆலயம், அரசவீதியில் ஆட்சிப் பூதத்தின் நிழலில் ஆட்சிக்குடி; பெருவணிக வீதியில் வணிகப் பெருங்குடிகள் வாழ்ந்தனர். கடைவீதிகளில் அகிலும், சந்தனமும், முத்தும் குவிந்து கிடந்தன. வணிகர் தெருவில் நெற்குவைகள் மீது பறவைகளின் சிறகுகள் படபடத்தன. இடப்பக்கம் விரிந்த வீதியில் மறவர்,

பெருநிலக் கிழார்கள் செதுக்கியெடுத்த கருங்கற் பாளங்கள் பதிக்கப்பட்ட சாலைகளில் ஓடும் சகடங்கள் பட்டுத் திரை நெளிய சிவிகைகள் மனிதத் தோள் மீது மிதந்து வடக்கே குளிர்ந்த நாடுகளிலிருந்து செந்நிற வணிகர்கள் முத்தும், வலம்புரிச் சங்கும் கொள்ளப் பொற்கட்டிகளுடன் வந்தனர்.

அணிகளும் உணவும்

படங்கும், அலுங்கும், பாடகமும், சூடகமும், விரிசிகையும், அரிமணியும், கைவாளையும், தோல் வளையும், தாள் செறியும், வாள் முறியும், தொய்யகமும், புல்லகமும் அணிந்த கண்ணகி; புழுக்கல் சோறும், பூவும் எள்ளும், விழுக்குடை உணவும், விளங்கும் புகையும், பொங்கலும், இனிப்பும், மிரியல் ஊனும், முரிப் புளிச்சாறும் என்பன. அக்கால அணிவகைகளையும், உணவு வகைகளையும் பற்றிக் கூறுபவற்றுள் சிலவாகும்.

நகரங்களும் தெருக்களும்

படைப்புரவிகள் கமுகப்பூவாலுதறி சரபிடரி சிதறி, பொய் நடையும், விரை நடையுமாகச் செல்ல, முகபாடமும், முத்துமணியும், அணிந்த பட்டத்து யானை புலிக்கொடி பட்டொளிர, பொதியெனப் பூவெனக் காலெடுத்து வைத்து உடற்கருமையில் இருள் நெளியப் பின்சென்றது. சங்கங்கள் கூவ, கொம்புகள் பிளிற, முழவுகள் உறும், சேங்கிழைகள் சிலம்ப, மங்கலப் பெருநடைக் கோலம் வண்ணக் குருவிச் சிறகுகள் எனப் படபடக்கும் தோரணங்களும், முகில் கீற்றுக்கள் என நிறையும் கொடிகளும் நிறைந்த நகரத் தெருக்கள் போன்றவை கொற்றவை படம்பிடித்துக் காட்டும் நகரங்கள், தெருக்களில் சிலவாகும்.

பல நாட்டினரும் பல வணிகமும்

பட்டினப் பாக்கப் பெருவாயில் மீது ஏற்றப்பட கவின் முரசம் விம்மியதிர்ந்த போது, வணிகர் மகளிரும் ஏவல் மகளிரும் சாயில்மயில்களென வண்ணப் புத்தாடை பொலிய வந்து குழுமினர், செம்பு நிறயவனரும், இரும்புநிறக் காப்பிரியரும் சொம்பு நிறச் சோனகரும், சங்கு நிறச் சீனரும், தங்கள் மொழிகளில் கூவியும், குழறியும், முழங்கியும், மூளியும் பேசியபடி வந்தடைந்தனர். மரக்கலங்களில் பாய்ந்தட்டுகளில் நெய் விட்ட பந்தங்கள் எரியத் தொடங்கிய போது கீழ்த்திசை எங்கும் செவ்விண் மீன்கள் ஆயிரம் முளைத்து அதிர்ந்தன.

கட்டடக் கலையும், கவின் சிறப்பும்

அந்நகரின் தெருக்களும், தெருக்களை இணைக்கும் சதுக்கங்களும் ஈயத்தை உருக்கி ஊற்றி இணைக்கப்பட்ட கருங்கற்களால் ஆன பெரும் மதில்களும், வெண்சுதை மாடங்கள் வானில் எழுந்த அரண்மனைகளும் அனைத்தும் கணித்தல் தேர்ந்த அவர் குடியின் கணியறிவர் கண்களிலும், சிற்பிகளின் கைகளிலும் அவர்களை அறியாமலேயே அந்நகரம் குடியிருந்தது.

அணிகளும் ஒப்பனையும்

பத்துவகை நறும்பட்டை, ஐவகை வாசனை, மான்மதச்சேறு, மலர்த்தாது, செம்பஞ்சு, மென்விரல் முகைகளில் நல்அணி, பாடகம், சதங்கை, பரியகம், மென்துகில் மீது செறியணி, மேகலை, தோள்வளை, ஒளிவிரி கண்டிகை, சித்திரச் சூடகம், செம்பொன் கைவளை, முத்தணிவால் வளை, பவளப் பல்வளை, செயல்திறன் ஓங்கிய செம்மணி மாலை, கைவினை சேர்த்த அரதன ஆரம், பதக்கம், கோவை, தோளுக்கு தோடும், தொங்கலும், தொய்யகமும் புல்லகமும், தலையணியும், சூழலணியும் என்பன அக்காலச் செல்வ மகளிரின் அணிகளையும், ஒப்பனையையும் காட்டுவனவாகும்.

இசையும் நடனமும்

"வச்சிர நன்னாட்டு மன்னன் கொடுத்த வரிமணிப் பந்தலும், மாகதன் அளித்த மணிமண்டபமும் அவந்தியரசன் அணித் திகழ்வாயிலும் சேர்த்து மங்காப் பெரும்புகழ்த் திருமாளவன் சமைத்த, ஓவிய மண்டபத்தின் முகமாற்றத்தில் கணிகையர் கூத்தும், பரணர் பாட்டும் நுகர, புகார் நகர மக்கள் குவிந்த அவையில் பண்யாழ்ப் புலவர் பாடிய செம்பாலை கேட்டு ..."

"நூபுரம் ஒலிக்க பாடகம் சலிக்க மேகலை குலுங்க - அரியகம் அலுங்க, அரங்கெனும் அரங்கில் செந்தழற் கொழுந்தென ஏறிச் செஞ்சுடர் விரித்துக் கருங்குழல் சுழற்றித் தேசிக்கூத்தும், மார்க்கக் கூத்தும் கொண்டு எழுந்தாடியது தழல்..."

மேற்கண்ட புனைந்துரைகள் பழந்தமிழகத்தின் கல்வி, கலை, வணிகச் சிறப்பைப் புலப்படுத்தும் சில சான்றுகள் ஆகும்.

2. சமய நோக்கு

தெய்வங்கள் இன்றி மனிதர் வாழ முடியும் ; மனிதர் இன்றித் தெய்வங்கள் வாழ இயலாது என்ற நீலியின் கூற்றுப்படி கடவுளர் மனிதரால் படைக்கப்பட்டவர் எனும் உண்மை உறுதியாகின்றது. தம்மைப் படைத்த மனிதர்களின் உளப்பாங்கின்படித் தெய்வங்களும் மனிதர்களையே நடிக்கின்றன. முழு முதற்பொருளே கடவுள் என்றும், பிற தெய்வங்கள் யாவும் செத்துப் பிறப்பவை என்று பாடும் குமரகுருபரர் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்து சமயமும் தோற்றமும்

இயற்கையைக் கடவுளாக வணங்கிய தொன்மைச் சமுதாயத்தில், பல்வேறு சூழல்களிலும், காரணங்களிலும் சிறு சிறு கடவுளர்கள் படைக்கப் பெற்றனர். புத்தம், சமணம் போன்ற சமயங்களின் வரவுக்குப் பின்னர்

நுழைந்து இச்சிறு கடவுளர் அனைத்தையும் தம் சமயத்துடன் இணைத்துத் தம்முடைய கடவுளர் கதைகளை இவற்றின் மீது புகுத்திய பின்பு, தாய்க்கடவுள் வழிபாடு உட்பட அனைத்தும் வைதீகச் சடங்குகளைப் புனைந்தன. காலப்போக்கில் புத்தம், சமணம், வைதீகம் ஆகிய இம்மூன்று சமயங்களும் இணைந்து, குப்தர் காலத்தில் இந்து சமயமாக உருவெடுத்தது என்பது வரலாறு கூறும் சமயத்தோற்றம்.

பெண்ணும் கடவுளும்

தொல்குடிச் சமுதாயம், எல்லாம் வல்லாம் வல்ல ஆற்றல் பெண்ணிடம் இருப்பதை உணர்ந்து அவளைக் கடவுள் என வழிபட்டது. அன்னையும், தமக்கையும், தங்கையும், மனைவியும் ஆகிய உறவுகளில் அவளைக் கண்டது. குமரிக்கண்ட மக்கள் உள்ளத்திலும் உணர்விலும் அழியாது பதிந்திருக்கும் கடற்பெருக்கின் அகப்புற விளைவுகளும் அவற்றின் காரணமுமே கடவுளின் தோற்றம் என்பதைக் கொற்றவை அழகுறக் கூறி விளக்குகின்றது.

அன்னை வழிபாடும் பல்வேறு பெயர்களும்

இனக்குழுச் சமுதாயத்திலும், அரசுடமைச் சமுதாயத்திலும் வீரச்செயல் புரிந்தவர்களுக்கு நடுகல் வழிபாடு செய்தது போன்று, சமுதாய நம்பிக்கைக்கு ஏற்றவாறு காதல், ஆற்றியிருத்தல், கற்பு முதலியவற்றின் அடிப்படையில் கடவுளாக்கி, அவர்களின் வஞ்சம் தீர்க்கும் அச்சத்திலிருந்து மீளும் வகையில், ஐவகை நிலந்தோறும், எண்ணற்ற பெண் கடவுளரைப் படைத்துக் கொண்டனர். இப்பெண் கடவுளர் காலப்போக்கில் வைதீகப் பெயர்களையும், சடங்குகளையும், சித்தாந்தங்களையும் பெற்றுப் பல்லாயிரம் பெண் கடவுளர் பல்கிப் பெருகினர்.

அன்னையரும், புனைவுகளும்

தொல் அன்னை எனப்படும் பேராச்சி, புன்னைக் காட்டு நீலி, பாலை அன்னை, கானிடைச்சி, துணங்கி, நப்பின்னை முடிப்புரை அன்னை, காரி யம்மன், வெண்ணி, முத்தாரம்மன். வன்னி எனக் கதைகள் அடிப்படையிலும், மாதி, போதி, விண்ணி, கௌமாரி, சாமுண்டி, நாராயணி, வாரகி, திரிமுகி, ரோகிணி, காளிகை, சண்டி, புலைவயல் கன்னி, குமாரி, இந்திராணி, காளி, துர்க்கை, ஈசானி, சிவை, சதி, நித்தியை, பகவதி, சத்தியை, கல்யாணி, எனச் சமயத் தத்துவங்கள் அடிப்படையிலும் கணக்கற்ற கடவுளர் காலத்துக்கும், இடத்துக்குமேற்ற புனைவுகளையும், பூசனைகளையும் பெற்றனர்.

கருத்தாக்கமும் கடவுளரும்

கருத்தாக்கங்களாகக் கொள்ளப்பட்ட, வானையும், மண்ணையும் அளந்து, வெறுமையில் ஊழிக் கூத்தாடும் மலையுறையும் முக்கண் முதல்வன், கடல் வண்ண நிறம் கொண்ட மால், எலியைச் சின்னமாகக் கொண்ட ஆனை

முகன், மயில் சின்னமும் வேலும் கொண்ட முருகன் போன்றோர், வைதீக சமயத் தொடர்புக்குப் பின்பு, அறிவுக்கெட்டாத கற்பனைக் கடவுளாக்கப் பட்டுக் கோயில் கொண்டனர். ஊர்கள்தோறும், இக்கோயில்கள் அமைந் துள்ள முறையைக் கூறும் கொற்றவை இவற்றுக்கான இன்றைய சடங்குகள், வழிபாடுகள், போன்றவற்றைக் கூறாமையால் இவை பிற்காலத்துத் தோன்றிய நடைமுறைகள் எனக் கொள்ளலாம். மேலும் மலைக்குடி மக்கள் தம் கானுறை கடவுளர் தவிர வேறு எந்தக் கடவுளரையும் விரும்பாதவர் எனும் குறிப்பும் காணப்படுகின்றது. யானைச் சின்னம் இனக்குழுக் கூட்டக்குறி என்றும் இதுவே பின்னாளில் பிள்ளையார் வடிபாடு ஆயிற்று என்றும் வரலாற்றில் ஒரு கருத்து உண்டு. இவ்வாறு பழங்குடியினரின் கடவுள் கருத்தாக்கங்களும் புதிய கற்பனைக் கடவுளரும் கலந்து ஒன்றாயின.

பெண்ணும் ஆற்றலும்

கற்பு எனும் கடிவாளம் இட்டாலும் பெண்ணின் எல்லையற்ற ஆற்றலை மறுக்க இயலாத வழியில் ‘இச்சா சக்தி’ , ‘ஞானசக்தி’, ‘கிரியை சக்தி’ என உருவகித்துக் காலத்தின் ஆடிப் பெருவெளியாய் அவள் கொண்ட ஆயிரம் கோடித் தோற்றங்களும் சூட்டப்படாத கோடானு கோடிப் பெயர்களும் கொண்ட அவளே அனைத்தும் ஆனவள். பெயரிலியைப் பெயர்களாலும் உருவிலியை உருவங்களாலும், முடிவிலியை எண்ணங்களாலும் ஏதிலியை அனைத்தாலும் வழிபடும் முறை தோன்றிக் கர்ணபூஷணி எனும் நிறையாக்கி, ஆக்கும் உரிமை கொண்டவளே சொல்லும் உரிமை பெற்றவள் எனக் கொற்றவையாக்கி நாடெங்கும் வழிபட்டனர்.

பழந்தமிழ் வழிபாடும், புதிய சமயங்களும்

வடபுல வணிகர் மூலம், அந்நாட்டு சமயக் கடவுளரை அறிந்த தமிழ் மக்கள் அவற்றையும் ஏற்றுக் கொண்டனர். வில்வராணி, கண்ணன் போன்ற கடவுளரையும், மறையவர் சடங்குகளையும் வரவேற்றனர். “வேள்விகள் மூலம் விளை பெருகுவதால் இப்போதெல்லாம் எங்கும் அவற்றைச் செய்கின்றோம். பார்ப்பனரையும் சாரணர்களையும், சாக்கையர்களையும் பேணுவதால் எங்கும் குலம் தழைக்கின்றது என வரும் கூற்று மேற்காண் கருத்தை அரண் செய்கின்றது.

பல சமயங்களும், கோயில்களும்

ஒற்றைக் கொம்பும் பற்றறு அப்பமும் கொண்ட ஆனைமுகத்து அழகன் கோயில், ஆறுமுக வேலன் நறுஞ்சுனைக் கோட்டம், விண்தொட்டு மண் மேவிய செவ்வண்ணக் கதிரென அண்ணாமலை தோன்றிய அரனறையும் ஆலயம், மணிவண்ணன் கோட்டம், சாரணர் பள்ளி, சாக்கியர் இல்லம், அகல் விசும்புளோனின் ஆயிரம் ஆலயங்கள் எனப் பல சமயக் கோவில்கள் இருந்தமையையும், மன்னன் அவை அனைத்தையும்

பேணினாள் என்பதையும் கொற்றவை மூலம் அறிகின்றோம்.

பாம்பும், பல்வேறு கடவுளரும்

நாகர் நாடு பற்றி விரிவாகப் பேசும் கொற்றவை, நாகப்பாம்பு, அனைத்துக் கடவுள்களிலும், ஏதேனும் ஓர் அணியாக இடம்பெறுவதைக் கூறுகின்றது. தலைக்கு மேல் படவிரி அரவாக அருக சமயக் கடவுளில் காணப்படுகின்றது. நாஞ்சில் நாடு எனும் வேள் நாடு பண்டைய நாகர் குலத்தவர் நாடு எனவும் படவிரி அரவை வணங்கிய அவர்கள் சமணநெறியைத் தழுவியபோது நாகர் சோலைகள் சமணப் பள்ளிகள் ஆயின என்றும் கூறப்படுகின்றது.

எச்சமும், தொடர்ச்சியும்

தாம் வாழும் பகுதியில் உள்ள மலைத் தெய்வங்களைத் தவிர வேறு கடவுளரை விரும்பாத பழந்தமிழரிடையே பல வகையான சமயங்கள் தோன்றித் தத்தமக்கு உரிய அறங்களை வலியுறுத்தின. எனினும் மற்றொரு புறம் தொல் குடித் தமிழரின் தாய்க்கடவுள் வழிபாடு. அனைத்துச் சமயத்தாரின் கருத்துக்கு இணங்கக் கதைகள் புனையப்பட்டுப் பல வடிவம் பெற்றது என்பதே உண்மை. இயேசுவின் அன்னை மரியாள் முதல் ஆப்பிரிக்கக் காடுகளின் குகைகளில் வரையப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அன்னையின் முகம் வரை அனைத்தும் அவளே என்பது உலகம் முழுவதும் தொடக்கத்தில் நிலவிய தாய்க்கடவுள் வழிபாட்டின் எச்சமும் தொடர்ச்சியுமாகும் என்பதில் ஐயமில்லை.

சாக்கியமும் செல்வாக்கும்

இளங்கோவும், கண்ணகியும், சாக்கியர்களால் வணங்கப்பட்டதாகக் கொற்றவை விளக்குவது, அச்சமயத்தின் செல்வாக்கு மிக உயர்ந்த நிலையில் இருந்தமைக்குச் சான்றாகும். மலை அடுக்குகளில் சாக்கிய நெறி பரவியது, செங்குன்ற மலையடுக்குகளில் அரங்கள் தோறும் அறியாப் பழங்குடி மக்கள் செதுக்கிய தொல்லிய பாவைச்சிலைகளுக்கு அருகே சாக்கிய முதல்வனின் சிலையுருக்கள் செதுக்கப்பட்டன. மெய்யறிவு தேடித் துவராடையும், கப்பரையும் ஏந்திய இரவர்கள் மலையேறி வந்து அக்குகைகளில் தங்கினர். அவர்கள் வணங்கும் அறிவமர் செல்வியாக மலையுச்சி வேங்கை மரத்தடியில் அவள் அமர்ந்திருந்தாள். முழு நிலா நாட்களில் வெண்மலர் கொண்டு அவளை வணங்கச் செல்லும் வழக்கம் உருவாயிற்று.

இளங்கோவும், ஐயப்பனும்

பந்தள மன்னன் கோதை மார்பன் நெடுங்காட்டில் கண்டெடுத்த, ஐயைக்கும் அப்பனுக்கும் மகனான ஐயப்பன், இமய வரம்பன், நெடுஞ்சேரலாதனின் வளர்ப்பு மகனாகிச் செங்குட்டுவனுக்கு இளவளாய்

வளர்ந்து, மக்கள் விரும்பியும் அரசு துறந்து வஞ்சியிலும் பந்தள மண்ணிலும் கால் வைக்கப் போவதில்லை என வஞ்சினம் உரைத்து வடபுலத்து நண்பர் வாவரிடம் சென்று, யவனரும், சோனகரும் இணைந்து கடற்பாடி அமைத்த வடகொல்லம், குணவாய் நல்லூரில் அறச்சோலையின்கண் தங்கி மெய்ந்நூல்கள் கற்று, வடவணிகர் மூலம் அருக மாவீரனின் அழியாப் பெருநெறி அறிந்து துறவியானான். வேங்கை மரத்தடியில் அலங்கையே புதர் நடுவே ஊழ்கத்தில் அமர்ந்து 41 நாட்கள் கழிந்த பின்னர், சபரணம் அடைந்த மலை சபரணமலையாகிய பின்பு சாக்கையர் பள்ளியில் செய்தி சென்று, கரிய உடையும், இருமுடிக் கட்டும் கொண்ட இரவரும், பிறரும் காடும் மேடும் கடந்து ஐயன் அடிதொழ வந்தனர்

இளைஞரும் சாக்கியமும்

இவ்வாறு சாக்கியம் பல நாடுகளையும், சமயங்களையும் விழுங்கியது. அன்று, தென்னாட்டில் அத்தனை அன்னையரும், மனைவியரும் அஞ்சியது அதைத்தான். இளைஞர்களை ஒவ்வொரு மூத்த விழியும் அஞ்சியும், துயர் உற்றும் நோக்கி வந்தது. நீரோடைகள் வளைந்தும் நெளிந்தும் தேடி நெடும்புனல் சேர்வது போல இளைஞர்கள் சாக்கிய முனியின் பாதையைத் தேர்வு செய்தார்கள் என வரும் தொடர்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. தென்திசை நோக்கிய ஆலமர் செல்வனின் அகமறி கோலத்தையே தானும் புனைந்து 'விழைவு' எனும் ஒரு சொல்லில் மெய்யறிந்து கூறிய அறவுரைகள் இளைய சமுதாயத்தை ஈர்த்தன. இத்தகைய புத்த சமயச் செல்வாக்கு கண்ணகியையும், இளங்கோவையும் தம் வயமாக்கியுள்ளதைக் கொற்றவை விரிவாகக் கூறியுள்ளது.

அறிவமர் செல்வியும் அரசமர் செல்வனும்

கற்புடைய பெண்டிர் அல்லது பத்தினித் தெய்வவழிபாடு சமண, புத்த சமயத்துக்கு உடன்பாடில்லாத ஒன்று. எனினும் கற்பின் அடிப்படையில் கண்ணகியைக் கடவுளாக்குவதைப் புத்த சமயம் எவ்வாறு ஏற்றுக் கொண்டது என்ற விளைவுக்கு விளக்கம் போல் அவர்களது சமயநெறிகளின் மூன்று படிகளின் அடிப்படையில் அறிவமர் செல்வியாகக் கொள்ளப்பட்டாள் எனப் புத்தசமயத்தவர் கூறுவதாகக் கொற்றவையில் இடம்பெறுகின்றது. சாக்கியப் பேரறிவனின் தூநெறி ஓங்கிய சேர மண்ணில் அறிவனையும், அமைப்பையும், அறத்தையும் ஏத்தி ஒழுகி அறிவமர்ந்தோரை அரசமர் செல்வன் எனப்படும் போதி சத்தர் எனப் பெயரிட்டுச் சுடர்மணி முடியும், கைகளில் இதழ்விரி தாமரையுமாக அரசமரத்தடியில் அவர்களைத் தென்பாண்டி நாட்டு எல்லை தொடங்கி சேரநாட்டு மண்ணின் மலைத்தொடர்களில் பல ஆலயங்களில் நிறுவியுள்ளனர் என வரும் கூற்றும் இதுபோன்ற பலவும் இக்கருத்துடன் தொடர்புடையவையே.

மறையவரும், சார்வாகர்களும்

உருத்திரன் காவல் காக்கும் பார்ப்பனச் சேரியின் தோற்றம் கொண்ட புறச்சேரியில் எழுதாக் கிளவி ஒலித்தலும் அவிப்புகையும் இல்லையே, என்ற வினாவுக்கு அவர்கள் பிரகற்பதியை ஆசிரியராக்க கொண்டு மறை நெறிகளைப் பழுதென உதறியவர்கள் என விளக்கம் தரப்படுகிறது. பார்ப்பனர்களின் பழைமைக் கோட்பாட்டையும், புரோகிதத் தன்மையையும், கருமக் கோட்பாட்டையும் மறுத்து அவை அனைத்தும் வெறும் ஏய்ப்பு என்று கருதியவர். மனிதப் பண்புகளுக்கு மெருகூட்டிச் சிந்தனை உரிமைகளைத் தடைப்படுத்தாமல், மனித இனத்தின் மீதும், இவ்வுலக வாழ்வின் மீதும் நம்பிக்கையும் அருளும் கொண்ட மனிதநலக் கோட்பாடுடையவர். சமயச் சார்பற்ற ஒரு சமூக, அரசியல் சூழலை உருவாக்கும் நோக்குடையவர் எனத் தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம் எனும் நூலின் கருத்துக்களே இவை. (க. நெடுஞ்செழியன், தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், பக் : 55-56).

மெய்யறிவும், தேடலும்

இங்ஙனம், பல சமயங்களும், தத்தம் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருக்க, மெய்யறிவுத் தேடல் தமழரின் தொன்மைசான்ற ஒன்று என்பதைப் பலஇடங்களில் கொற்றவை உறுதிப்படுத்தி உள்ளது. சித்தநெறிக் கருத்துக்கள் ஐம்பெரும் பருக்கள் மீதேற்றி மொழியப்பட்டுள்ளன. உணவைக் குறைத்து நீண்ட நாள் வாழ்தல், குளிகைகள் உண்ணல், உடலை விட்டு உயிர் பிரியும் முறைகள் என்பவை அவற்றுள் சில. மெய்ம்மையின் மூன்று படிகள் எனத் தம்மம். தர்மம் எனப்படும் அறவாழி, வானில் உயரும் நாட்சுடர், அதன் கீழான கோடான கோடி மன்னர்கள் உருட்டும் அரசாழிகள் அனைத்தும் அதன் பனித்துளிப் படிமங்கள் இம்மை இன்பங்கள் நிலையற்ற நீர்க்கோலம், மறுமையோ நீர் கூட இல்லாக் கானல்; முகிழ்த்தாமரை, ஓரிதழ்த் தாமரை, மலர் தாமரை, அறிவர் பற்றிய விளக்கங்கள் போன்று நூலெங்கும் நிறைந்துள்ளன. ஆசீவகம், சமணம், பௌத்தம், வைதீகம் முதலிய அனைத்துத் துறை சார்ந்த கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

அறிவரும் நெறிகளும்

சிலம்பாற்றின் மூன்று வாவிகளில் கோவலன் காணும் காட்சிகளும், பெறும் உணர்வுகளும் இத்தகைய மெய்யறிவு சான்றவை. எந்த விதையிலும் மரம் உறங்குவது போலவும், எந்தப் பொருளிலும் எரி உறைவது போலவும், மண்ணில் பிறக்கும் எந்த மனிதனுக்கும் அறிவன் ஆகும் வல்லமை உண்டு. அறிவே அறிவதெல்லாம் என்று அறிந்து, அறிவே அவராய் அமர்ந்திருப்பவரே அறிவர். செருக் களத்தில் படலும், செம்பேரறிவைத் தொடலும், செல்வம் ஈதென்று அறிந்து விடலும் ஆண்கள் முழுமை பெறும் நெறிகளாகும். (பெண்களுக்கு இந்நெறிகள் கூறப்படவில்லை). இத்தகைய விடுதல் குறித்து

எண்ணாதவர் குறைவு : விட்டவரோ அதைவிடக் குறைவு என்பன போன்ற கருத்து ஆழம் செறிந்த உண்மைகள் முல்லை நிலப் புல்வெளியாய் நூலெங்கும் பரவிக் கிடக்கின்றன.

ஒரு சொல்லும், ஓங்கி உயர்ந்த கருத்தும்

இவ்வாறு தொன்மைக்காலம் தொட்டு இன்றுவரையிலான அனைத்துச் சமயங்களும், மெய்ப்பொருள் உண்மைகளும் உணர்த்தும் அறநெறியை முற்றிலும் உணர்ந்த அறிவர் ஆவதற்கு ஆண் பெண் வேறுபாடில்லை என்ற ஓங்கி உயர்ந்த கருத்தை ‘அன்னை’ என்ற ஒரு சொல்லில் அடக்கிக் கூறுகிறது கொற்றவை எனலாம்.

பெண்களும் ‘ஓம்’ ஒலியும்

பெயராக, திசையாக, குறியாகத் தென்கடல் ஆழத்தில் வாழும் பேரன்னை, கன்னி காலமற்ற ஆழம் அவள். காலம் சுருண்டு அவள் காலடியில் ஒரு கரிய பாம்பெனத் துயில்கிறது. இறப்பவர் எல்லாம் அவளிடமே சென்று சேர்கிறார்கள். அவள் வடிவாக நாமறிந்தது மலைப்பாறை மீது பதிந்த ஒற்றைக் கால் தடம்; அதிலிருந்து பிறந்த நம் மொழியின் முதற்சொல் வெண்சங்குகளில் எழும் ஓம் எனும் கடலோசை. அவளை நாம் அவ்வொலியாக ‘ஓம்’ என்று வணங்குகிறோம். அத்தனை அன்னையரையும், கன்னியரையும் ‘ஒமொலி’ வடிவினர் என்றே நாம் அறிகிறோம் என்று அமையும் விளக்கம் மேற்கண்ட கருத்தை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம்.

வேட்டுவரும் கொற்றவையும்

தொல்குடி மக்களின் பண்பாட்டை விளக்கும் கொற்றவை வழிபாடு அரசர்கள் வாழ்வோடு கலந்ததும், வேளாண்மை வழிபாட்டுடன் இணைந்ததுமாகிய ஒன்று. மனித நாகரிகத்தின் தொடக்க நிலையான வேட்டுவ நிலையில் சமூகத்தின் தலைமை பெண்ணிடம் இருந்தமையைக் கொற்றவை வழிபாடு உணர்த்தும். வேடுவர்களின் வாழ்க்கைக் கோட்பாடாகவே சிலப்பதிகார வேட்டுவ வரியில் விரிவாக இடம்பெற்றுள்ளது. கொற்றவையாக உருவாக்கப்படும் பெண் பருவம் எய்தாத இளம்பெண், அல்லது குழவிப் பருவத்தினராக இருக்கவேண்டும் என்பதற்கிணங்கக் கண்ணகி, ‘கன்னி’, 'கன்னி' என்று இயம்பப்படுகிறாள் எனலாம். கன்னி, முதிராச் சிறுமி எனும் சொற்கள் தரும் பொருள் அளவில் கண்ணகி இப்பெயர்கள் பெறுவது ஆய்வுக்குரியது.

கொற்றவையும் சக்தி வழிபாடும்

வேட்டுவர்களின் கடவுளான கொற்றவை, அரசுகள் தோன்றியபின்பு அவர்கட்குரிய வெற்றிக் கடவுளாக்கப்பட்டாள். “சில

போர்தான் தீபம் வைத்துப் புகழாகப் பூசை செய்வர் பெண்ணை வைத்தும்" என்று சட்டை முனி சித்தர் பாடும் பெண் கடவுள் வழிபாடே சக்தி வழிபாடாகியது. பெண்ணுரிமைச் சமுதாயத்துக்குரியது : கொற்றவை வழிபாடும் சக்தி வழிபாட்டுடன் மயங்கி நிற்கின்றது. சாங்கியக் கோட்பாடு கூட அக்கொற்றவையின் ஆற்றல்களைப் பற்றிய கருத்துக்களை அடியொற்றி எழுந்த ஓர் இயற்கைக் கோட்பாடே! குணா, தமிழர் மெய்யியல், பக். (59-60).

வாழ்வியல் நெறியும், சமயக்கலப்பும்

மேற்குறித்த கருத்துக்களை ஒப்புநோக்க, சக்தி வழிபாடாகிய தொன்மைக்காலப் பெண் கடவுள் வழிபாட்டைக் கண்ணகியுடன் பொருத்துவதுடன், சமணம், சாக்கியம், வைதீகச் சமயங்களுடன் பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகளும், வழிபாட்டு முறைகளும் கலந்து நிற்பதைக் கொற்றவை படம்பிடிக்கின்றது எனக் கொள்ளலாம்.

நூற்கருத்தும், சான்றும் :

பெருநூல்கள் என்றுமே ஏமாற்றுபவை, அவற்றின் சொல்லாயிரங்களில் மெய்ம்மை ஒரே ஒரு சொல்லில்தான் உள்ளது. மீதி அத்தனைச் சொற்களும் அந்த மெய்ம்மையை மறைப்பதற்கு உரியவையே. அச்சொல்லைக் கண்டறியாதவரை சொற்களின் வெளியில் திசையிழந்து அழிய வேண்டும். மீண்டும் மீண்டும் சொல்லப்படும் எச்சொல்லுமே மாபெரும் வினாவாகி விடும் என்பது மொழியின் நெறி" என நூலில் வரும் கருத்துக்கள் நூலுக்கே பொருந்தும் எனக் கூறின் மிகையில்லை. (211-212).

3. ஒப்புமை நோக்கு

சிலப்பதிகாரத்தின் பதிகத்தை வழிமொழிந்து அதன் நூற்கட்டுரைக்கு இயைய அமைந்துள்ள மறுபடைப்பாம் கொற்றவை, முதல் நூலின் செய்திகளை ஒட்டியும், மாற்றியும், மறுத்தும், சுருக்கியும், விரித்தும், புதியன பல படைத்தும், வடிவிலும், நோக்கிலும் வேறுபட்டுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இச்சிறப்புக்கான கூறுகள் மிகச் சுருக்கமாக இங்கு இடம் பெறுகின்றன.

இளங்கோவும், சபரணமலை வழிபாடும்

சேரன் செங்குட்டுவனின் இளவல் இளங்கோவின் வரலாறு பற்றி வரலாற்றியல் சான்றுகள் எவையும் கிடைக்காத நிலையில், அது கற்பனை அல்லது அப்பெயரில் வேறு யாரேனும் ஒருவர் என்ற கருத்து இவண் நினைவு கூரத்தக்கது. சிலப்பதிகாரப் பதிகத்திலும், வரந்தரு காதையிலும் இடம் பெற்றுள்ள இளங்கோ, கொற்றவையில் ஐயப்பன் வரலாற்றுடன்

இணைக்கப்பட்டுள்ளார். "நான் என்னைச் சமணனாகவோ, சாக்கியனாகவோ, சைவனாகவோ, விண்ணவத்தானாகவோ எண்ணவில்லை. நான் பசித்த வயிறுடன் அன்னை மடித் தேடிச் செல்லும் மகவு மட்டுமே" எனக் கூறி அன்னையின் அருகிருந்து யாத்து, கமுகுப் பானையில் சுருட்டி வைத்திருந்த ஓலைச் சுவடிக்கட்டைத் தன்னைக் காண வந்த சங்க கீர்த்தியிடம் அளித்து மேழ மாதம் முழுநிலவு நாளில் வஞ்சி சென்று அங்கு அரங்கேற்றுமாறு கூறியபின் 41 நாட்கள் ஊழ்கநிலையிலிருந்து சபரணம் அடைந்த மலையே சபரணமலை; மலைக்குடிக் கிளைஞர் வழிபட்ட அம்மையே பின்னர், இருமுடிக்கட்டும், கரிய உடையும் கொண்ட இரவரும், பிறரும், காடும், மேடும் கடந்து வந்து தொழும் ஐயன். இவ்வாறு முன்னர் சாக்கையரின் வழிபாடாக இருந்து இன்று ஐயப்பன் வழிபாடாயிற்று. இதற்கிணங்க இளங்கோவின் பிறப்பும், வளர்ப்பும், வீரச் செயலும், துறவும் அமைந்துள்ளன.

வடிவில்லாத வழித்துணையும், வடிவமைந்த வஞ்சியும்

கதையுறுப்பினருக்கும், கதைபடிப்போருக்கும் கவுந்தியடிகளாகவும், காப்பியத்திற்குப் பன்னைக் காட்டு நீலியாகவும் அறியப்படும் நீலி, கொற்றவையின் புதிய படைப்பு 'பீடு அன்று" எனப் பெருந்தோழியிடம் மறுத்து சிலம்புள கொண்ம், எனச் சில சொற்களே உரைத்துப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர் எனப்பேசி 'அடிகளே அருளுக' என அமுது உண்ண உரைத்து, மதுரை மூதூர் யாங்குளது எனப் புகாரின் எல்லையிலேயே மழலையாய் வினவிய இளங்கோவின் கண்ணகியைத் தலைமைத் தகுதி பெறும் வண்ணம். பல்துறை அறிவும், திறமும் பெற்றவளாக்கிப் பல வரலாறுகளை அறிந்தவளாக்கி, மறைத்தாலும் மறைக்க முடியாத மன உணர்வுகளை மறைமுகமாகப் புலப்படுத்தித் தன்னை வெளிக்காட்டும் சொல்லாற்றலுடையவளாய், அகத்திலும் , புறத்திலும் வெகு தொலைவு கடந்து வரச் செய்து பண்படுத்தப்பட்டுள்ளாள். புகாரில் ஆந்தையை அஞ்சி அன்பன் தோளில் ஒளிந்தவள், மதுரையில் அறம் உரைத்து அழலூட்டிய அணங்காகி, வஞ்சியில் அறிவமர் செல்வியாய் மாறிய மாற்றம் நீலியின் துணையாய் பெறப்பட்டது எனக் கொற்றவை கதை பின்னியுள்ளது.

கதைப் பொருளும், நூலறமும்

சிலம்பு, கொற்றவை இரண்டனுக்கும் கண்ணகி கதையே பொருள். அரசியல் அறம், உரைசால் பத்தினியர், முந்துறுத்து ஊட்டும் ஊழ்வினையை வலியுறுத்துகின்றது. சிலம்பு, இம்மூன்றின் அடிப்படையில் கொற்றவையின் தோற்றமே கண்ணகி எனும் உண்மையை மீண்டும், மீண்டும், மீண்டும், கூறிச் செல்கிறது புதியகாப்பியம். யானையின் வாயுள் புகுந்து மறையோனைக் காத்த அறத்தின் பயனாய் செயலால், விண்ணக வாழ்வு பெற்ற கோவலனுடன், கண்ணகி வானூர்தி ஏறி, மண்ணில் இணையாத

வாழ்வை விண்ணில் பெறுகின்றாள். கொற்றவையில், ஊழ்க நிலையிலிருந்து உடல் சுருங்கி, குருதி உலர்ந்து எலும்புப் பூம்பாவையாய் இறைநிலை எய்துகின்றாள்.

பெருந்தோழி தேவந்தி, சிலம்பில், கண்ணகி கோயிலில் வழிபாடு செய்ய கொற்றவையில், கண்ணகி அமர்ந்த குகைக் கோயிலுக்குக் காவலாய் நின்று உயிர்துறந்து கடவுளாகின்றாள். சிலை வடிவில் உயிர் பெற்று உரையாடும் கண்ணகியை இலங்கை வேந்தன் கயவாகு, தன்னாட்டுக்கு அழைக்க, கொற்றவையில், சாக்கியரும், அருகரும், பிறரும் போற்றும் அறிவமர் செல்வியாய். அன்னையாகி எங்கும் நிறைந்த ஏற்றம் பெறுகின்றாள். சாத்தன் சொல்லக் கேட்டுக் கதையாக்கிக் காப்பியம் யாத்த இளங்கோ கொற்றவையில் கண்ணகி கால் நடந்த இடம் எங்கும் தானும் சென்று கண்டு கண்டவரிடம் உசாவி, அவளின் கோயிலில் அவளருள் ஒளி பெற்று, இரவராய், எல்லாம் துறந்து, தனிமையில் அமர்ந்து சுவடியில் பதித்து "உரையிடையிட்ட இப்பாட்டுடைச் செய்யுளின் புரைதீர் நெறிச் சொற்கள் அழியாப் பெருநெறி முத்தமிழ் உலகத்தை இனி எந்நாளும் வழி நடத்தும்" படியான தன் நூலை போதி சத்தரின் சீடன் மூலம் சேர மன்னனிடம் சேர்ப்பிக்கின்றார்.

கதைக்களமும், களநிகழ்வுகளும்

கொற்றவை, தன் கதை நோக்கத்தை மையப்படுத்தி வலுவாக்கும் வகையில், வரலாற்றுத் தொடக்கக் காலம் முதல் சிலப்பதிகாரக் காப்பியத் தோற்றக் காலத்துக்குப் பின், டச்சுக்காரர் படையெடுப்பு வரையிலான நீண்ட காலப் பின்னணியைக் கொண்டுள்ளது. ஆகையால் தொல் குடிகள் வாழ்வில் அன்னை வழிபாடு இடம் பெற்ற சூழலும், அது காலந்தோறும் வளர்ந்து, வளம் கண்ட வரலாறும் தக்க சான்றுகளுடன் புலனாக்கப்பட்டுள்ளது. சிலம்பு முன்னர் நடந்த கதையை 'அறிந்த காலப் பின்னணியை' எல்லையாகக் கொண்டுள்ளது.

கோவலன் கொலையும், முன்பின் நிகழ்வுகளும்

கொலைக்களக்காதை, வழக்குரை காதைக்கு முன்னரும், பின்னரும் மதுரையின் நிகழ்வுகளைக் 'காப்பியம் கூறியது' எனும் 'எரியுள்' அடங்கும் பிரிவு மிக விரிவாக இருபது காதைகளில் விரித்து உரைக்கின்றது. அரசவையும், அரசவை, அகப்புற நிகழ்வுகளும், அறங்கூறு அவையமும், ஊர் மன்றும், பழையன் சூழ்ச்சியும், மறவர் குடியின் மறச் செயல்களும் அவற்றை எதிர்க்கும் எண்குடி மக்களின் இயலாமையும், வஞ்சினமும். பொற்கொல்லரின் கரவியல்பும், மன்னனின் கலை நாட்டமும், பாண்டி நாட்டின் பசியும், வறுமையும், மதுரையின் பற்றாக்குறையும், அழல் சூழ்ந்த காட்சியும் பெண்கள் அனைவரும் வயது வேறுபாடற்று அணங்குகள் கூட்டமாய்க் கண்ணகியைப் பின் தொடர்ந்ததும், மதுராபதித் தெய்வம் உட்படப் புதிய

மதுரை உருவாக்கமும், கணிகையர், பொற்கொல்லரின் இல்லங்கள் சூறையாடப்பட்டதுமான நிகழ்ச்சிகள், ஒலியும், ஒளியும் கொண்ட குறுந்தகடாகக் காட்சியும், உணர்ச்சியும் தந்து, காப்பிய இலக்கணங்களுள் ஒன்றாகிய நாடக இயல்பின் உச்சக்கட்டத்தையும், வீழ்ச்சியையும் நேரில் காணும் உணர்வைத் தருகின்றது.

வானுலகமும், தாருகனும்

கொலைக்களத்தில் வறியனாய்த் தனியனாய்ப் பொன் நறுமேனி புழுதியில் கிடக்க, கண்ணகியைக் கண்டு, 'இரு' எனச் சொல்லி விண்ணவர் சூழ வானுலகம் சென்று, பதினான்காம் நாள் மீண்டும் மண்ணுலகம் வந்து விண்ணூர்தியில் கண்ணகியை அழைத்துச் சென்ற கருணை மறவனும், இல்லோர் செம்மலும், திருவருட் செல்வனுமாகிய கோவலன் கொற்றவையில் தலைமைப் பொற்கொல்லன் வீட்டு முகப்பில் செம்புழுதியில் குருதிப் பிண்டமெனப் பிளந்த தலையுடன் கொற்றவை முன் தாருகன் எனக் கண்ணீர் சிந்தும் கண்ணகியின் காலடியில் கிடக்கின்றான்.

முன்வினையும் மறவினையும்

மதுரை எரியில் மூழ்கி அழிவதற்கு முன்னைய ஊழ்வினை ஒன்றின் ஏவலே காரணம் என மதுராபதித் தெய்வம் சிலம்பில் உரைக்கக் கொற்றவை சிற்றரசுகளாகிய குடித்தலைவர்கள் இழந்த தம் அரசுரிமைய மீட்கும் முனைப்பின் காரணமான உள்நாட்டுக் கலகம், தீப்பொறியாக, அறம் மறந்து மறம் தழைத்தமைக்குச் சான்றான கோவலன் கொலை சூறைக்காற்றாகக் கண்ணகியின் சீற்றமாய்க் கொற்றவையின் கொல்லும் தன்மையாய் அழல் ஆலவாயை அடையாளமிழந்த கரியாக்கியது என விரித்துள்ளது.

> மன்னன் நெடுங்காலமாக அறச்சாலைக்கும், குடிச்
> சாலைக்கும் வருவது இல்லை. அமைச்சர்களுக்கோ
> தேவியாரே ஆணையிடுகின்றார் உரிமை மகளிருடன்
> கூடிக் களி கொண்டாடவே மன்னருக்கு நேரமில்லை
> அமைச்சர்கள் தேவிக்கு அடங்கியவர். தேவியோ.
> அணி நகைகளுக்கும், ஆடைகளுக்கும் மகிழ்பவர் ஆதலால்
> பெரு வணிகரும், முதல் நிலக்கிழார்களும் ஆடகப்
> பொன்னும் அரிய முத்துக்களும் கொடுத்துத் தேவியின்
> நெஞ்சு கவர அவர்கள் எங்கள் விளை நிலங்களின்
> அனைத்தையும் இறை கொள, மூத்தோர் வகுத்த திறைகோள்
> நெறிகள் அனைத்தும் பறந்து விட்டன
> விளைவிற்றால் கூறையும் (ஆடை) கருவிகளும் கொள்ள
> முடியாது என விளை நிலம் விற்றும், அவற்றைக் கொள்வதும்......

மேற்கண்ட மதுரை மக்களின் கண்ணீர்ச் சொற்கள், கண்ணகியின் கண்ணீரோடு கலந்து, மதுரையின் அழிவுக்குக் காரணமாகியுள்ளன.

கொற்றவையும் மணிமேகலையும்

வீழ்ச்சியுற்ற தாய்வழிச் சமுதாயத்தின் பெண்ணின் மேன்மையை அடக்கிய கற்பு திருமணம், என்ற தளைகளிலிருந்து விடுபட்ட முதற்பெண்ணாக, காவியத் தலைவியாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுவள் மணிமேகலை, கடவுளின் பெயரால் தம் இனத்துக்கு விதிக்கப்பட்ட மரபையும் மீறியவள் சிலம்பு, இவளைப் பெயர் சூட்டுவிழாவிலும், துறவறம் பூண்ட செய்தியாலும் படர்க்கைக் கூற்றாகக் கூறியுள்ளதை அறிவோம். இளவரசன் உதயகுமாரன் மீது ஊசலாட்டம் கொண்டவளாகவே மணிமேகலையிலும், மறுபடைப்பாகிய இன்குலாபின் மணிமேகலை நாடகத்திலும் காட்டப்படுகின்றாள்.

மணிமேகலையும் இளங்கோவும்

கொற்றவை, உதயகுமாரனை விடுத்துத் துறவி என்ற தகுதிக்கேற்ற வண்ணம் பல நாட்டு மெய்யறிஞர் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவளாகவும் தைபீரியரைக் நல்லாசிரியராகக் கொண்டு அறச்சாலை நடத்தியவளாகவும் இடம் பெற்றுள்ளாள். இளங்கோ, மணிமேகலையை நேரில் கண்டு உரையாடியதாகவும் கதை பின்னப்பட்டுள்ளது (சோக்ரதர், பிலாத்தர், அரிசித்தர் போன்ற மெய்யறிவாளர்களைத் தான் கற்று உணர்ந்ததாக மணிமேகலை இளங்கோவிடம் கூறுகின்றாள்.

சோற்றுடை நாயகியும், பிணிதீர்த்தாளும்

காப்பிரி நாட்டு மக்களும் வணங்கும் நல்லறிவு கொண்டு, தன் ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க யவனருக்கு எனச் சில நெறி களை உருவாக்கினாள்; கடல் தாண்டி வரும் கலங்கள், தம் நாட்டுக் கடற்கரையில் அணைவதை இதுவரை மறுத்தவர்கள், ஏற்றுக்கொள்ளுமாறு செய்தாள்; கலங்கள் மூதன்னைக்குத் திறை செலுத்துமாறு பணித்தாள். கலம்கவர் தொழிலை விட இது அதிக வருவாய் உடையது என அவர்கள் அறிந்தனர். சோனகர்க் கதைகளில், இறங்காது சென்றதால் யவனருக்குத் தொலைவு குறைந்து, திறையும் மிச்சமாயிற்று; என் ஆசிரியர் கடனீடாக எனக்கும் ஒரு திறை கொடுக்க ஏற்றார். இன்று கொற்கையிலும் வஞ்சியிலும், நாகையிலும் அணையும் யவனக் கலங்கள் அனைத்தும் அங்குள்ள புத்த பீடிகைகளில் திறை செலுத்துகின்றன. ஆகவே அறிவனின் களஞ்சியம் குறைவதே இல்லை. அப்பெரும்பொருளால் தென்னாடு மூன்றிலும் நிலம் வறண்ட ஊர்தோறும் உணவிட்டுப் பசிப்பிணி போக்குகின்றோம். இங்ஙனம் மணிமேகலை சோற்றுடை யன்னையாகவும், பிணிதீர்த்தாளாகவும் விளங் குவதாகக் கூறுவது அறிவார்ந்த, அழகான கற்பனையாகும்.

வஞ்சினமாலைப் பத்தினியரும் புறநானூற்றுப் புலவரும்

கான விரிந்த காவிரி, கடல் எனப் பொங்கும் புகாரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் பத்தினியரான கல்லுடலும், குரங்கு முகமும், சிறுமகவு மணமும், எனப் பேதைமை சான்ற பெண்களுக்கு மாற்றாகப் பெண்பாற் புலவர்களாகிய ஆதிமந்தியும், பேய்மகள் இளவெய்யினியும், நக்கண்ணையும், மாற்புத்தியும் ஐவகை வெளியிலும் மைவிழி செல்ல வழி இல்லாத கற்பரசியாராகக் காட்டப்பட்டுள்ளனர்.

கனவுகளும், காட்சிகளும்

உயரிய இலக்கியப் படைப்புகளில் கதை மாந்தர்கள் கனவு காணும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுக் கதையின் ஏதேனும் ஒரு சிக்கலைத் தீர்க்கும் வகையிலோ, பின்னர் நடக்கப் போவதைக் குறிப்பாக உணர்த்தும் காவியத்துக்குரிய பண்பிலோ அமைந்துள்ளன. சிந்தாமணியில் விசயையும், கம்பராமாயணத்தில் திரிசடையும், ஷேக்ஸபியர் நாடகத்தில் கல்ஃபோர்னியா காணும் கனவுகள் சிறப்புத்தன்மை கொண்டவை. கண்ணகி, கோவலன், பாண்டிமா தேவியுடன் கொற்றவையில் இளங்கோவின் கனவும் இடம்பெற்று உள்ளது. ஆயினும் இக்கனவுகள், நூலாசிரியர் கூற விரும்பும் பல்துறைக் கருத்துக்களின் வெளிப்பாடாகவே பெரும்பாலும் உள்ளன. இக்கனவுகள் கதையின் நிகழ்ச்சிகளை இணைப்பதுடன், ஆசிரியரின் சொற்பொருட் சிறப்பையும் ஆழத்தையும் எடுத்துக்காட்டும் திறமுடையனவாக அமைந்துள்ளன.

அன்புத் தோழியும் பெருந்தோழியும்

சோம குண்டம், சூரிய குண்டத்தில் மூழ்கிப் பிரிந்த கணவனை மீண்டும் பெறுமாறு தேவந்தி கண்ணகியிடம் கூற! 'பீடன்று' எனச் சிலம்பில் கண்ணகி மறுக்கின்றாள். கொற்றவை தேவந்தி, மெய்யெங்கும் நீறு பூசி, சுருள் சடை சேர்த்துக்கட்டிக் கதையில் கழியும், தோளில் கிழியும் ஏந்தித் துறந்தோர்க்கோலத்தில் துறக்கப்பட்டார் துறக்கப்பட்டோரைக் கண்கையிலேயே பேச்சு எழமுடியும் எனப் பாட்டும் பொருளும் சொல்லி ஆற்றியிருப்பவருக்கு அருந்துணையாவதையே தொழிலாகக் கொண்டவள். காவிரிக்கரைச் சிற்றூர்களில் தோன்றி நகரங்களில் அலைந்து சொல் அளித்து நெல் கொண்டு வாழும் பாணர் குலத்தவள்; இளமை நலம் தொலைத்து முதுமையைச் செவ்வேளிடம் பேறெனப்பெற்று நால்வகை நிலமும், நகரமும், ஊரும் திரிந்து கவிபாடிய ஔவையின் குலக் கண்ணியாய்க் கண்ணகியிடம், பாணினிப் பெண்கள் தங்கள் நெறியைப் பேண கதைகளுக்குள் நுழைய வேண்டி மூப்பில்லா இளமையை முத்தமிழில் முடிப்பவளாக வலம் வந்து கண்ணகி ஊழ்க நிலையிலிருந்த குகைவாயிலில் காவலிருந்து காரையிலையும் கைப்பங்காய்களும் உண்டு உயிர் நீத்து அறச்

செல்வியின் துணையாகச் சடைமுடியும் கோலும் கொண்டு நின்ற பெருந்தோழி.

கொற்றவையும், இன்மைகளும்

இன்றளவும், நாடக அரங்க அமைப்புக்குப் பொருந்தும் வகையிலான இலக்கணங்கள் கூறும். அரங்கேற்று காதைச் செய்திகள், கதை விசயரின் முடித்தலை நெறித்த மாதவியின் கானற்பாணி, காதலனுக்கும், பெற்றோருக்கும் பொருந்தும் வகையிலான மாதவியின் மடல்கள், சேரனின் வடநாட்டுப் படையெடுப்பு, கதை விசயரின் கல் சுமப்பு, நடுகல் காட்சி, கால்கோள், நீர்ப்படை, வாழ்த்து, வரம்தரல் போன்றவை இல்லாமலும் மாற்றம் பெற்றும் உள்ளன. தலைச்செங்கானம் மறையோன் கூறும் கோவலனின் பண்புகள், பாசண்ட சாத்தனின் கமண்டல் நீர், அரட்டன் சேட்டி, சேடக் குடும்பி, மாடலன் உரை, இளங்கோ அடிகள் அறவுரை போன்றவற்றையும் கொற்றவை தவிர்த்துள்ளது.

மன்னனும் மலைமக்களும்

மலைக்குடி மக்கள், தம் மலைப்பகுதியில் உறைந்து கடவுளான கண்ணகிக்குத் தம் மலைக் கடவுள் தவிர வேறு கடவுளரை விரும்பாத நடைமுறையையும் மீறிக் கோயில் எடுக்க, இருக்கும் விழாவுக்குச் சேரனை அழைக்க வருகின்றனர். கண்ணகி, தேவந்தியின் கதையைக் கூறுகின்றனர். அவர்களைப் பற்றிய செய்திகளைச் சாத்தன் மன்னனுக்குக் கூறுவதாகவும், செங்குட்டுவனின் ஆணைப்படி, கண்ணகியின் சிலை வடிவத் தேர்வுக்கு ஊர்தோறும் சென்ற சாத்தன், இளங்கோவைச் சந்திப்பதாகவும் கொற்றவை கதை கூறுகின்றது.

கண்ணகி வழிபாடு கொற்றவை வழிபாடு

ஊழ்க நிலையிலிருந்து உயிர் துறந்த கண்ணகியை, அம்மலை வாழ் மக்களோடு, சாக்கியரும் கடவுளாக வணங்கினர். பந்தள மன்னனின் வளர்ப்பு மகனே, செங்குட்டுவனின் இளவலாகித் துறவு பூண்டு இளங்கோவாகிப் பாண்டியனையும், மணிமேகலையையம், கண்டு உரையாடி, சமண நெறி உட்பட அறுவகை நெறியும், மும்முறையும், ஐவகையொழுக்கம் கற்றுணர்ந்து, தன்னை எச்சமயமும் சாராத அன்னை மடி தேடிச்செல்லும் மகவாக உணர்ந்து, சிலப்பதிகாரம் இயற்றிய பின்னர் ஊழ்க நிலையிலிருந்து உயிர்பிரிய அவரையும், ஐயப்பனாகக் கருதிய சாக்கிய அறிவர்கள் வணங்கி வழிபடுவதாகச் சிலம்பிலிருந்து முற்றும் மாறுபட்டுக் கண்ணகி வழிபாடு கொற்றவை வழிபாட்டின் ஒரு கூறே என்ற நோக்கில் கதையை நடத்திச் செல்கின்றது.

காப்பியங்களும், சமுதாயமும்

காப்பியங்கள், வரலாற்றுப் புதினங்கள் போன்றவை கற்பனையே. எனினும் தாம் எழுந்த காலச் சமுதாயத்தின் படப்பிடிப்பு எனும் சமுதாயச் சித்தரிப்புக்கள். எனவே, இவற்றிலான மாற்றங்கள் இலக்கியத்தின் இவ்வியல்பு மாற்றத்தைத் தோற்றுவிக்கவே செய்யும்.. தம் காலத்துக்கு முன் நடந்த ஒரு கதையை இளங்கோ, தன் காலப் படப்பிடிப்பாக வரைந்துள்ளார். கொற்றவையில் காணப்படும் மாற்றம் இதற்கு ஊறு விளைவிக்கலாம். கால மயக்கத்துக்கு இடம் தரும் வகையில் உள்ளது.

கதையும், மிகையும்

கண்ணகி கதையின் விரிவாக்கம் என்ற வகையில் சமயப் பொதுநோக்கு இடம் பெறினும் சமயத்தின் சாயலே இல்லாத கண்ணகி சமயச் சார்புடையவளாக்கப்பட்டுள்ளாள். தாய்வழிச் சமுதாயப் பெண்ணின் மேன்மை, பெண் கடவுள் வழிபாடு, தந்திர வழிபாடு உட்படப் பல மாற்றங்களைச் சமய அடிப்படையில் பெற்று, வழிபாட்டின் நோக்கமே முற்றிலும் தலைகீழாகி விட்ட சூழலில் அதனைக் கண்ணகியின் மேல் ஏற்றி மேய்யியல் சித்தவியல், சித்தாந்த இயல் போன்ற பல்துறைக் கருத்துக்களைக் கொண்டு கூட்டியிருப்பது மிகையாகவே உள்ளது. சாஸ்தா வழிபாடு தொல்தமிழருடையது (அம்மையப்பன்) என்ற கருத்தின் சாக்கிய இளங்கோ அய்யப்பன் ஆக்கப்பட்டுள்ளார். அய்யப்பன் கடவுள் அல்ல, மனிதரால் படைக்கப்பட்ட கற்பனை என்ற வகையில் மேலும் ஒரு கற்பனை இது.

பிற கதை மாந்தரும், மாற்றமும்

சாத்தான், ஒத்தெல்லோ, ஹாம்லேட், சீசர், கிளியோபட்ரா, கல்ஃபோர்னியா போன்ற கதை மாந்தர்களில் இத்தகைய மாற்றம் செய்யஇயலுமா ? அறம் உரைத்த கண்ணகி நோக்கில், மக்கள் செல்வாக்குப் பெற்றுள்ளதாகக் கூறப்படும், எம்.ஜி.ஆர் போன்றோரின் அரசியல் அவலங்களை எடுத்துக் கூறமுடியுமா? தஸ்லீமா நஸ்ரீன் உள்நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளிலும் பந்தாடப்படுவது நோக்கத்தக்கது.

இராமனும் கண்ணகியும்

பலமொழிகளில் காணப்படும் இராமனின் கதையில் அவனது பண்பு நலம் போன்றவை மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. ஆனால் கண்ணகிக்கு இத்தகைய சிக்கல் எதுவுமில்லை என்ற போது மாற்றத்தின் தாக்கம் எதிரொலி எழுப்பவில்லை.

பிறசமயமும், பத்தினிக் கடவுளும்

சமண, புத்த சமயங்களுக்கு பத்தினிக் கடவுள் வழிபாடு உடன்பாடில்லை. அனைத்துச் சமயங்களும் அன்னையர் வழிபாட்டை

உடன்பாடுகின்றன. எனினும் அதற்குக் கற்பே அடிப்படை என்ற நிலையில் இவ்வழிபாடு இன்றுவரை தொடர்கின்றது என்பதற்கான பல விளக்கங்கள் கண்ணகிக்குப் பெருமை சேர்க்கவில்லை.

4. பெண் நோக்கு

பெண் கடவுள் வழிபாடும், மதிப்பீடும்

தாய் மேலாண்மைச் சமுதாயத்தில் இயற்கை வழிபாடாக மேற்கொள்ளப்பட்ட கொற்றவை வழிபாடு. தனியுடைமை அரசுத் தோற்றத்துக்குப் பின்பு அவர்களின் வெற்றிக்கு உரித்தாக்கப்பட்டு, வைதீகக் கற்பனைப் புனைவுகளின் அடிப்படையில் பல்லாயிரம் பெயர்கள் சூட்டப்பெற்றன. எவ்வாறாயினும் பெண் கடவுள் வழிபாடு என்ற வகையில் பெண்களுக்குரிய இடம் எத்தகையது என்ற மதிப்பீடே, காப்பிய ஆய்வை நிறைவு செய்யும். இந்நோக்கில் காப்பியத்துள் காணக்கிடக்கும் கருத்துக்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

கற்பும், இறைத்தன்மையும்

தமிழ்ப்பண்பாட்டின் சின்னமாகக் கடற்கரையில் கண்ணகி சிலை வைக்கப்பட்டுள்ளது. அறம் உரைத்தது அல்லது கற்பு காத்தது என்பதில் எது தமிழ்ப் பண்பாடு என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. கண்ணகி சிலை வைத்தலும், அகற்றலும், மீண்டும் நாட்டலும் அரசியல் நோக்கிற்கப்பால் கற்பின் அடிப்படையிலான அறமே ஆற்றலுடையது என்பதே உண்மை. எனவே கற்பின்றி அறம் இல்லை என்பது பெறப்படுகின்றது. கொற்றவையும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது. அறிவும், ஆற்றலும், துணிவும் இல்லாத பொறுமையே கற்பு. இக்கற்பே பெண்ணின் பேராற்றலாகவும் பெரும்புகழாகவும் கொள்ளப்பட்டு இறைத்தன்மை ஏற்றப்பட்டுத் தவறு செய்த கணவனிடம் பொறுமை காத்துத் தனக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத மதுரை மக்களைத் தீக்கிரையாக்கியது.

ஆட்சிப் பொறுப்பும், ஆண்களும்

கொற்றவையில் கார்க்கி வினவுவது போல் அரசாளும் பொறுப்பு ஆண்களுக்கு மட்டும்தானா? "பாண்டியன் தென் நிலமாள மீன்விழி அன்னையால் பணிக்கப்பட்டவன் என்று நூல்கள் சொல்கின்றன" என்ற கண்ணகியிடம், "இல்லை. நான் அவ்வன்னை. என்னையே தென்நிலமாளப் பணிந்திருக்கிறாள் என்கின்றேன். அப்படியென்றால் என்னைத் தண்டிக்க அன்னை வருவாளா? எந்த ஓர் அரசும் தங்கள் உரிமையை இறைவல்லமையால் அளிக்கப்பட்டதும் மனிதர்களால் மீறப்பட இயலாததுமான ஒன்றாகவே குறிப்பிடும் என உணர்க" என வரும்

உரையாடல் ஆட்சிப் பொறுப்பை ஆண்கள் தாமே எடுத்துக் கொண்டனர் என்பதைப் புலப்படுத்தும்.

அன்னை வழிபாடு அன்றும் இன்றும்

எனினும், அறநெறிகளை நிறுவுவதும் அவை மீறப்படும் போது பெண்களில் சன்னதம் கொண்டு நெறிப்படுத்துவதும் அவளே எனக் கூறப்படுகின்றது. அன்றும் இன்றும் பெண் அன்னையாகப் போற்றப்படுகின்றாள் என்பதை அன்னையர் வழிபாடு உறுதி செய்தாலும் இரண்டுக்கும் இடையே அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. ஆம்! பெண்ணின் அளக்கலாகா ஆற்றலையும், அளப்பரிய திறனையும் உணர்ந்து மனம் திறந்து போற்றிய வழிபாடு தொன்மை வழிபாடு; அவை அனைத்தையும் முடக்கிக் கற்பென்னும் சிறையிலடைத்த கழுவாய்க்குரிய காரணம் என்பது அறியாத வெறும் நம்பிக்கை சார்ந்த வழிபாடு இன்றையது.

இன்பமும் தூய்மையும்

தாய் மேலாண்மைச் சமுதாயத்தில் பெண்ணின் கட்டற்ற நிலையை, "நாங்கள் அடர்ந்த காட்டுக்குள் திணை மட்டுமே விளைவித்து வந்தோம்..... எங்கள் மகளிருக்கு எவ்விதத் தீட்டும் இருந்ததில்லை. . . . . எங்கள் மூதன்னையரே குலத்தை வழி நடத்தினர் திணை விளைவிப்பதும், காப்பதும், அறுப்பதும் அவர்கள். . . . அதுவே எங்கள் குலத்தில் இன்பமும், தூய்மையும் நிறைந்திருந்த நாள்" எனவும் வாழ்ந்தோம்.

இசையும் நடனமும்

"உடலெங்கும் மலர்களையே அணிந்திருந்த பெண்கள் மலைச் சாரலில் திணை விதைத்து, கிளியோப்பி. ஆலோலம்பாடி..... காலை முதல் மாலை வரை வாழ்வே ஒரு விழாவாக இருந்தது. நீராடவே அறியாத வண்ணம், நீரோடைகளும், சிற்றோடைகளும், சேடியர் போல நீராட்ட, மலைக் கொடிகளே ஊசலாயின. பாடவும் ஆடவும் அறிந்திரா விடினும் மகிழ்ந்திருந்தபோது பேசியதெல்லாம் இசை அசைந்ததெல்லாம் நடனமாயிற்று" எனவும் வரும் கூற்றுக்களால் அறியலாம்.

கரவும் கற்பும்

கன்னி என அறியப்பட்டு அன்னையாய் வழிபட்ட மரபுக்கு இடையே கற்பு கரவாய் இடம் பெற்றமைக்குக் காரணம் தனி உடைமை வேட்கையும், பெண்ணை உடைமைப் பொருளாகக் கொண்ட ஆதிக்க உணர்வுமே. குலங்களுக்கு இடையிலான போர்களில் பெண்களைக் கவர்ந்து செல்லும் வழக்கம் தோன்றிய பின்பே, பெண்களை மறைத்து வைத்ததோடு தாலி என்னும் வேலியிட்டுக் கற்புக்காவல் செய்தனர். மன்னர் குல முருகன், மலைக்குடி வள்ளியைக் கவர்ந்து சென்றமை இதற்குச் சான்றாகும்.

(இராவணன் சீதையைக் கவர்ந்ததும் இத்தகைய போர் நெறியே).

கற்பும் கடவுள் தன்மையும்

உருவம் எதுவுமின்றி உணர்வால் அறியப்பட்ட பெண்ணை அன்னை எனக் கொண்டாடிய சமுதாயம் விதிவிலக்கின்றி, உயிருடன் வாழும் மகளிரைக் கற்பின் பெயரால் உயிர் கவர்ந்து, பின் சிலையாக்கிக் கடவுளாக்கிய முரண்பாடு முளைவிட்டுக் கிளை பரப்பியது. குலமரபு மீறி விஞ்சையருடன் தொடர்பு கொண்டதால் கடற்கரை மணலில் புதைப்பட்டு, மணல் மூடிய பின்பு வெண்ணி எனும் கடவுளாக்கப்பட்ட பெண், குல விதியை மீறி முத்துக்களைக் கரவாகச் சேர்த்தமையால் உறுப்புக்கள் அரியப் பெற்றுக் கடவுளான முத்தாரம்மன் போன்றோர் இவ்வுண்மைக்கான சில சான்றுகள்.

தாலியும் தாழியும்

பெண்ணின் இயல்பான கட்டற்ற நிலையைக் கட்டுக்குள் அடக்கி, உரிமைகளைப் பறித்து உடைமையாக்கிய முனைப்புக்குக் கற்பு பெருந்துணை செய்தது. மேற்குறித்த வண்ணம் இலைகளையும், தழைகளையும் அணிகளாகப் புனைந்து இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையில் அரசிலையைக் காட்டுக் கொடியில் கோத்துப் பொய்யும் வழுவும் தடுக்க அணிந்த தாலி பின்னர் பொன்னாக்கப்பட்டது. எவ்வாறாயினும் "மங்கல நாண் பூட்டப் பெற்ற பெண்கள் உயிருடன் தாழியில் புதைக்கப்பட்டனர்" என்ற உண்மையைக் கொற்றவைப் பெண்களும் வழி மொழிந்துள்ளனர்.

சிறையும் நிறையும்

கற்பும் களவும் என நெறி வகுத்துச் சொல்லால் சிறை அமைத்துச் சிறையை விட மேலான சிறை வகுத்த மரபைப் பெண்கள் மனதார ஏற்றுக் கொள்ளாமல் சமுதாய மரவு கருதி ஏற்றுக் கொண்டாக வேண்டிய நிலையைக் கண்ணகி வாயிலாகவே அறிய முடிகின்றது. தன் மாளிகை வீட்டின் உப்பரிகையில் நின்று கொண்டு கடலை நோக்கிய வண்ணம் நோயற்ற, சாவற்ற, முடிவற்ற வாழ்க்கைச் செலவையே ஓயாது கனவு கண்ட கண்ணகி, பின்னர் தான் ஒரு பெண் என்று அறிந்து இற்செறிக்கவும், இல் சமைக்கவும், அன்னை ஆகி, ஆக்கி, அழிக்கவும், ஆக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றாள்.

கற்பும் சமுதயாக் கட்டாயமும்

எவரும் அறியாமல் காட்டுக்குள் கொட்டிக் கொண்டிருக்கும் அருவி என ஆற்றல் கொண்டிருந்த போதும், அதனை மறந்து, மலர்ந்த தன் முகத்தை இறுக்கக் கற்றுக் கொண்டதாகவும், வாய் விரிந்த சிரிப்பை ஒரு புன்னகையாக்கிப் பரந்த எண்ணங்களைச் சிறு சொற்களாக்கி அன்னையர் கதைகளிலும், முன்னையோர் நெறிகளிலும் தன்னைப் பிணைத்து மெல்லத் தீட்டிக்கொண்டு இவற்றையே பெண்ணின் பெருமைகளாக்கிக் கொண்டதாகக் கூறுகின்றாள். நீலி போன்ற பெண்களின் கட்டின்மையை

அஞ்சுவதாகவும், கரைகளே தனக்கு வழிகாட்ட முடியும் ; அவற்றை மீறுகையில்தான் பெண் அல்லாமல் ஆவதாகவும் மொழிவது சமுதாயக் கட்டாயத்தை வெளிப்படுத்துவதாகும்.

மனக்காயமும் வலி கூறும் சொற்களும்

சமுதாயக் கட்டாயத்தின் பேரில் கற்புநெறியைப் பெண்கள் ஏற்றுக் கொண்ட போதும், மனதார அதை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. கட்டாயக் கற்பால் நேர்ந்த தம் அகப்புற இழப்புகளை அவர்களின் மனக்காயங்களின் வலி நிறைந்த சொற்கள் புலப்படுத்துகின்றன. மலையென நிதிக் குவை பெற்றிருந்தும் கலை நாட்டத்தாலும், காம விழைவாலும் அனைத்தையும் இழந்து வெறுங்கையனாய் வெகு நாட்கள் கழிந்து வீடு திரும்புகிறான் கோவலன். வெளிக்காட்ட இயலாத, அவன் மேலான வெறுப்பும், சிறுமை உணர்வும், தான் வெற்றி பெற்ற பெருமிதத்தால் தன்னையும் அறியாமல் தோன்றும் உள்ள நிறைவும்; கற்பரசியர் வாழ்க்கை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே வரையறுக்கப்பட்டு விட்டதால் அவனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழி இல்லாத நிலையும் ஒருங்கே நிகழ்கின்றன. "ஒருபோதும் உங்களை வெறுத்தது இல்லை" எனச் சொல்லவே நேர்கின்றது.

அகமும் புறமும்

இது மட்டுமின்றிக் கோவலன் செயலால் புண்பட்ட உள்ளம் கற்பாறை போல் இறுகிவிட்ட நிலையில், அவளுடைய உணர்வுகளை அறிந்துகொள்ளப் பலமுறை முயன்றும் கோவலனால் இயலவில்லை! 'அவள் அறிந்த தெய்வங்கள் வேறாகி, அவனை விட்டு வெகுதொலைவு' (மனதால்) வந்து விட்டாள். துடலி முள்ளாய்க் குத்திய அவனது செயலின் வலியை மறக்க முடியதவளாய் அவ்வப்போது தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றாள் ; கோவலனின் உள்ளம் மாதவியிடமிருந்து முழுமையாக விடுபடவில்லை என்ற அவளது நம்பிக்கை பொய்க்கவில்லை என்பதை மாதவியின் மடல் கண்ட கோவலனின் முகம் கண்டே அவனது மனநிலையைப் படம் பிடித்ததுபோல் உணர்ந்து உரையாடுகின்றாள். இவ்வாறு அகத்தில் அழுத்தமும், புறத்தில் அதன் தாக்கமுமாக உலவும் பெண்களுக்குக் கண்ணகி சிறந்து எடுத்துக்காட்டு.

ஆண்கள் துறவும், பெண்கள் தனிமையும்

இயற்கை வழிபாட்டில் கற்புக்காக உயிர்துறந்த பெண்கள் கடவுளாக்கப்படுவது ஒரு புறமிருக்க, மற்றொருபுறம் சாக்கியம் போன்ற சமயங்கள் இளைய சமுதாயத்தை ஈர்க்க, அன்னையரும், மனைவியரும் அஞ்சும் வண்ணம், அந்நெறி சார்ந்து துறவு பூண்டனர் ; அவர்களால்

கைவிடப்பெற்ற பெண்களை மீண்டும் அவர்கள் இல்லம் திரும்பும் போது அவர்கட்கு ஆட்பட வேண்டும் என்பதற்காக, வேற்றிடம் பெயரும் அவர்களின் குலங்கள், அவர்களைத் தனியே விட்டுச் செல்கின்றனர் ; தனியே இருக்க நேரிடும் அப்பெண்கள் இலைகளையும், கிழங்குகளையும் உண்டு காலத்தைக் கடத்துகின்றனர். பரத்துவாச கோத்திரம் சார்ந்த மகதியை அவள் துணைவன் விட்டுச் சென்று, பல நாட்கள் கழித்து இரவனாய் இல்லம் ஏகிய போது, அவன் தன் துணைவன் என்பது அறிந்தும் கண்டு கொள்ளாமல் விட்டுத் 'துறப்பதற்கு வீடு விட்டிறங்க வேண்டியது இல்லையே' எனச் சில சொற்களில், தன் பல இழப்புக்களை வெளிப்படுத்துகின்றாள்.

கட்டின்மையும் வெறுமையும்

கற்பு, காமம், ஆற்றியிருத்தல் என்ற பெயர்களில் வாழாது வாழ்வெடுத்த பெண்களாக, அவர்களின் கரை காணாத துயரமே ஐம்பெரு நில வெளியாகவும், மூவகைத் தமிழின் மொழியாகவும் பரந்து ஆழம் கொண்டதை ஆதிமந்தி, பேய்மகள் இளவெயினி, மாற்பித்தி, நக்கண்ணை போன்றோரால் ஐவகை நிலத்தில் மைவிழி செல்ல இயலாத இடம் விளக்கப்படுகின்றது.. குழந்தைப் பருவத்தின் கட்டற்ற நிலையைத் திருமணத்தின் போதே இழந்து விடுகின்றனர் பெண்கள். எனவே கணவன் பிரிந்து சென்ற காரிகையைக் கண்டு உற்றாரும், பெற்றோரும் கண்கலங்கும்போது, அவர்கள் தம் குழந்தைப் பருவக் கட்டின்மையைத் திருமணத்தில் தொலைத்துவிட்ட பின்பு, கணவரின் பிரிவால் இழப்பதற்கு எதுவுமில்லை என்ற வெறுமையை வெளிப்படுத்துகின்றனர்.

கட்டுண்ட நிலையும் கட்டற்ற சமுதாயமும்

கணவனின் பிரிவில் ஆற்றியிருப்பதே பெண்ணுக்கும் பெருமை என்று கூறும் கண்ணகிக் காப்பியப் பெண்களில் ஒருவரே, கணவனுக்காக ஆற்றியிருப்பது பெண்ணின் பெருமை அன்று. எதன் பொருட்டும் ஆற்றியிராத நிலையே பெண்ணின் பெருமை என்கின்றாள். கட்டற்ற நிலையைப் பரத்தமை என்றும், கட்டுண்ட நிலையைக் கற்பு என்றும் பெயரிட்டுள்ள சமுதாயத்தில், யாக்ஞவல்கியருடன் உரையாடி வெற்றி பெற்ற கார்க்கியைப் போன்று, தொடக்கக்காலத் தாய் வழிச் சமுதாயத்தை நினைவுபடுத்தும் வகையில் களவு, கற்பென்ற வரையறை இன்றி, விரும்பியவர் விரும்பியவரோடு இணைய குழந்தைகளை ஊர் மன்று வளர்க்கும் எனக் கற்புக் கட்டற்ற சமுதாயம் எதிர் நோக்கும் சிக்கலுக்குத் தீர்வும் கூறுகின்றாள்.

வாடும் பூவும் தாலியும்

அன்பும் கற்பும், பொறையும், புதுப்பூவும் புதுத்தளிரும் போல் நாளும் தழைக்கட்டும் என்றே வாடும் இயல்புடைய இலையால் தாலி அணிந்தனர்.

எனினும், அன்பு மட்டுமே இவ்வாறு தழைக்க முடியுமே தவிரக் கற்பும், பொறையும் இருக்க இயலாது.. அத்துடன் மண்புழு உடல் போன்று உண்டதை எல்லாம் வெளிக்காட்டும் உள்ளம் மனிதருக்கு இருக்குமாயின் அறிவர், சான்றோர், கற்பாசிரியர் என யாரும் இருத்தல் இயலாது என்கின்றனர் கொற்றவைப் பெண்கள்.

கற்புச் சுமையும், தீராத நாட்களும்

பெண்களை உடைமைப் பொருளாக்கிய பின்பு பிற குலங்கள் கவர்ந்து செல்லாத வண்ணம் அவர்களைக் கரவாக வைத்த இனக்குழுச் சமுதாயப் பழக்கம், நாடும், நகரும், அரசும், கண்ட நாள் வரை தொடர்ந்தது. கற்புப் போன்ற தளைகள் தம் சமுதாயத்தில் இல்லை எனக்கூறும் கார்க்கி, இந்த மூவேந்தர் நாட்டிலும் பெரும்பாலான குலப்பெண்டிர் முகங்கள், இளமை முழுவதும் ஆற்றியிருந்த அவலத்தையே காட்டுகின்றன. "கற்பென்பது அனைத்தையும் சுமந்து சுமந்து காலத்தைக் கணக்கிட்டுச் செலவழிக்கும் தீராத நாட்கள் அவர்களுக்கு" எனக் கடித்துரைக்கின்றாள்.

ஆற்றியிருக்காமையும், விடுதலையும்

கற்பில்லாப் பெண்டிர் பரத்தையர் என்றும், அவர்கட்குக் கற்பென்ற கட்டில்லை என்று கண்ணகி கூற, "அவர்களும் விடுதலை கொண்டவர்கள் அல்லர் "நீங்கள் ஒருவருக்காக ஆற்றிருக்கின்றீர்கள் ; அவர்கள் பலருக்காக ; காதலின் பொருட்டின்றி எதன் பொருட்டும் ஆற்றிருக்காத பெண்ணே விடுதலையானவள். இங்கே எங்களுக்கு வெளியுலகில் ஆண்களுக்கு உள்ள எல்லா உரிமைகளும் உண்டு என்னும் கார்க்கியின் விளக்கம் சிந்திக்கத்தக்கது. (இச்சாருவாகப் பார்ப்பனரை மறையவர் எதிர்க்கின்றனர்)

இழிந்த உணவும், சின் மொழியும்

இவர்கள் குலத்தில் உணவு தேடும் இழிவான வேலைகளைப் பெண்களே செய்யவேண்டும். ஆண்கள் வயல்களில் உழைப்பவர்கள் ; அவர்கள் ஊர் மன்னருக்கு உரிமைச் சுற்றமாக இருப்பார்கள். அவர்களில் ஏழு கழஞ்சு பெறுமானம் உடைய வலிமை மிக்கவர்களும் உண்டு. அவர்களுக்குக் குல மள்ளன் உணவளித்துப் பேணுவான். அவர்கள் பெண்டிர் மள்ளர்களுக்கு உரிமையானவர்கள்" என்பது மருதநிலத் தெய்வம் விண்ணவன் வகுத்த நெறி. இவர்கள் உண்ணுவது இழிந்த உணவு என்றும் பேசுவது சின்மொழி என்றும், இவர்களே மக்களுள் கடைஞர் என்றும் உன் மரபு வகுக்கின்றது. என வரும் தொடர்கள் தனிஉடைமைச் சமுதாயம் ஆண்களையும், பெண்களையும் அடிமையாக்கிய மாற்றத்தைக் குறிக்கின்றன.

பரதவரும், பரத்தையரும்

சம்பாபதிக் கடவுள் வழி வந்தவர்கள் எனப் பெண்களை மேல்தட்டுச் சமுதாயம் உருவகித்துச் செல்வரும், அரசரும் கணிகையரில் குல மகளிரையும், குல மகளிரில் கணிகையையும் தேடிக் களிக்க வைத்தது. உடைமைப் பொருள் ஆக்கப் பெற்ற பின்பு பெண்ணைச் சிற்றின்ப நுகர்வுப் பொருளாக்கி அதற்கென அழகான கற்பனையும் புனைந்தனர். "காவிரி கடல் சேர்ந்ததும் கடலைச் சூழ்ந்த நாற்றிசையும் காவிரியில் இணைந்தன. சோழியன் வளநாடும் சோறும் சொல்லும் செழிக்க வளர்ந்தது. பாவையர் குலம் பெருகிக் கலைகளும், இசையும் கைகொள்ளும் ஏழாயிரம் குலங்களாகப் பெருகியது. பாவையருக்கு மங்கல நாண் மட்டும் சம்பாபதி அன்னையால் விலக்கப்பட்டிருந்தது.. மன்னரும் தாள் பணியும் மங்காப் பெருங்கலைகள் அவர்கட்கு ஏவல் புரிந்தன. பரத்தமையால் காகந்தர் பரதவர் எனப்பட்டு, அவர்களைப் பரப்பியமையால் பாவையர் பரத்தையர் ஆயினர். சோழியன் செம்பளிங்குக் கல் செதுக்கிச் சம்பாபதிக்கு இத் தொல்கோட்டத்தை அமைத்தான். பின்பு சோழன் நலங்கிள்ளி நகர் நடுவே அனைத்து மக்களும் வணங்கிடும் நால் நிலைக் கோட்டத்தை எழுப்பினான்.

மாதவியரும், மனவிருப்பமும்

இவ்வாறு உண்மையை மறைத்து இறைத்தன்மை ஏற்றப்பட்டாலும், அம்மங்கையரே, தம் இழிவான வாழ்க்கையை வெறுக்கின்றனர். "எங்கள் குலம் சம்பாபுரியில் வேர் கொண்டது என்பதை எவரும் மறப்பதில்லை. எனினும், நான் மறக்க விழைகின்றேன். சம்பா புரியின் பெண்கள் கடற்செடிகள் போல; அவர்களின் வேர் அலைகளில் ஆடுவது என்பார்கள். அலைகள் எனக்கு அச்சமூட்டுகின்றன. நான் பிறந்த நாள் முதல் அலைகளையே கண்டு வந்தவள். ஆழ வேரூன்றி விழுது பரப்பும் பேரால மரம் போல் என் குலம் வாழ விழைகின்றேன் என்று கண்ணீருடன் சொல்லிப் பதியெழுவறியாப் பழங்குடி கொண்ட உங்கள் உதிரம் என்னுள் முளைக்க வேண்டும்" என்ற மாதவியின் கூற்று இதனை அரண் செய்யும்.

சுமையும் அழுக்கும்

பரத்தையர் மட்டுமின்றிக் கற்பென்ற பெயரில் பாடும் துயரத்தில், மனம் வருந்திக் கவல்வதை, "எங்கள் குலத்தில் எல்லாப் பெண்களும் விரும்புவது காற்றாகி மாறி விடுவதைத்தான். இந்த உடல் தான் எத்தனை சுமை! எத்தனை அழுக்கு! ஒவ்வொரு மாத்திரை தோறும் இதன் எடை ஏறி வருகிறது. இது பட்ட இடமெல்லாம் தீட்டாகிறது. இதைத் தொட்டவை எல்லாம் தீட்டாகின்றன. எண்ணங்களிலும் இதைச் சுமந்தலைய வேண்டியுள்ளது. மாதவிடாய் கொண்டு என் உடல் அழுக்கு உறும்போது அதற்கான புறமாடத்தில் தனிமையில் அமர்ந்து சிறிய இடைவெளி வழியாக இலை

களைத் தழுவிச்செல்லும் காற்றையே நோக்கி இருப்பேன்" .... எனும் கூற்று விளக்குகின்றது. அத்துடன் தாய்வழிச் சமுதாயம் அறியாத தீட்டு என்ற ஒன்றும், அழுக்கும் பெண்கள் மீது ஏற்றப்பட்டதையும் உணர்த்துகின்றன.

கண்ணகியும் களமர்பெண்களும்

குலமரபுகளை மீறும் பெண்களை, அக்குலம் கைவிட்டபின்பு அவர்களால் வாழ முடியாத நிலையில், கடவுளாக்கிப் பேர் சொல்வது மேல் என்ற கருத்தும் பெண்களால் கூறப்பட்டு மன ஆறுதல் பெறுவதைக் காண முடிகின்றது.. களமர் பெண்கள் விற்கப்படும் காட்சியைக் கண்டு கண்ணகி, "ஆண்களை நம்பி வாழாத இவர்கள், விற்கப்படுவதால் அவர்கள் இழக்கப் போவது எதுவுமில்லை." எனத் தனது வாழ்க்கை இழப்பை மறைமுகமாக உணர்த்துகின்றாள்.

சிறுவேல முள்ளும் சிறுமையும்

தெய்வம் ஏறப்பெற்ற பெண்ணின் காலில் ஆண்களை வெட்டிப் பலி கொடுத்த பின்பு அவள் எப்படி மனைவியாக முடியும் ? என்ற வினாவையும் கண்ணகி எழுப்புகின்றாள். கணவன் மனம் நோகும் வண்ணம் காவிரியைப் புகழ்ந்து கூறியமையால், ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஆட்டனின் மனைவி ஆதி மந்தியின் வாய்ச்சொற்களே சிறுவேலங்காட்டில் முட்களாய் முளைத்துத் தம்மைத் தீண்டியோரை வலி இன்றிச் சிறிதுசிறிதாக நஞ்சாகி உயிர் இழக்கச் செய்கின்றன என்ற கதை எத்துணை இழிவும் கொடுமையுமாகும் !.

நிலத்திலும் நீரிலும்

எளிய பெண்களின் நிலை இது வெனின் கடவுட்பெண்ணான கண்ணகி பற்றி வேறொரு கதை. 'அவள் சென்ற இடமெல்லாம் வெட்டுண்ட உறுப்பிலிருந்து சொட்டி உதிர்ந்த செங்குருதி முத்துக்கள் முளைத்து அரத்த நிற மலர்கள் பூக்கும் செடிகளாக அவை காட்டை நிறைத்தன. அத்துளிகள் நீரில் ஓடி ஆறு சேர, அவற்றை உண்ட மீன்கள் முட்டையிட்டுச் செம்மணிக் கண்கள் கொண்ட மீன்களைப் பிறப்பித்தன. இன்றும் இச் சுருளிக்காடு எங்கும் அவள் இரத்தமே நிலத்திலும் நீரிலும் நிறைந்து நிற்கிறது என்கின்றது.

ஒப்பனையும், தன்மானமும்

மண வாழ்க்கையில், உள்ளத்தால் ஒன்ற வேண்டிய கணவனை ஒப்பனையாலும், அணிகளாலும் ஈர்ப்பது பெண்ணின் தன்மானத்துக்கு இழுக்கு எனும் கருத்தை மலைக்குறப் பெண், தெய்வானையைச் சுட்டிக் கூறுவதுடன், தான் அணிகள் அணிவது, கணவனுக்கும் அவளுக்கும் இடையேயான சுவர் என்று கருதுகின்றாள். அணி களைந்த குறமகள் வள்ளி குமாரனை வெல்லும் தோறும் தெய்வயானை தன்னை அணிகளால்

மறைத்து அவனிடமிருந்து விலகிச் சென்றாள். அவளைக் கவரும் பொருட்டு தான் அணிவது ஒவ்வொன்றும் தனக்கும் அவனுக்கும் இடையேயான சுவரே என அவள் உணர்ந்தாள். எனினும் குமாரனை வெல்வது எளிதாக இருப்பினும், அவன் குலத்தை வென்று தான் அரசியாக முடியாது என்பதை அறிந்து காதல் வேறு, குல வேறுபாடு வேறு என்ற உண்மையை நினைந்து வருந்துகின்றாள்.

அகச்சிறையும் வெளிஉலகும்

அணிகளை அணிபவள் அனைத்தையும் அடைகிறாள் கணவனைத் தவிர; கணவனை அடைபவளோ அவனையன்றி வேறெதையுமே அடைவதில்லை. அடையாதவற்றால் ஆவதே வெளியுலகம். அடைந்தவற்றால் சிறையுண்டவர்கள் மகளிர். அந்நகரில் பெண்கள் அனைவரும் சிறை இருந்தனர். அதை நிறைய என்று சொல்லியது நூல் மரபு. "பேசும் பெண்ணுக்கு ஆண் ஓர் ஆடி அவள் அதை நோக்கி அணிகளும், ஆடைகளும், அலங்காரங்களும் பூணுகிறாள். ஆடியை நோக்கு கையில் அவள் நோக்குவது அவனை மட்டுமே எனப் பெண்கள், அணிகள், ஒப்பனை வாயிலாகத் தத்தம் கணவனை ஈர்க்கும் செயல், சில பெண்களாலேயே கைவிடப்பட்ட நிலை நுண்ணிதின் உணர்த்தப்பட்டுள்ளது.

உரிமையும் நியாயமும்

எங்ஙனமிருந்த போதும், கற்பும், கணவனுமே பெண்களுக்கு உரித்தானவை என்ற வகையில் தான் கொற்றவையின் பெண்கருத்துக்கள் அமைந்துள்ளன. குலமரபை அல்லது விதியை மீறியவர் என்ற வகையில், பெண்களைக் கொல்வது மன்னனுக்கு இழுக்கு என்று கருதப்பட்டு அவர்களின் உறுப்புகள் அரியப் பெற்ற கொடுமை இருந்தது. கொலை செய்வது ஆணுக்கு இழுக்கு எனின், உறுப்புக்கள் அரியப் பெற்ற பெண்ணின் நிலை என்ன என்ற சிந்தனைக்கே இடமில்லை. விதிகளையும், மரபுகளையும் வகுத்து மீறியவரை உயிர் பறித்துத் தண்டிக்கும் உரிமையைக் கொடுத்தது யார்? இது எந்த வகையில் நியாயமாகும்?

கணவன் இறப்பும் வாழ்க்கை இன்மையும்

காதல் கொண்டு காத்திருப்பவர்கட்குக் காலமே இல்லை என நப்பின்னை உட்படப் பல பெண்களின் வாழ்க்கையைக் கூறுகின்றது கொற்றவை எனக் கண்டோம். முக்கண் முதல்வன், முருகன், முதல் கோவலன் வரை இடைப்பட்ட எல்லா ஆண்களும் பெரும்பாலும் இரு மனைவியரைக் கொண்டுள்ள நிலையில், பெண்களுக்குக் கற்பு வலியுறுத்தப்படுவதோடு கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்ற சிலம்பை வழி மொழிகின்றது கொற்றவை. கணவனை இழந்தவர்கள் இழப்பவை கணந்தோறும் வளர்கின்றன. அவள் அடைவது ஏதுமில்லை ஆகையால் மன்னன்

செங்கோல் வளைந்து உயிர் நீக்க, பாண்டிமா தேவி, வைரம் விழுங்கி உயிர் துறக்கின்றாள்.

மரபும், வினாவும்

இவ்வாறான பெண் சமுதாயப் பின்னணியில் அறம் அவிந்து மறம் தழைக்கும் போதெல்லாம் பேரன்னை நுண்ணுருக் கொண்டு ஒரு பெண்ணுடலில் ஏறி வெளி வருகின்றாள். அறம் சிறந்து குடி தழைக்க வந்த அன்னையரும், கன்னியரும் எல்லாம் அம் மூதன்னையின் வடிவங்களே என வழிபடுதல் நம் தமிழ்க் குடி மரபு என அறிக என்பது எந்தவகையில் ஏற்புடையது என்ற வினா எழுவது தவிர்க்க இயலாதது. . கண்ணகி, கன்னியுமில்லை, அன்னையுமில்லை என்பதும் நோக்கத்தக்கது.

காலமும், கொடிய ஆட்டமும்

சமுதாய உற்பத்தியிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பெண்ணுக்குரிய வேளாண்மையும், வேட்டையாடுதலும் பறிக்கப்பட்டு ஆணின், ஆண்களால், உருவாக்கப்பட்ட அரசின் உடைமைப் பொருளாகிப் பின்னர் சிற்றன்ப நுகர்வுப் பொருள் ஆக்கப்பட்ட நாள் முதல் நூலாசிரியர் மங்களாதேவி கோயிலில் காணும் கடவுளின் பேரால் துன்புறுத்தப்படும் பெண் உட்பட, இந்த மணித்துளி வரை "காலம் பெண்களுடன் ஒரு கொடிய ஆட்டத்தை ஆடிக் கொண்டுள்ளது" என்பதுதான் வருத்தம் தரும் உண்மை.

கண்ணகியும் மாதவியும்

தம்மைத் துறந்து சென்ற கணவன், மீண்டு வந்து அவளைக் காண அழைக்கும் போது, "அவர் புத்தர் என்றால் என்னைக் காண வருக" என்று கூறினாலும் இரவர் வடிவத்தில் வந்து சென்ற கணவனைக் கண்டுகொள்ளாமல் விட்டாலும், துறவு மறுக்கப்பட்டு அன்னையாகிப் பணிவிடை செய்தாலும் பெண் பெண்தான். ஆண் ஒருவனால் வாழ்க்கை இழந்த கண்ணகியும், மாதவியும் ஒருவர்மீது ஒரு பழியும் காழ்ப்பும் கொள்ளாதிருப்பது அவர்களின் பண்புச் சிறப்பைக் காட்டுகிறது. கண்ணகியின் கைபற்றிக் கோவலன் போகும் காட்சியை மனக்கண்ணில் கண்டு வஞ்சத்துடன் நகைத்தாலும் கண்ணகி மீது ஆழ்ந்த இரக்கம் உருவாகிக் கண்கள் மூடி நீலியைக் கண்டு வணங்கிக் கண்ணகி! கண்ணகி! என்று அச்சமுடன் விளித்து, "அவள் தன் கொழுநனை அடைந்துவிட்டாள் பின் என்ன" என்று நவிலும் அன்னையிடம் "இல்லை. அவளை அவர் ஒரு போதும் நாடு காண அழைத்துச் சென்றிருக்கலாகாது" என நிகழவிருப்பதை உள்ளுணர்வால், அறிந்து பேரச்சம் கண்களை நிரப்பக் கூறுகின்றாள்.

பகையாகாச் சிறுமையும், பெருந்தன்மையும்

"மாதவி மீது பழியுடன் நீங்கள் அவளை நீங்கினால் அவள் மகளுக்கே அப்பழி சென்று சேரும் இப்போது அது நீங்கியது; அவளுக்கு இனி நீங்கள் பொருட்டல்ல, அவள் தன் கொழுநனுக்கு நோன்பு நோற்பாள் உடலும் உள்ளும் மெலிந்து இறப்பாள்... எளிய பெண், துயரமும் இழிவும் அடைந்த பெண். அவள் நெஞ்சின் அனல் அவிய இவை போதாது.. ஆயினும் அவள் இப்போது அமைதி கொள்ளக்கூடும். அவளுக்கு அனைத்து நலன்களும் கூடுக" எனக் கருவறைத் தெய்வமொன்றின் அருள்மொழி போல் மொழியும் கண்ணகியின் அருஞ்சொற்கள் பெண்ணுக்குப் பெண்ணே பகை ஆகி மேலும் சிறுமையடையாப் பெருந்தன்மை உள்ளத்தைக் காட்டுகின்றன.

கண்ணீரும், காப்பும்

கடற்கரை எங்கும் நிலவு பரக்கும் இரவுகளில் நீரர மகளிரின் குரல்கள்தான்... – ஆற்றியிருக்கும் பெண்கள் தங்கள் கொழுநர் பெயரையும் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் வார்த்து முடங்கிக் கொள்கிறார்கள். "கண்ணீர் ஒரு பெருங்காப்பு என்று அறிக" என்ற நீலியின் கூற்று பெரும்பான்மைப் பெண்களுக்குப் பொருந்தும்.

உட்பிணைப்பு மாற்றமும், தேக்க நிலையும்

அச்சம், நன்றி, வியப்புப் போன்றவற்றின் காரணமாக எழுந்த ஓர் உணர்வு நாளடைவில், கற்பனைகளையும் கதைகளையும் பெற்று நம்பிக்கையாகி அவரவர் சூழலில் பல்வேறு வகையில் நிலவிய வழிபாடு, வைதீக ஆதிக்கத்தின்பாற்பட்டுச் சமயம் ஆக்கப்பட்டது.. அறிவுக்கும், ஆய்வுக்கும் உட்படக் கூடாத பல முரண்பாடுகளைக் கொண்டதாக மாறிய நம்பிக்கை சார்ந்த வழிபாடுகளுள் ஒன்றான கொற்றவை வழிபாடு. காலந்தோறும் பெண் பெற்று வந்துள்ள மாற்றத்தையும், இத்தலைகீழ் மாற்றம் மாற்றமுடியாத தேக்கநிலையில் இறைவழிபாட்டுடன் இணைந்து நிற்கும் உட்பிணைப்பு நிலையையும் நூல் உணர்த்துவதாகக் கருத இடம் உண்டு.

5. நிறை நிலை நோக்கு

இலக்கணமும் கொற்றவையும்

இதுவரையிலான பன்முகநோக்கு ஆய்வில், கொற்றவையின் புறவடிவச் செம்மையும், அகவடிவச் செறிவும் கண்டறியப்பட்டன. நூலாசிரியர், புதிய காப்பியம் எனக் கூறிக் கொள்ளினும் இந்நாளைய புதின வடிவே அந்நாளைய காப்பியம் என்ற வகையில் இவ்விரண்டன் இலக்கணக்கூறுகளும் கொற்றவையில் காணக்கிடக்கின்றன. பொதுவாக இலக்கியங்கள், தமக்குரிய இலக்கணச்சட்டங்களை முன்நிறுத்தி முகிழ்ப்பதில்லை, மாறாக இவ்விலக்கியங்களை வகைப்படுத்தும் நெறிகளும் விதிகளும் அவற்றுக்குள்ளேயே உருவாகின்றன என்பதே உண்மை. காப்பியங்கள் உலக மொழிகளுக்குப் பொது ஆகையால் தமிழ் பொருந்தியிருக்கும் திறன், சற்று விரிவாகவே, வேறு ஒரு பயன் கருதி முதல் இயலில் கூறப்பட்டுள்ளது.

கொற்றவையும் இலக்கிய இயல்பும்

இலக்கியத்தின் இயல்புகள், அதன் விதிகளிலேயே புலப்படுகின்றன என்ற அடிப்படையில் இலக்கண இயல்புகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வியல்புகள், அரசியல், வரலாறு, சமுதாயம் சமயம். ஒப்புமை, பெண் நோக்கு என்ற தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்று முன்காலம் தொட்டு வரலாற்றுத் தொடக்கக்காலம், கற்காலம், (உலோக) இரும்புக்காலம், பழந்தமிழ்க் காலம் எனப்பல மைல்கற்களைத் தாண்டி விரியும் நீண்ட பின்னணியில், விலங்கோடு விலங்காக உறைந்த மனிதன், நிலம் தெரிந்து, நீர் புரிந்து, எரி அறிந்து, காற்று பழகி, வான் கண்டு, உணவும், உறைவிடமும், தொழிலும், குடியும், அரசும், அறமும், நாடும், மொழியும், இலக்கியமும், வணிகமும், கலையும், கடவுளும் கண்டறிந்த பின்னர் போரும், பகையும், தனியுடைமை பெற்றும், உயர்வும், தாழ்வும், பசியும், பஞ்சமும், மறமுமாக மாற்றம் கண்ட இரு முனை வளர்ச்சிக்கூறுகள் வெகு அழகாக விளக்கப்பட்டுள்ள திறன் இடம் பெற்றது.. பேராழிப்பெருக்கிற்கும், தொல்குடிமக்களுக்கமான இடைவிடாத போராட்டம், ஆவணப்படத் தொகுப்பின் தொடர்ச்சியாய்ப் போராட்டத்தில் சிக்கிய ஒருவராய் உணரும் வகையிலான உயிர்த்துடிப்புடன் உணர்த்தப்பட்டுள்ளமை ஆசிரியரின் படிப்பாற்றலுக்கும், எழுத்தாற்றலுக்குமுரிய சான்றாகும்.

மறுபடைப்பும் மதிப்பீடும்

பழந்தமிழ் இலக்கியத்தின் மறுபடைப்பு என்ற வகையில் மேற்கொள்ளப்பெற்றுள்ள மாற்றங்களும், புதிய புனைவுகளும், சமயத்தின் நிலைப்பாடும், பெண்களின் நிலையும் சுருக்கமாக எடுத்து இயம்பப்பட்டன

இவையாவும், நூலிலிருந்து தொகுக்கப்பட்டவை. இனி, இவ்வாறான மறுப்படைப்புகளாலும், அவை கூறும் மாற்றங்களாலும் பழையன நீக்கிப் புதியன புகுத்துவதாலும் இலக்கிய உலகு பெறுவது என்ன என்பதோடு, இத்தகைய மறுப்படைப்புகளில் படைப்பாளிகளின் உரிமை எத்தகையது என்பது பற்றியும் மதிப்பிட வேண்டிய இன்றியமையாமை ஆய்வுலகிற்கு உண்டு. இத்தேவையின் அடிப்படையில் கொற்றவையை நோக்குவோம்.

மறுபடைப்பும், வகைகளும்

தேவை தேவையின்மை கருதாது, இலக்கிய வகைகளுள் ஒன்றாகவே இடம் பெற்றுவரும் இதுவரையிலான மறுபடைப்பு நூல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- மூல இலக்கியங்களைக் காலத்திற்கேற்ப எளிமைப்படுத்துதல்.
- புதிய உரையும், விளக்கமும் காணல்.
- மூல இலக்கியக் கருத்தை மறுத்தல்.
- தம் காலக் கருத்தை, தம் கோட்பாட்டை, கருதுகோளை அவற்றில் பொருத்திக் காணல்.
- பெயர், கால, கருத்துச் சிக்கலைக் களைதல்.
- சிலவற்றை விடுத்தலும், புதியன புகுத்தலும்.
- மூல இலக்கியங்களை விரித்தும், சுருக்கியும் கூறல்.
- அரியதும், முற்றிலும் புதியதும் படைக்கும் வேட்கையின் விளைவாக்கம்.

இவற்றில் முதலிரண்டு வகைகளுக்குத் திருக்குறளையும், மூன்றாம் வகைக்கு இராவண காவியத்தையும், நான்காம் வகைக்குப் பாஞ்சாலி சபதத்தையும், ஐந்தாம் வகைக்கு இன்குலாபின் ஔவை, கபிலர் நாடகத்தையும், பின்னைய மூன்று வகைக்கும் கொற்றவையையும் சான்றுகளாக்கலாம்.

இலக்கியப் பேழையும், கண்ணாடி மனிதர்களும்

மூல இலக்கியங்கள் தத்தம் காலத்தின் வரலாற்று ஆவணங்கள், அகழ்வாய்வுப் பொருட்கள் போன்று, 'இருந்தது இருந்த வண்ணமே' காக்கப்பட வேண்டியவை. இலக்கிய மனிதர்களோ, கற்பனை என்ற போதிலும், மக்கள் உள்ளங்களில், உயிருள்ள ஓவியங்களாய் உறைந்திருப்பவர்கள், தனி மதிப்பிற்கும் முதல் மரியாதைக்கும் உரியவர்கள் இலக்கியப் பேழைக்குள் இயங்கும் கண்ணாடி மனிதர்கள். சற்றே பிசகினாலும் மாற்றம், முழுமையை மூளியாக்கி விடும். இலக்கியம் மட்டுமன்று பிற நுண்கலைகளும், சமயமும் இதற்கு விதிவிலக்கன்று. மோனாலிசாவின் புன்னகையையோ, தாஜ்மகாலின் முகப்பையோ மாற்றம் செய்ய இயலுமா? ஹீசைனின் நபிகள் ஓவியம், கண்ணகி, இராமன்,

தஸ்லீமா, ருஷ்டி தொடர்பான அண்மைக்கால நிகழ்வுகள் நினைவிற் கொள்ளத்தக்கன.

வரலாறு இன்மையும், வானளாவிய உரிமையும்

எழுதியோர், எழுதுவித்தோரின் அகப்புறச் சூழலுக்கு உட்பட்டதே வரலாறு. ஆகையால், அது புனைவாகவே கருதப்படுகின்றது. அதன் நீண்ட நெடிய பக்கங்களில் பதியப்பட்டுள்ளவற்றைவிட விடப்பட்டவையே மிகுதி. அத்துடன் அரசியல்நிகழ்வுகளின் தொகுப்பே வரலாறு எனக் கருதப்பட்ட நிலையில் அவற்றுக்கான சான்றுகள் கிட்டாத களப்பிரர்காலம் இருண்ட காலம் என்றே புனையப்பட்டுள்ளது.. வள்ளுவ விளக்கும் சிலம்பின் ஒளியும் இக்காரிருளைப் பொய்யென்கின்றன. இவ்வகையில் உறுதியான காலமும், உரிய ஆசிரியரும் அறியமுடியாத இலக்கியங்களில் யார் வேண்டுமானாலும் எத்தகைய கருத்தையும் ஏற்கும் வாய்ப்புண்டு! அதிலும் வானம் கூட எல்லை ஆகா எழுத்துரிமையும், பேச்சுரிமையும் நிலவும் இக்காலச் சூழலில் படைப் பாளிகளின் உரிமைக்கு எல்லையும் உண்டோ ? இவ்வுரிமை மீறுவோர் குழு, ஒருவருக்கொருவர் துணை நிற்கும்போது மறுப்புக்கள் செயலிழக்கின்றன. ‘புதுமை’ எனப் போற்றவும், ‘இல்லை’ என மறுக்கவுமே திறனாய்வுலகில் இடம் உண்டே தவிர நடுநிலைக்குக் கிடைக்கும் இடம் மிக மிகச் சிறிது!

கொற்றவையும், ஐயமும்

இவ்வாறான சூழலில் சிலப்பதிகார ஆய்வுகள், இனிக் கொற்றவை இன்றி இல்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. இதுவரையிலான சிலப்பதிகார ஆய்வுகள், சிலம்பின் மறுபடைப்புக்கள் இல்லை என்ற போதும் கற்பு, படைப்புத்திறன், சுவை என்ற நோக்கிலும், கோவலனின் கனவு புகாரிலா ? மதுரையிலா ? நடுயாமத்திலா ? பின் யாமத்திலா ? கோவலன் மாதவியை முதன்முதல் எங்குச் சந்தித்தான் ? கதைகள் எண்ணிக்கை, ஊழின் வலிமை என்ற நோக்கிலுமே பல்கலைக்கழகப் பேராசிரியாகள் உட்படப் பல திறனாய்வாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டுப் பல நூல்களுமாகி உள்ளன. சிலம்பின் கதைக்கு முன்னும், பின்னும் என்ற நோக்கிலான இந்நூலின் ஆய்வுரைகள், மதிப்புரைகள், போன்றவற்றால் (சமயம் சார்ந்த) இராமன் கதை கூறும் இராமாயணம், போல, உண்மைக் கதை அதுவா, இதுவா என்ற ஐயம், இனிச்சிலம்பிலும் தோன்ற வாய்ப்புண்டு என்பதையும் மறுத்தற்கில்லை!

களப்பிரர் காலமும், கொற்றவையும்

மேற்கூறப்பட்டுவள்ளவற்றின் அடிப்படையில் கொற்றவையின் மாற்றங்களையும், புதிய புனைவுகளையும் மதிப்பிடும் முன்னர், சிலப்பதிகாரம் தோன்றிய காலச் சூழலை நினைவிற்கொள்வது நலம் பயக்கும். சமகால இலக்கியம் எனினும் சிலம்பின் காலத்தையே கொற்றவையும்

பின்னணியாகக் கொண்டு அக்காலம் பற்றிய வரலாற்றியல் கூற்றுக்களுடன் ஒத்து இயைந்துள்ளது.

மருத நிலமும் வடவர் நுழைவும்

ஓயாத போர்களையே வீரம் எனக் கொண்டாடிய பழந்தமிழ்ச் சமுதாயம், படிப்படியே சமயச் சார்புடையதாகவும், உயர்வு தாழ்வு கொண்ட சமச்சீரற்ற சமுதாயமாகவும் மாற்றம் பெறுகின்றது.. ஐவகை நிலங்களில் மென்புலப் பகுதியான மருதமும், நெய்தலுமே இம் மாற்றங்களுக்கு வழி வகுத்தன. வற்றாத இயற்கைவளமும், அயல்நாட்டு வணிகமும் இப்பகுதியைச் செல்வச் செழிப்புடைய தாக்குகின்றன. இச்செல்வக்குவிப்பு உயர்வு தாழ்ச்சிக்கு வித்திட்டது.. மிகையான வளத்தால் உழைப்புத் தேவை குறையவே கலை நாட்டமும் அதற்கான மகளிர் பிரிவும், மகளிரிடையேயும் குலமகளிர், பரத்தையர் பிரிவும் உருவானது. வணிகம் காரணமாகத் தமிழகம் புகுந்த வடவருக்கு மருதநிலம் நுழைவாயிலாக அமைகின்றது. அவர்களின் சமயச்சடங்குகள், தம் விளைநிலங்களில் வளம் பெருக்குவதாக மருதநில ஊரன் இயம்புவது இதற்குச் சான்றாகும். வில்வராணி வழிபாடு, வடவணிகர் கூறக் கேட்டு மேற்கொண்ட கண்ணன் வழிபாடு போன்றவை மேலும் சில சான்றுகளாகும்.

உயர்ந்தோரும், நிலைதடுமாற்றமும்

மற்றொரு புறம், வடபுலத்தில் தோன்றிய மாற்றம் போன்று, தனி உடைமைப் பற்றால் இனக்குழுத் தலைவர்கள், அரசர்களாக முனைய கோயிற்பூசாரிகள், இந்தப் புதிய மாற்றத்தை அறிந்தேற்புச் செய்கின்றனர். இதனால், கோயிற்பூசாரிகள், பிராமணர் ஆக்கப்பட்டு ஆட்சி நிலைப்புக்குச் சமயம் அடித்தளமாகின்றது. மலைநிலங்களும், விளைநிலங்களும், நாடாக்கப்பட்டு அரசுகளுக்கு உரித்தானதால், இவற்றின் வருவாய், வரியாக அரசுகளைச்சேர, அரசன் அளிக்கும் 'பிரமதாயம்' போன்ற நிலக்கொடைகள் அந்தணருக்குப் பொருள் வளம் தர, இருபிரிவினரும் உழைப்பிலிருந்து விடுபட்டு உயர்ந்தோர் ஆகின்றனர். வணிகர்களின் செல்வாக்கு புத்த சமண, சமயங்களுக்கு உறுதுணை நிற்கின்றது.. வணிகரின் மிகையான செல்வப்பெருக்கால், நிலை தடுமாற்றம் ஏற்படுவதைக் கோவலன் மூலம் அறியலாம். ஒரு சிலரிடமே செல்வம் முடங்குவதால் பொருளியல் சிக்கல்கள் தோன்றுகின்றன.

கொற்றவையும், புத்த சமயமும்

ஒரு சிலரிடம் முடங்கிய செல்வக்குவிப்பால் தோன்றிய பொருளியல் சிக்கல்களுக்கு தீர்வு காண இயலாத நிலையில் ஈகை, ஊழ்வினை, பசிப்பிணி மருத்துவக் கலமான வற்றாத உணவுக்கலம் போன்ற நிலைப்பாடுகள் உருவாக்கப்பட்டன. ஆட்சி நிலைப்புக்குச் சடங்குகளை

நம்பியதால் வைதீகம் செல்வாக்குப் பெற்றது. வட வைதீகரும், தமிழ் அந்தணரும் இணைக்கப்பட்டு ஒன்றாயினர். தொல்குடி மக்களின் ஊன் பலியும், குருதிப் பூசனையுமாகிய இயற்கை வழிபாடுகளைக் கைவிட்டுப் புத்த சமண சமயக் கருத்துக்களில் மக்கள் நாட்டம் கொண்டனர். ஆறுநோக்கிச் செல்லும் நீரோட்டம் போல், இளைய சமுதாயம் புத்தசமயம் சார்ந்தமையைக் கொற்றவை ஆழமாகக் கூறுகின்றது.

பொருளியல் சிக்கல்களும், அற நூல்களும்

பல நாடுகளுடனான வணிகத்தொடர்பு, பன்னாட்டுச் சந்தையும், ஊர்கள் நகரமய மாதலையும், சிற்றூர் மக்களின் பசியும், பட்டினியும், உழைப்புச்சுரண்டலும், நகரமக்களின் வளமாவதையும் கொற்றவை விளக்க, எல்லாம் எல்லாருக்கும் என்ற ஒப்பற்ற பொருளியல் சிக்கலற்ற பொது உடைமை உணர்வு மறைந்து, செல்வம் ஒரு சிலருக்கே என்றான போது, களவும், கொள்ளையும், கரவும், கொலையுமான மறங்கள் பல்கியதை அறநூல்களின் வளர்ச்சி புலப்படுத்துகின்றது.

இளங்கோவும், ஐயப்பனும்

இன்றைய இந்து சமயம் என்பது பண்டைய புத்த, சமண, ஆரியச் சமயங்களின் கலப்பே. இவ்வகையில், இளங்கோவையும் ஐயப்பனையும் தொடர்புபடுத்தியிருக்கலாம். இளங்கோ இலக்கியக் கற்பனை, ஐயப்பன் சமயக்கற்பனை. பண்டைய புத்த சமணப் பள்ளிகளே பின்னாளில், இந்துக் கோயில்களாக்கப்பட்டன. ஆலமர் செல்வனும் அவ்வண்ணமே! அறிவுக்கு அப்பாற்பட்டதே கற்பனை எனினும் அருவெறுப்புக்கு உட்படாது இருத்தலே சாலச் சிறந்தது. ஐயப்பனின் பிறப்புக் கற்பனையை விடவும், இளங்கோவின் பிறப்புக்கற்பனை சற்று மேலானது. இருவரின் வாழ்க்கை நிகழ்வுகளும் இணைக்கப்பட்டுள்ளன. சோதிடர் கூறிய தம் ஊழ்வினையை மாற்றியவர் இளங்கோ என்றும் சிறப்பிக்கப்படுகின்றார். எனவே இளங்கோ ஐயப்பன் தொடர்பு புத்தசமயத்தின் செல்வாக்கைக் குறிப்பதாக அமைந்துள்ளது என்பதைத் தவிரவேறு சிறப்பு எதையும் கொண்டிருக்கவில்லை.

இளங்கோவும், புத்தசமயமும்

எவ்வாறாயினும் இளங்கோ சிலப்பதிகாரப் பதிகத்திலும் பின்னர் இணைக்கப்பட்டது எனக் கருதப்படும் வஞ்சிக்காண்டத்திலும் இடம்பெறும் செய்திகளைக் கொண்டவர். கொற்றவையின் இளங்கோ கண்ணகியின் வரலாற்றைக் கேட்டறிந்து, அவள் தொடர்புடைய இடங்களுக்குச் சென்று கண்டுணர்ந்து மணிமேகலையையும், அறவண அடிகளையும், நாகநந்தியடிகளையும் நேரில் சந்தித்து உரையாடியவர் என்ற புனைவும் சுவை பயப்பதாக உள்ளது. சிலம்பு உலகின் ஒப்பற்ற அறத்தை வலியுறுத்தும் நூலாகப் பல அயல்நாட்டுச் சமயச்சான்றோரும் ஏற்றுக்கொண்டதாகப்

படைக்கப்பட்டு உள்ளது. தன்னைச் சமணனாகவோ, சாக்கியனாகவோ, சைவனாகவோ, விண்ணவனாகவோ எண்ணவில்லை, அன்னைமடி செல்லும் ஒரு மகவு என்று கூறும் இளங்கோ, கண்ணகியாம் அன்னையின் அருளைப் பேரொளியாகப் பெற்றதாகவும் கட்டுரைக்கப்பட்டுள்ளது. சேரநாட்டில் செல்வாக்குப் பெற்ற புத்த சமயத்தின் பால் மக்களின் ஈர்ப்பு இளங்கோவைப் புத்தசமயமாக்க, வைதீகம் ஐயப்பன் ஆகியுள்ளது எனக் கருதலாம். இளங்கோவே கற்பனை என்றும் கூறப்படுகின்றது. சாக்கியம் எனப் பயன்படுத்தும் கொற்றவையின் சொல் புத்தம், சமணம் இரண்டு சமயத்தையும் குறிப்பதாகும். ஐயப்பனின் இப்போதைய வழிபாட்டுச் சிறப்பு. சிலம்பு காலத்தில் இல்லாத ஒன்று எனவே இப்புனைவால் தவறேதும் இல்லை எனலாம்.

மாங்கோட்டு மறையோனும் சாத்தனாரும்

இளங்கோவின் தமையன் செங்குட்டுவனின் இமயமலைக் கல் தேர்தலும் கனகவிசயரின் கல் சுமப்பும், கொற்றவையில் இடம் பெறவில்லை. இந்நிகழ்வுகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆதலால் தவிர்த்திருக்கலாம். மலைவளம் காணச்சென்ற மன்னனிடம் மலைமக்கள் வானூர்தியில் கோவலனுடன் விண்ணகம் சென்ற கண்ணகி பற்றிக்கூற, கொற்றவையில் தாம் கண்ட கண்ணகிக்கு நாட்ட இருக்கும் விழாவுக்கு மலைமக்களே சேரனின் அவை வந்து அழைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. கண்ணகி பற்றிய புகார் நிகழ்வுகளை அவற்றை அறியாத சேரமன்னனுக்குத் தெரிவிக்கும் சிறந்த படைப்பாக மாங்காட்டு மறையோன் மாடலன் இடம் பெற, கொற்றவையில் சாத்தனாரே இவற்றைக் கூறுவதாகக் காண்கின்றோம்.

பிஞ்ஞாதாராவும் கண்ணகியும்

“நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள், மூவேந்தர்க்கும் உரித்தாதலின் அடிகள் நீரே அருளுக” எனச் சாத்தன் கூற இளங்கோ யாத்தது சிலம்பு. அன்னையின் அத்தனை வடிவங்களையும் உள்ளடக்கிய கோயில் எழுப்பும் பொருட்டுச் செங்குட்டுவன் பணித்தமையால், அனைத்துக் கிளையினரையும் அவை சேர்த்து அவள் திறம் நாட்டுவதற்கான ஊர் பலவற்றுக்கும் சென்ற சாத்தன் இளங்கோவைச் சந்தித்து உரையாட, குணவாயிற்கோட்டத்துள் தமிழும், செஞ்செயல் மொழியும், குணமொழியும் மொழியும் கற்றுத் தேர்ந்து, நூலறியா நுண்மையிலேயே நூலோர் அறிவும் மெய்ம்மை உறைவதாக அறிந்து, அறியாப் பெண் ஒருத்தியை அறிவமர் செல்வி ஆக்கிய பெரு வல்லமை யாது எனத் தேடிச்செல்லும் துணிவில் நூல் உருவானதாக கூறிய, இளங்கோ, ஐயப்பன் ஆகின்றார். மூலக்கதைச் சிதைவு இல்வழி, இம் மாற்றங்கள் ஆசிரியரின் புதுமை விழைவின்பாற்படுகின்றன எனக் கொள்ளலாம். கொழுநனுக்காக வாழும் கற்பரசி ஆன மெய்யறத்தின் முதற்படியையும், தன் குமுகத்திற்காகவும், மாந்தக் குலத்துக்காகவும்

அறச்சீற்றம் கொள்ளும் இரண்டாம் படியையும், வெறுமையின் பீடத்திலேறி முற்றத்தின் கருணையைக் கண்ட மூன்றாம் படியையும் முறையே, புகார், மதுரை, வஞ்சியில் அடைந்தமையால், வெண்தாமரை ஏந்திய 'பிரக்ஞாதாராதேவி' எனச் சாக்கைய மொழியிலும், 'பிஞ்ஞாதாரா' என வடமொழியிலும் (மங்கலாதேவி என மலையாளத்திலும்) அழைக்கப்படும் மாந்தப்பிறவி அல்லாத அறிவே அவளாகி அண்டங்களை ஆளும் பேரறமே உடல் ஆனவள் என கண்ணகி விளக்கப்பெறுகின்றாள்! ஏற்றுக்கொள்வோம். கற்பெனும் முதற்படி தாண்டாமல் ஏனைய இரண்டும் இல்லை அல்லவா? அறியாப் பெண் கண்ணகி, எதை அறிந்து அறிவமர் செல்வியானாள்? வழித்துணையாக வந்த வடிவில்லாத் தெய்வமாகிய நீலியின் கடவுள் தன்மை இவளுக்கும் வந்ததா? அவள் வழியில் உள்ள ஊர்களின் நிகழ்வுகளையும், ஐவகை நிலங்களை அறியும் வகையில் நீலி பரிந்துரைத்த பசுங்கன்று தவளை, மீன், குரங்கு, செந்நாய்ப் பார்வைகளால் உலகியல் அறிவு பெற்றாளா? மெய்ம்மையைக் கண்டறிய இந்த உலகியல் அறிவு போதும் என்றால், புத்தர் போன்றோர் ஏன் உலகியலைத் துறக்கின்றனர்? கோவலனின் மாபெருந்தவற்றை மறைக்கக் கடவுள் தன்மை கண்ணகிக்கு ஏற்றப்பட்டதா? இதே உயர்வும், சிறப்பும், எல்லாப் பெண்களுக்கும் உண்டு என்றால், கோவலன், கண்ணகிக்குப் பின்னர், அத்தகைய வாழ்வு கொண்டோர் இல்லையாதலால், அவர்கள் பற்றிய நூல்கள் இல்லையா? எனச் சிலம்பில் எழும் வினாக்கள் கொற்றவையில் மேலும் அழுத்தமும் வலிமையும் பெறுகின்றன, அல்லவா? வலியது கூறும் இப்புனைவால் என்ன பயன்? என்ற எதிர் வினாவும் எழுகின்றது.

அறக் கூற்றுவனும் அறிவார்ந்த வினாக்களும்

மேலும் கோவலன், அரசன் செய்த தவறு போன்றவை தொடர, அறமே கூற்றாகி ஆண்களையும், அரசையும் அழித்துக் கொண்டே இருக்க வேண்டுமா? "மனிதர்களையே நடித்துத் தாம் எதற்காகப் படைக்கப்பட்டோம்: எங்கே அமர்கின்றோம்" எனத் தமக்கே தெரியாத நீலி, கண்ணகி எங்குச் செல்ல வேண்டும். அங்குச் செல்ல அவளைப் பண்படுத்த வேண்டுவது எங்ஙனம் என்பதை எப்படி அறிய இயலும்? என்ற வினாவும் தவிர்க்க இயலாததன்றோ? இவ்வாறான அறிவார்ந்த வினாக்கள் எழுப்பப்படும் நடப்பியல் பற்றிக் கருத்தில் கொள்ளாத மறுபடைப்புக்களால், ஆசிரியரின் படைப்பாற்றலும், எழுத்துத்திறனும், அரும் முயற்சியும், கடும் உழைப்பும், தமக்குரிய பயனைத் தராமல் போவது எந்த வகையில் ஏற்றுக் கொள்ளத்தக்கது?

மாற்றமும் மாற்றுக்குறைவும்

மாற்றங்களால் தாக்கம் எதுவும் இல்லாதவற்றில் மாற்றங்களும், தாக்கம் ஏற்படுத்த வேண்டியவற்றில் மாற்றம் இன்மையும் ஆன போக்கு,

இத்தகைய கூறுகளில், ஆசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கையையும், மாற்ற விரும்பாத பார்வையையும் உணர்த்துகின்றது.. பெண்மை சமயம் இரண்டும் இக் கூறுகளுள் முதலிடம் பெறுகின்றன. 598 பக்கங்களைச் சுவைத்து மனம் ஒன்றிப் படித்து முடித்துவிட்டு, அசைபோடுகையில், தனக்கென்று எதுவும் இல்லை என்று உரைக்கும் உண்மை கூட, நூலின் மாற்று தன்னையுமாறியது குறைவதைப் பெண்கள் மட்டுமின்றி நடுநிலையாளரும் உரை இயலும்.

படைப்புலகும், சிந்தனைத்தேவையும்

காற்று, நெருப்பு, கடல், நீலம், ஆழம், முத்து, முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதம் போன்ற அஃறிணை, நுண்பொருட்களுக்கு வியக்கத்தக்க புதிய பொருள் கூறும் கொற்றவை - காதல், ஆண், பெண் இணைவு, காமம் போன்றவை, உயிர்த்தல், இமைத்தல், உண்ணல் போன்ற தன்னிச்சை உணர்வுகளே! இவற்றைப் பழமை சார்ந்து தனியே பிரித்து மிகையாகப் புனைவது தேவையா என்பதைப் படைப்புலகம் சிந்திக்க வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது என்றே கொள்ள வேண்டும்.

கண்ணகியும் அந்நியப்படலும்

முன்னர்க் கூறியது போன்று இனப்பண்பாட்டுச் சிக்கல் கொண்ட இராமாயணம் பல சமயத்தவராலும் வேறுவேறாக எழுதப்பெற்றுள்ளது. இதனடிப்படையில் இக்காப்பியத்துக்கு மறுபடைப்பும், மாற்றுப் படைப்பும் இன்றும் எழுதப்பட்டு வருகின்றன. ஆனால் சிலம்பை நோக்க, இவ்வாறான சிக்கல் எதுவுமில்லை. காலத்துக்கேற்றவாறு கற்பு, ஊழ்வினையும் மாற்றம் பெற இயலாது. ஏன் எனில் பொறுமையும், கற்புமே கண்ணகியின் பெருமையும் கதையுமாகும். இவற்றில் மாற்றம் புகுத்தினால் கதையே இல்லாமலாகிவிடும். கற்பின் வழி அன்றி அரசியல் அறம் உரைக்கும், அல்லது அழிக்கும் திறனும் இல்லை. இந்த வகையில், கற்பின் ஆற்றல் கடவுள் தன்மை பெறுவதே மீண்டும் மீண்டும் கூறப்பெறுகின்றது. இதனால், கண்ணகி படிப்போரின் உள்ளத்தில் அந்நியப்பட்டு நிற்கின்றாள்.

சமயச்சார்பின்மையும் சமயப் பொதுமையும்

கண்ணகி சமயச்சார்பற்றவளாய்ச் சிலம்பில் உலவ, கொற்றவையில் சாக்கியரும், பிற சமயத்தவரும் வணங்கும் சமயப்பொதுமை பெறுவதாகக் காட்டப்படுகின்றது. சமயத்துக்கு அப்பாற்பட்டவளுக்குச் சமயப் பொதுமை எதற்கு ஏற்றப்பட வேண்டும்? கண்ணகி, உணவு துறந்து ஊன் வற்றி உயிர் பிரிந்து சிலை வடிவு பெறுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு கண்ணகியின் உயிர் முகத்தில் ஒளி பெற்றுப் பிரிவது முத்தேக சித்தியின் பாற்படுமோ என்ற ஐயமும் எழுகின்றது. இத்தகைய வலிந்து கூறும் மாற்றம் எற்றுக்கு? என்றே தோன்றுகின்றது.

சமகாலப் பொருத்தமும் மறுபடைப்புகளும்

கண்ணப்பரின், கண் இடந்து பொருத்தும், செயல், இடந்த முறை தவிர்த்து, 'உறுப்புக்கு உறுப்பு' என்ற இன்றைய மருத்துவ அறிவியலுக்குப் பெருந்தும் எனக் கண் மருத்துவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால், இனிமேல் குழந்தைக்குத் தாயாகி அமுதூட்டுவது இல்லை என்ற மறுப்பு அல்லது துறப்பின் வெளிப்பாடான கண்ணகியின் உறுப்பு இழந்த முறை, ஒருபோதும் இயலாத ஒன்று, இச்செயலின் வன்கொடுமையும், அருங்கடுமையும் கடவுள் தன்மையால் மறைக்கப்பட்டுள்ளது.. அன்று இத்தகைய புனைவுகள் வினாவிற்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கலாம், இந்நாளிலும் அச்செயலையே போற்றிப் புகழ்வது மறுப்படைப்புக்களில் தேவையா ? உறுப்பு அரிந்த போது சிந்திய செங்குருதி முத்துக்கள் முளைத்து அரத்த நிற மலர்களாயின. இச்சுருளிக் காடெங்கும் அவளது ரத்தமே நிலத்திலும், நீரிலும் நிறைந்து நிற்பதாகக் கூறும் குலக்கதைகள் நினைவு கூரப்படுவதால் யாது பயன் ? பெண்ணுலகு சார்பில் மட்டுமின்றி இன்றைய அறிவியல் உலகு சார்பிலான இவ்வினாக்கள், இடம் பெறாவகையில் அமையும் மறுப்படைப்புக்களே சமகாலத்திற்குப் பொருந்துவனவாகும்.

கவுந்தியும், நீலியும்

முன்னர்க் குறிப்பிட்ட வண்ணம் தமிழ் இலக்கிய உலகில் படைப்பாக்கச் செறிவால் உயர்ந்த, இடத்தைப் பெற்று உறைபவருள் நீலியும், கவுந்தியும் அடங்குவர். கவுந்தி ஆணா, பெண்ணா என்ற ஆய்வுலக ஐயத்துக்குள் நுழையாது கடவுள் தன்மை கொண்ட நீலியையும், தவ வலிமை பெற்ற கவுந்தியையும் இணைத்துள்ளமை, ஆசிரியரின் புதுமை கூறும் விழைவின் துணிச்சலைக் காட்டுகின்றது. முரண்பட்ட படைப்புக்கள் ஆகையால் இணைப்பை முழுமையாக்க இயலாத நிலையும் வெளிப்படுவதைக் காணலாம்.

கவுந்தியும், மாற்றச்சிக்கலும்

'நீ யார்' என வினவும் கண்ணகியிடம் ஏற்கனவே கூறியவாறு பெயரும். தோற்றுவாயும் நானே அறியாதவை, எங்கிருந்து வந்தோம். ஏன் அங்கே அமர்ந்தோம் என அறியாமல் ... பரந்து வாழ்கிறோம் என மறுமொழி கூறும் நீலியின் கூற்றே அவள் படைப்புக்கும் பொருந்துகின்றது.. சங்கமன் மனைவி நீலியோ என ஐயம் தோன்றும் நிலையில், 'கண்ணகியின் ஆடிப்பிம்பம்' என்றும், மணமகள் அறியாத அவள் வண்ணச் சீறடிகளை மண் தொட்டு நிற்க வைக்க வந்தவள் என்றும் கண்ணகி, ஆழத்தில் எங்கும் நில்லாது, எதையும் அணியாது, எவரும் காணாமல் காட்டுக்குள் கொட்டிக் கொண்டிருக்கும் அருவியொத்த பேராற்றல் கொண்டவள் அந்த அருவி வரை அவளுடன் பறந்து வர வல்லூறுகள் தவிர, சிறகு மெலிந்த வெண்புறா போன்ற கோவலனால் இயலாது என்றும், தான் கண்ணகியை விட்டு விலகினால்

அந்த இடத்தில் வைப்பதற்குக் கண்ணகியிடம் எதுவும் இல்லை எனவும், கண்ணகி இப்போது பெற்றுள்ள உவகையையும், விடுதலையையும் மீண்டும் பெற இயலாது எனவும், இந்த நீண்ட பயணத்திலேயே, சிறுமியாக இருக்கும் அவளைப் பெண்ணாக்க இருக்கும் கடவுள் என்றும் பலவாறாகக் கூறுவது நீலி இன்றிக் கண்ணகி கடவுள் தன்மை பெற இயலாது என்ற உண்மையும், கவுந்தியால் இந்த மாற்றம் இயலாது என்ற சிக்கலும் கொண்டதாகும்.

ஏற்பு இன்மையும் பொருத்தமும்

நெறியின் நீங்கி நீரல கூறிய வம்பப் பரத்தையும், வறுமொழியாளனும் கவுந்தியால் கெடுமொழி கூறப்பெற்று நரியாகிக் கோவலன் வேண்ட, மீண்டும் மனித உருப்பெறும் நிகழ்ச்சி, கொற்றவையில் நீலியின் கடவுள் தன்மையால் (மூவர்) நரி போல் ஊளையிட்டு ஓடுவதாகக் கூறியுள்ள மாற்றம், நரியாவதும், மனிதனாவதும் இயல்பு மீறிய இயற்கை இறந்தது என்பதால் எனின், பிற இடங்களில் இயற்கை இகழ்ந்த நிகழ்வுகள் பல உள்ளன என்பதையும் உளம் கொள்ள வேண்டும். சருகிலும், கல்லிலும் பொதிந்து கிடக்கும், ஊன் பலியும், குருதிப் பூசனையும் வேண்டும் ஐம்புலக் கடவுட் பெண்டிர் கதைகள் கவுந்திக்கு ஏற்புடையவை அன்று. ஆயினும் கவுந்தியைத் தவிர்க்க இயலாத வகையில் ஐம்புலக் கடவுளருள் ஒருத்தியான நீலி கடவுள் தன்மையையும், கடவுளாகப் போகும் நிலையையும் கண்ணகிக்கு ஏற்றிடப் பொருத்தமாகின்றாள்.

நீலியும் ஆய்வுலகும்

மாங்காட்டு மறையோன்,மதுரைக்குச் செல்லும் வழியில் உள்ள மூன்று வாவிகள் பற்றிக் கூற, கவுந்தி அவற்றில் நீராடத் தேவையில்லை என்று மறுக்கின்றாள். கொற்றவையில் நீலி, கோவலனின் கனவில் அவற்றைக் காணுமாறு அழைத்துச் செய்யும் மாற்றம், கோவலனின் முற்பிறப்பு, எதிர்கொள்ள இருக்கும் நிகழ்வுகள் பற்றிக்கூறுவதற்கும், ஆசிரியர், படித்தறிந்த பல்துறைக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான உத்தியே! இன்னும் பல கூற இடம் இருப்பினும் விரிவு அஞ்சி விடுக்கப்பட்டு உள்ளது. தெளிவான கதையோட்டத்திற்கான பாத்திரப்படைப்புக் கொண்ட கவுந்தியை, நீலியாகவும் ஒருவரில் இருவராக மாற்றியுள்ளதில் பொதிந்துள்ள நோக்கம் முன்னர்ப் புலனாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவுகளை ஆய்வுலகம் ஆராயும் என்பதில் ஐயமில்லை.

அறிவார்ந்த கற்பனையும் வள்ளுவர் கருத்தும்

பதி எழுவறியாப் பண்புகெழு மூதூர் மதுரையில் தீது தீர் தென்னவனின் வளையாத செங்கோல், கோவலன் கொலைக்களப்பட்டபோது வளைந்து, மன்னனின் உயிர் நீப்பில் நிமிர்ந்தது எனச் சிலம்பு கூறுகின்றது. பழையன், முதலான எண்குடிப்பூசலும், சமகால

அரசியல் கட்சியை நினைவுபடுத்தும் வகையிலான ஆட்சிக்கட்டிலில் உள்ளோரின் அணுக உறவுகளின் அரசியல் ஆதிக்கமும், இன்றைய ஊர்வலங்கள், வன்முறைகள், விழாக்கள் போன்ற சிலம்பணி விழாவும் ஆகிய அறிவார்ந்த, ஆழமான கற்பனைகளால் மதுரை அரசு வீழ்ந்தது என்ற மாற்றம், வள்ளுவரின் கருத்துக்களை எதிரொலிக்கின்றது. பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்பும், உறுபசியுமாய் நாள்தோறும் நாடி முறைசெய்யாதும், சூழாதும் கோல் கோடியமையால் கூழும், குடியும் ஒருங்கிழந்தது பாண்டிய அரசு எனக் கொற்றவை கூறுகின்றது.

தீ எரிப்பும், குழப்பமும்

அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர் சிந்திய எளியவர் தம் குமுறலின் வடிகாலாகக் கண்ணகியுடன் கட்டமாகப் பின்தொடர்ந்து சென்றமை பல்லாயிரம் பெண் கடவுளர் சென்றதாகக் காட்டப்பட்டுள்ளது. கண்ணகி பறித்து எறிந்த உறுப்பால் பற்றிக்கொண்ட தீ, அழலவனுக்கு இட்ட முன்னைய ஏவலின்படி அவனால் மூட்டப்பட்டது எனச் சிலம்பு கூறுகின்றது. இரண்டுமே கற்பனைகள் எனினும், எதை ஏற்பது எதை மறுப்பது என்ற குழப்பம் இனி ஏற்படவே செய்யும்.

மதுரை அழிப்பும், சமகால வினாக்களும்

மறுபடைப்புக்களில் எழுப்பப்படும் சமகால வினாக்கள் கொற்றவையிலும் இடம் பெறவே செய்யும். மதுரை மக்கள் மன்னன் காவாதொழிந்தமையால் அல்லலுக்குட்பட்டுள்ளார்கள். அவர்கட்கும் கண்ணகிக்கும் எத்தொடர்பும் இல்லை. மதுரைக்கு முற்றிலும் புதியவள். தன் தனிப்பட்ட வாழ்க்கையில், தம் பொறுமையும், கற்பும் காரணமாக வாழ்வு இழந்து, மதுரை வந்த இடத்தில் கணவனை இழக்கின்றாள். புகாரில் கிடைக்காத வாழ்வும், அதன் காரணமுமாக மன அழுத்தம் பெற்ற கண்ணகிக்கு, மதுரையில், வாழ்வு இல்லை என்று உறுதியான நிலை. சாதுமிரண்டால் காடு கொள்ளாத வகையில் அவளைக் கிளர்ந்தெழச் செய்கின்றது. அடக்கி வைக்கப்பட்டிருந்த துணிவு வெளிப்பட அறம் உரைத்து அரசன் வீழ்ந்த பின்பு, மதுரையை எரிப்பது எப்படி அறமாகும் ?

அன்றைய கண்ணகியும், இன்றைய கண்ணகியரும்

இவ்வாறு ஊரை அழிப்பது சரியாகுமா ? அழித்தது சிற்றூர் கூட இல்லை ! மாபெரும் நகரம் ! தீத்திறத்தார் மட்டும் தனியே வாழ்வது இயலுமா ? இன்றைய குடியாட்சியிலும் மக்களைக் காக்கும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர், நீதி வழங்கும் கடமையோர், குற்றங்களைத் தடுத்து ஒறுக்கும் காவலர் ஆகியோரிடையே கலந்துள்ள கோவலன்களால் வாழ்விழக்கும் கண்ணகியர், சிலம்பு, கொற்றவை கண்ணகி போல் செயல்பட இயலுமா என்ற வினா எழக்கூடிய வாய்ப்பை உளம்கொண்டாற்போன்று அவளது

செயலுக்குக் கடவுள்தன்மை ஏற்பட்டுள்ளது. தனியொருவர் சட்டத்தைக் கையில் எடுக்காத வண்ணம் அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்ற நம்பிக்கை கொள்ள வைக்கப்பட்டுள்ளது.. எனினும் பெண்ணின் ஆற்றல் அழிவின்பால் திருப்பப்படுவதைச் சமகால மறுபடைப்பும் போற்றுவது கற்பனையில்தான் என அமைதி கொள்ள வேண்டியுள்ளது.

கொற்றவையும், தமிழ் இலக்கியமும்

தொன்மை வளம் சான்ற மொழியின் சிறப்பைத் தமதாக்கிக் கொள்ளும் வகையில், அதற்கு இறைத்தன்மை ஏற்றிக் கடவுள் கற்பனை சார்ந்த தலைவர்கள், சங்கம், புலவர்கள், காலம், இடம், புனைந்துரைக்கும், காலத்தால் பிற்பட்ட இறையனார் களவியல் உரைப் புனைவுகளைக் கொற்றவை அவ்வண்ணமே ஏற்றுக் கொண்டு அவற்றைத் தமிழ்வயமாக்குவது, தமிழ் இலக்கிய உலகின்போக்கிற்கு உட்பட்டதாகவே உள்ளது.. சிலப்பதிகாரப் பதிகம், தொல்காப்பியப்பாயிரம் போன்றவற்றின் கால இடைவெளியைக் கருத்தில் கொள்ளவில்லை. அகத்தியர், தொல்காப்பியர் பற்றிய செய்திகள் இதற்கு எடுத்துக்காட்டாகும். பதிகம், பாயிரம் போன்றவை பின்னர் எழுதப்பட்டவை அல்லவா ?

கருத்தாக்கமும், கடவுளும்

தொடக்ககாலக் கடவுள் பற்றிய கருத்தாக்கங்கள் காலப்போக்கில் கடவுளர் கற்பனையாகி இவையே நிலைத்து விட்டமையாலும் கருத்தாக்கங்களும், கடவுளரும் மறுக்கமுடியாத சிக்கலுக்கு உள்ளாவதாலும் இவை இரண்டுமே இடம்பெற்றுள்ளன. பிறப்புக் குழப்பத்துக்குரிய முகமூடி விதிகளும் பின்னர் மயில், வேல், வில், மழு, எலி போன்ற சின்னங்கள் கொண்ட குடித்தலைவர்களும் வடவணிகரின் தொடர்பால் கண்ணனும் என மாற்றி மாற்றிக் கூறுவதில், இவற்றின் மீதான குழப்ப நிலை புலனாகின்றது.. எனவே, பண்டைத் தமிழரின் எளிமையும், இயற்கையும் சார்ந்த வழிபாடுகள், அதாவது கடவுள் எனும் கருத்தாக்கங்கள் மறைந்து, வடவரின் கற்பனைகள் இக்கருத்தாக்கங்களுடன் கலந்து கடவுளர் நிலைபெற்றனர். இவர்களுக்கான கோயில்கள், ஊர்களில் முதல் அடுக்கு இரண்டாம் அடுக்கு என்ற வகைகளில் உருவானபோதும் பின்னாளில் போன்று, சடங்குகள் ஆதிக்கம் பெறத் தொடங்காமையும், அறியப்படுகின்றது தொடக்கக்கால வழிபாடாகிய அன்னை வழிபாடே, அனைத்து நாட்டுக்கும், சமயத்துக்கும் அடிப்படை என்பதை நிலை நாட்டும் முயற்சியில் கண்ணகி, கொற்றவையின் தோற்றப்பிறப்பே எனும் கருத்து, கொற்றவை இலக்கியக் கோயிலின் மூலப்பொருள் எனலாம்.

கொற்றவையும் மூன்று அறங்களும்

சிலம்பின் மறுபடைப்பு எனக் கொள்ளும் வகையில் பதிகம் கூறும்

மூன்று அறங்களில் இரண்டு இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாதவை. ஒன்று, செயல்படுத்த இயலாத அல்லது செயல்படாத நிலை ஆம்! கற்பின கட்டமைப்பு உடன்பாட்டு வகையிலும் எதிர்மறை வகையிலும் இரு முனைத் தாக்குதலால் தளர்ந்து, தகர்ந்துள்ளது.. அறம் பிழைப்போரே அரசியலில் இடம் பெற இயலும் என்ற தலைகீழ் மாற்றம். எனவே அறத்தை நிலைநாட்டும் வகையில் பெண் வடிவில் கூற்றுவன் தோன்றுவான் எனின். இவ்வுலகில் ஒருவருமே எஞ்சியிருக்க முடியாது! ஆயினும் கொற்றவை நடைமுறையில் இல்லாத ஒன்றை, இயலாத ஒன்றை எடுத்துக்காட்டும். கற்பனை தரும் இன்பமும், கவையும் தவிர விழிப்போ எழுச்சியோ ஏற்படுத்த இயலாத வகையிலான அரும்பெரும் முயற்சியே. இதைப் பின்வரும் கருத்துக்களின் வாயிலாக விளக்கமாகக் கூறலாம். ஊழ்வினை, சிலம்பைப் போன்று அழுத்தமாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிலம்பும், சமுதாயச் சிக்கலும்

கைலாசபதி வகைப்படுத்தும் சமுதாயப் புதினங்களின் பகுப்பு, ஏனைய இலக்கியங்களுக்கும் பொருந்துவதாகக் கொள்வதில் தவறில்லை. சமுதாய நிகழ்வுகளை எடுத்துக்காட்டுபவை,. சமுதாயச் சிக்கல்களைக் கூறுபவை. சிக்கல்களோடு அவற்றைத் தீர்க்கும் வழிகளையும் கண்டறிந்து மொழிபவை. சிலம்பை நோக்க, பரத்தையர் பிரிவு எனும் சமுதாயச் சிக்கலே கண்ணகியின் கதைக்குக் காரணம் மாதவி இன்றிக் கண்ணகி இல்லை! இச்சமுதாயச் சிக்கலை எங்ஙனம் தீர்ப்பது? பரத்தையர் பிரிவு என்ற ஒழுக்கமும், அவ்வினமும் இல்லாமல் செய்ய வேண்டும் ; இதை யார் செய்வது? அவர்களே இவ்வொழுக்கத்தின் இழிவும், அழிவும் உணர்ந்து கைவிட்டால், வேறு பக்கவிளைவுகள் இல்லாத மாற்றம் நலமே உருவாகும். எனவே, மாதவியும் அவள் மகளும் இவ்வொழுக்கத்தைத் துணிந்து மீறுகின்றனர். பரத்தையர் பிரிவு எனும் சமுதாய ஒழுக்கம் சமுதாயச் சிக்கலே என்று கொள்ளும் வகையில் அன்றைய சிலம்பின் கருத்துக்கள் உள்ளபோது, இன்றைய கொற்றவையில் இதைத் தவிர வேறு சிக்கல் தீர்வு என எதுவும் காணப்படவில்லை. எனவே இன்று இலக்கியம் வாழ்க்கைக்காக என்ற கோட்பாட்டில், சமுதாய மாற்றம் உருவாக்கும் வலிமை கொண்ட இலக்கியம், குறிப்பாகப் புனைகதைகள் பொழுதுபோக்கும், இன்பமும் தரும் பயனுக்கு அப்பால், சமுதாயத் தேவைகளுக்கும் குரல் கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ளது. சமுதாயச் சிக்கல்கள் அனைத்துக்கும் அடிப்படையான சிக்கல்களைக் கொண்ட மகளிர் சமுதாயத்துக்கு இலக்கிய உலகின் அரும் முயற்சியும், பெரும் படைப்பும் நல்கும் பயன் யாது என்ற வினாவின் பேருருவையும், படைப்பாக்கத் தேவையையும் மறுபடைப்பு எனும் வகையில் கொற்றவை கருத்தில் கொள்ளவில்லை. முன்னர்க் குறிப்பிட்டுள்ள, சமுதாய நிகழ்வுகளை எடுத்துக்காட்டும் முதல்வகை இலக்கியம் சார்ந்ததாக உள்ளது.. ஏற்கனவே

நிலவும் மகளிர் சமுதாயச்சிக்கலுக்குத் தேவையற்ற, இறைத்தன்மை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. சமகாலத்தின், அரிதான வியக்கத்தக்க ஒரு முயற்சியில் இந்நிலைபாடு பெரும் ஏமாற்றத்தையே தருகின்றது.

மணிமேகலையும் திருப்புமுனையும்

மணிமேகலை வரலாற்றில் உதயகுமாரனின் பங்கை அவள் கனவில் மட்டும் காட்டி, மேலைநாட்டுப் பல்துறை அறிவும், காப்பிரியர் போன்றோரைப் பண்படுத்தும் திறமும் பெற்றவளாகக் காட்டப்பட்டுள்ளது. 'அட்சய பாத்திரம்' எனும் வற்றாத உணவுக் கலக் கற்பனைக்கு மாற்றாக அறச்சாலைக்குத் தேவைப்படும் பொருளை அவள் பெறும் வழி அறிவுக்கு இயைந்த கற்பனையுடன் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை, கடவுளாக்கப்படும் நோக்கம் இன்மையால், இந்த மாற்றங்கள் ஏதுவாகியுள்ளன எனலாம். திருமணமும், கற்புமே வாழ்க்கை என்ற ஒரு சமுதாயத்தில் அவற்றை விடுத்து, அறவோரையும், அந்தணரையும் ஓம்புவதே இல்வாழ்க்கை என்ற விதியை விரித்து, வறியோர்க்கும் நலிந்தோருக்கும், உடல் உறுப்புக்குறைந்தாருக்கும் உணவு அளித்து உயிர் கொடுக்கும் மணிமேகலையின் படைப்பு, கண்ணகி சீதையை விடவும் சிறந்த படைப்பு. கற்பின் அடிப்படையில் இவள் போற்றப்படாமை பெண் சமுதாயம், தானே உருவாக்கிக் கொண்ட வரலாற்றுத் திருப்புமுனை எனலாம். ஆயினும் இம்மாற்றம் தொடராமல் எச்சரிக்கையுடன் படைப்புலகம் தவிர்த்துவிட்டது என்பதும் உண்மை.

மூல இலக்கியமும் உணர்ச்சியும்

மூல இலக்கியங்கள் தரும் உணர்ச்சி பற்றி அறிவோம். இன்னதென்று எழுத்தால் விளக்க முடியாத ஓர் உணர்வை ஓர் இலக்கியம் தந்து, அதுவே நிலைத்து விட்டபின்பு அதன் தொடர்ச்சியான மறுபடைப்பு அத்தகைய ஓர் உணர்வை மீண்டும் தருவதில்லை. அதுவே இலக்கியத்தின் உயிரும், உயர்ந்ததுமான தனிச் சிறப்பு. தமிழ்ப் புதின வரலாற்று உலகில் பெரும் எழுச்சியைத் தோற்றுவித்த வரலாற்றுக் கற்பனைப் புதினமான 'பொன்னியின் செல்வனின்' தொடர்ச்சியான விக்கிரமனின் படைப்பும், சமுதாயப் புதினமான 'அக்கினிப் பிரவேசத்தின் தொடர்ச்சியான ஜெய காந்தனின் படைப்பும் இவ்வுண்மைக்குச் சான்றுகள் ஆகும். எவ்வகை இலக் கியமாயினும், உச்சக்கட்டம், வீழ்ச்சி, முடிவு எனும் வகையில் அது நிறைவடை யும் ; இம்மூன்றுமே படிப்போரின் உணர்ச்சியைத் தம் வயப்படுத்திக் கதை யின் முடிவில் ஒன்றிவிடச் செய்யும் ஆற்றலுடையவை. உள்ளம் அந்த முடிவை ஏற்றுக்கொண்டு அதன் வயமான பின்பு, தொடரும் கதை, அதே எழுச்சியும், துடிப்பும், உயிர்ப்பும் மிக்க உணர்வைத் தருவதில்லை. சிலம்பின் வஞ்சிக் காண்டம், இவ்வாறு அமைவதால்தான், மூவேந்தருள் பாண்டியர், சோழர், இடம் பெற சேரன் இடம்பொறாமையைப் போக்கும் வகையில் பின்னர் வேறு ஒருவரால் எழுதப்பெற்று இணைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்.

மூலக்கதையும், ஒன்றா நிகழ்வுகளும்

கொற்றவை. இந்த இயல்பைப் பெற்று வஞ்சிக்காண்டத்தின் நீட்சியாக 'உரை வகுத்தது' பகுதி அமைந்துள்ளது. சேரநாட்டில் புத்த சமயச் செல்வாக்கையும் அதன் அடிப்படையில் கிளைத்த அன்னையர் வழிபாட்டு வரலாற்றையும் கற்றுணர்ந்த ஆசிரியர், அவை அனைத்தையும் பகிர்ந்து கொள்ளும் விழைவு, சாலமிகுத்துப் பெய்த பீலிபெய் சாகாடாகக் கண்ணகி கதையைப் பெருக்கியுள்ளது. மீ மிகைச் செய்திகளால் நிரம்பி வழிகின்றது.. காளன், சூரன், டச்சுக்காரர், ஆசிரியரின் சுற்றுலா போன்றவை குறையுடையவை அல்லபோதும் மூலக்கதையுடன் ஒன்றாமல் நிற்கின்றன. இவை கிளைக் கதைகளே. ஆகையால், இவை இன்றியும் நூல் சிறக்கும். சிலம்பில் காணப் படும் 20 கிளைக்கதைகள் கொற்றவையில் பலவாகப் பெருகி உள்ளன.

கொற்றவையும் அடர்பசுங்காடும்

தொல்குடி இனக்குழுக்கள் பாண்டிய, சோழ அரசுகளாய் மலர்தல், வேர்ச்சொல் விளக்க அடிப்படையில் சொல்லும் மொழியும் தோன்றல், வணிகரின் செல்வாக்கு, அவர்கள் உட்படப் பல குடிகளின் சமுதாயநெறிகள், சடங்குகள் இவற்றில் சிலம்பு பெறும் தலையாய இடம் ; ஐவகை நிலத்தோற்றம் ; அவற்றின் உணவும் தொழிலும், கருவியும், காட்டு வெளியில் நீரைத் தூய்மைப்படுத்தும் முறை, தமிழ்சார்ந்த சித்தவியல், மெய்யியல், வடபுல வணிகம், மருத்துவம், சமயம், நகரமயமாதல், சிற்றூர்களின் நலிவு, மலை நிலமும், விளைநிலமும், நாடாதல், அரண்மனை, கோட்டை என உலகியல் சார்ந்த அனைத்தும், சமயம் சார்ந்த கருத்துக்களும், நம்பிக்கைகளும், நிகழ்வுகளும், குலக்கதைகளுமாய் மரமும், செடியும், கொடியும், கிளையும், மலரும், மணமும், காயும், கனியும், கிழங்கும், தேனும் செறிந்து விரிந்த ஓர் அடர் பசுங்காட்டுக்குள் சமகால நினைவும், உணர்வும் இன்றி உலவி, உவகை கொள்ளும் உணர்வை கொற்றவை அள்ளித் தருகின்றது.

வரலாற்று உண்மையும் களவியல் களவியல் செய்திகளும்

குமரிக்கண்டமும், இடைவிடாத போராழிப் பெருவெள்ளமும், தொல்குடிமக்களின் இடப் பெயர்வுமான வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் தமிழர் வரலாறு, இலக்கியப் பின்னணியிலும், மொழி, வரலாறு, இறையனர் களவியல் உரைச்செய்திகளின் அடிப்படையிலும் கூறப்பட்டுள்ளன.

பத்தினிப் பெண்டிரும் பழந்தமிழ்ப்புலவரும்

வன்னி மரமும், மடைப்புள்ளியுமான சான்று, கல்லுருவம், குரக்கு முகம், மண்பாவை மணம், சிறு மகவு மணம் சார்ந்த சிலம்பின் பத்தினிப் பெண்டிர், மாற்றப்பட்டுக் கொற்றவையில் கற்பும், காமமும், பொறையும், பிரிவும், ஆற்றியிருத்தலும் தரும் இழப்புக்களைத் தாங்கிய பெண்பாற்

புலவர்கள் இடம் பெறுகின்றனர். பாடல்கள், புலவரின் வாழ்க்கை நிகழ்வுகள் அல்லது உணர்ச்சிகளின் வெளிப்பாடே: இக்கருத்தின் அடிப்படையில் புறப் பாடல்களில் காணப்படும் அகவுணர்வுகள் அவர்களின் கதைகளாக்கப் பட்டுள்ளன. அகம் சார்ந்தவை புறத்திலும், புறம் சார்ந்தவை அகத்திலும் காணப்படும் மயக்கம், அகப்புறப் பாகுபாட்டின் செயற்கைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகும் எனும் உண்மை இங்குப் புலப்படுகின்றது.

மையப்புள்ளியும் எழில்மிகு கோலமும்

சிலப்பதிகாரத்துக்கு முத்தமிழ்க்காப்பியம் என்ற சிறப்பைத் தரும் அரங்கேற்று காதை, ககை விசயரின் முடித்தலை நெரித்த மாதவி மடந்தையின் கானற்பாணி, புகழ் பெற்ற மாதவியின் மடல்கள், கோவலனின் சிறப்புக்கூறும் தலைச்செங்கானம் மாடலன், அரட்டன்செட்டி, கவுந்தி சாரணர் உரையாடல், மாங்காட்டு மறையோன் செங்குட்டுவனுக்குக் கூறும் அறிவுரை, பாண்டியன் பண்பு கூறும், பாராசரன், வார்த்திகன் கதை, பொற்கை போன்றவை கொற்றவையில் இல்லை. சிலம்பின் மூவரின் கனவுகளும், கொற்றவையில் பொருள் மாற்றம் பெற்றுள்ளன. ஆசிரியரின் நூல் நோக்கமான கருத்துப் பரப்பலுக்கு ஏற்ப இம்மாற்றங்கள் அமைந்துள்ளன எனலாம். 'காப்பியம் கூறியது' பகுதி சிலப்பதிகார மைய புள்ளியைச் சுற்றிப் பின்னப்பட்ட எழில்மிகு கற்பனைக் கோலம் என்பதில் மிகையில்லை.

மதிப்புரையும், தொகுப்பும்

இன்னும் இயம்பிடப் பற்பல இருப்பினும் அனைத்தையும் தொகுப்பது கொற்றவையின் பக்கங்களை விஞ்சும் நூலாகி விடும். சில நிகழ்வுகளும் காட்சிகளும் எழுத்தில் விளக்க முடியாத கருத்தில் காணமுடியாத ஆழ்மறை பொருளைக் கொண்டிருப்பது போன்ற பல புனைவுகள் சில இடங்களில், கற்கோலமாகவும், சில இடங்களில் நீர்க்கோலமாகவும், புரிந்து கொண்டதை இதுதான் என்று சொல்ல இயலாததாகவும் இருப்பது கொற்றவையின் தனி இயல்பாக மிளிர்வது தனியே ஓர் ஆய்வுக்கு உரியது. மதிப்புரை கண்டறிந்த கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

இலக்கண நோக்கில்

காப்பியம் அல்லது புதினத்துக்குரிய இலக்கணங்களை ஏறக்குறைய முழுமையாகப் பெற்றுள்ள, அன்மைக்காலத்தில் காண இயலாத அரிய படைப்பு.

இலக்கிய நோக்கில்

பழந்தமிழ் இலக்கியத் தேன் சுவையையும் இயற்கை எழில் சார்ந்த இயைபையும், செம்மொழிச் சொற்களையும் உள்ளம் அள்ளும்

புனைந்துரைகளையும், உவகை தரும் உள்ளுறை பொருளையும் உள்ளடக்கிய உயர் காப்பியம்.

அரசியல் நோக்கில்

பழங்கால அரசுகள், அரசநெறிமுறைகள், அரசுகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, வீழ்ச்சிக்கான காரணங்கள் கூறும் ஆவணம்.

சமுதாய நோக்கில்

தொல்குடிச் சமுதாயப் படிமரபு வளர்ச்சி, வாழ்வியல் நெறிகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் முதலியவற்றின் படப்பிடிப்பு.சமய நோக்கில்

கடவுள் கருத்தாக்கம், காலப்போக்கில் கடவுளரானமை, தாய்வழிச் சமுதாய வழிபாட்டின் அடிப்படை அகற்றப்பட்டமை, அன்னையர் வழிபாட்டின் செல்வாக்கு, புத்த, சமண, வடவர் சமயங்கள், மெய்ம்மை நெறிகள், சமயத்துக்கு அப்பாற்பட்ட சித்த, மெய்யியல், தத்துவம், சித்தாந்தம் சார்ந்த கருத்துக்கள் முதலியவற்றின் விளக்கத் தொகுப்பு.

ஒப்புமை நோக்கில்

சிலம்பின் ஊழ்வினையின் இடம், குறைக்கப்பட்டமை, இளங்கோ, கண்ணகி, மணிமேகலை படைப்புக்களின் விரிவாக்கம், நீலி போன்ற புதிய படைப்புக்கள், அடங்கிய, சிலம்பின் முன், பின் விரிவு கூறும் மறுபடைப்பு.

பெண் நோக்கில்

பெண்கள் கற்பில் கட்டுண்ட நிலை, கடவுள் தன்மை ஏற்றம் என்ற வகையிலான மாற்றமில்லா படைப்பு.

திறனாய்வு நோக்கில்

பொதுவாக மறுபடைப்புக்களில் இடம்பெறும் சமுதாயத்தேவையோ, கருத்து கால முரண் நீக்கமோ இல்லை. இளங்கோ ஐயப்பன் தொடர்புப் புதுமையால் பெரிய அளவிலான தாக்கம் எதற்கும் வாய்ப்பில்லை. ஆசிரியரின் கதை நோக்கத்திற்குரிய சிக்கலைத் தவிர்க்கும் படைப்பான நீலி புதிய படைப்புகளால் புதியது என்ற அளவிலான படைப்பாக்கம்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று இராமன், கந்தன், ஔவை முதலான பழம் படைப்புக்களில் காணப்படும் சிக்கல் போன்று எதுவும் இல்லாத வகையில் கொற்றவை, ஆசிரியரின் 'புதுமையாக்க விழைவின்' வெளிப்பாடு எனக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான குடிசைகள் இடிந்தும், சிதைந்தும், அடிப்படை வசதிகள் இன்றியும் பாழடைந்து கிடக்கும் அவலச் சூழலில், கலைநுட்பம் சிறந்த பழைய கோயில்களையும், மாளிகைகளையும் மேலும், மேலும் புதுப்பிக்கும் செயல் நினைவுக்கு வருவதையும் தவிர்க்க இயலவில்லை.

கொற்றவை : சொல்லாத செய்திகள்

முனைவர் நா. நளினிதேவி

மஞ்சளும் சிவப்புமாகி விட்ட இதழியலின் வணிகப் பண்பாட்டுச் சீரழிவின் தாக்கத்திலிருந்து மனிதனின் பசுமையைக் காத்து நிற்பவை சிற்றிதழ்களே. அவற்றுள்ளும் கட்சி, இனம், கடவுள் சார்புக்கு அப்பாற்பட்டு இலக்கியம், மொழி என மணம் பரப்பும் இதழ்களில் கோவை ஞானியை ஆசிரியராகக் கொண்ட தமிழ்நேயமும் ஒன்று. அண்மையில் வெளிவந்துள்ள ஜெயமோகனின் கொற்றவை பற்றிய ஐவரின் பார்வையைக் கொண்டதாகத் தமிழ்நேயத்தின் 31ஆம் இதழ் மலர்ந்துள்ளது. இந்நாட்களில், காண்பதற்கு அரிய தூய, இனிய, செந்தமிழ்ச் சொற்களும், செறிவான இலக்கிய நடையும், வளமான கற்பனையும் கொண்டது கொற்றவை. இவ்வகையில் கொற்றவை யைக் குறைந்தது அய்ந்து முறையேனும் படித்தவர் என்ற முறையில், இப்பார்வை குறித்த கருத்துக்கள் இங்கு இடம்பெறுகின்றன.

அன்றுமுதல் இன்றுவரை இலக்கியத்தின் இனிமை வேறாகவும், பெண்ணின் இடம் அதற்கு மாறாகவும் இருந்து வரும் உண்மைக்குக் கொற்றவையும் விதிவிலக்கன்று. 598 பக்கங்களில் குமரிக்கண்டம் காலம் தொடங்கி டச்சுநாட்டுப் படையெடுப்பு வரையிலான மிக நீண்ட கால எல்லை யில், முதல்மொழி, தமிழ், தமிழ்க்குடி, தமிழரசுகளின் தோற்றம் முதல் சிலப்பதிகாரக்கதை உட்பட, அதன் பின்னர் நடந்த நிகழ்வுகள்வரை ஆசிரியரின் கற்பனைவளம் நூலில் இடம்பெறும் கடல்கோள்கள் எனப் பொங்கிக் கன்னல் தமிழ் எழுத்துக்களாய் வடிந்துள்ளது என்பதில் அய்யம் இல்லை.

கொற்றவை ஒரு பெண்ணின் கதை ஆகையால் அதில் பெண்ணுக்கு எத்தகைய இடம் என்பதைக் கண்டறிவது இன்றியமையாத் தேவை. நூலின் பல்வேறு சிறப்புக்களையும் அழகுற, நட்பினை நயம்பட விரித்துரைக்கும் இவ்வைந்து பார்வையிலும் பெண் நோக்குக் கருத்து இல்லாமை ஏமாற்றம் தருகின்றது. பெண்ணைச் சமய நோக்கில் கல்லாக்கிக் கடவுளாக்கிப் போற்றும் ஆணாதிக்கச் சமுதாயக் கோணமே இடம் பெற்றுள்ளது. நடைச் சிறப்பாலும், கற்பனைத் திறத்தாலும் படிப்போரைத் தன்வயமாக்கும் கொற்றவை இக்காலச் சூழலுக்குப் பொருந்தாத பழங்காலப் பெண்ணியத் தையே புதுமையென மயங்க வைத்துள்ளது. அய்ந்தாவது கட்டுரை மட்டுமே பார்வையின் இறுதியில் நூலின் தமிழ்நடை ஈர்ப்புக்குப் பின்னால் பொதிந்து கிடக்கும் சமய அடிப்படையைச் சுட்டிக்காட்டியுள்ளது. சமயமே பெண் விடு தலைக்குத்தடை என்ற உண்மையை இக்கட்டுரை மறைமுகமாகச் சுட்டுகின் றது எனலாம். கதை பின்ன இயலுமா ? காரைக்கால் அம்மையார், ஆண்டாள் வரலாற்றில் கடவுள் தன்மையை ஏற்றி உண்மையைப் புதைத்தது போன்றதே,

கண்ணகிக்குக் கடவுள் தன்மை ஏற்றிக் கொற்றவை ஆக்கி யுள்ளது என்றால் மிகையில்லை !.

கண்ணகி கதை பழந்தமிழ்க் காலத்திலிருந்து வழங்கி வருகின்ற ஒன்று ! அக்காலப் பெண்ணியச்சூழலில், அரசனை எதிர்த்துத் துணிந்து நின்று தனக் கிழைக்கப்பட்ட அநீதியை உலகுக்கு உணர்த்தினாள் என்ற மனிதப் பெண் ணின் புரட்சியாகவே சிலப்பதிகாரம் காட்டுகின்றது. எனினும் அரசனை எதிர்த்து நின்ற துணிவு பின்னுக்குத் தள்ளப்பட்டு, அவளது கற்பு முதன்மை ஆக்கப் பெற்றது. எந்த வகையிலும் பெண்ணின் தனிப்பெரும் ஆற்றல் வெளி ப்பட்டு விடக்கூடாது என்பதே ஆதிக்கச் சமுதாயத்தின் நோக்கம் ! கொற்ற வையே, கண்ணகியாக உருவெடுத்து அநீதிகளை அழித்தாள் என்றே கொண்டாலும், இதற்கு நேர்மாறாகவும் வினா எழுப்ப முடியும் ? தனி மனிதன் என்ற அளவில், தன் குடும்ப வாழ்க்கையில், கண வனின் தகாத செயலைப் பொறுமை என்ற பெயரில் இடித்துரைத்து, எதிர்க் காமல் விட்டு விட்டு அவன் கொலையுண்ட பின்னர், தாம் எதிர்பார்த்து வந்த வாழ்க்கை இனிக்கிடைக் காது என்ற ஆற்றாமையில் அதுநாள் வரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிக ளின் கரையுடைந்துவிட, தனக்கு எவ்வகையிலும் தொடர்பே இல்லாத மதுரை மக்களை அழிப்பது என்ன நியாயம் என்ற வினாவுக்கு என்ன விளக்கம் ?

தாய்வழிச் சமுதாயத்தின் பெண் கடவுள் வழிபாடே கண்ணகி. கொற் றவை முதல் மங்கலாதேவி உட்பட ஆரியவயமான அனைத்தும் பெண் கடவுள் வழிபாடுகளே என்று விரிவாக கொற்றவை கூறுகின்றது. தாய்வழிச் சமுதாயப் பெண் கடவுள் வழிபாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை இன் றைய வழிபாடுகள் என்பதை ஐந்து பார்வைகளும் எடுத்துக்காட்ட வில்லை. இது ஒருபுறமிருக்க, சமயத்தின் அடிப்படையிலோ, வழியிலோ பெண் சமன் மையும், பெண் சமன்மையையே அடித்தளமாகக் கொண்ட உலக வரலாற்று முன்னேற்றம் ஒருபோதும் இயலாது. பெண், கடவுளாக்கப்படுவதும், வழிபடப் படுவதும், கடவுள் என்பதே கற்பனை என்ற உண்மையில், கரைந்து காணாமல் போய் விடுகின்றனவே ! சமயச்சார்பிலான பெண் விடுதலை முயற்சி கடலில் கரைக்கும் பெருங்காயமே !.

சரியோ, தவறோ, இன்று, இளம்பெண்கள் மனித வெடிகுண்டுகளாகத் துணிந்து செயல்படுவதை உலகெங்கும் மட்டுமின்றி நம் நாட்டிலேயே கண்டோம். விண்வெளியில் நடந்து கொண்டு, கடலுக்கடியில் ஆய்வு செய்யும் ஆய்வகத்தாருடன் தொடர்பு கொண்டு பேசும், கற்பனையையும் விஞ்சும் நடப் புலகில், கண்ணகி, உறுப்பு அரிந்து ஊரைத் தீக்கிரையாக்கி அறம் நிலை நாட்டிய கதையும், அவள் மதுரையை அழித்த பின்னர் 80 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து, இயற்கை முறையில் உயிர்நீத்துப் புத்த சமயத்தாரால் போற்றப்படும் இறைவியானாள் என்ற கொற்றவையின் கற்பனையும் எவ்வாறு கால மாறுதலுக்கேற்ற மறு வாசிப்பு ஆகும் ?

தாய்வழிச் சமுதாயத்தின் பெண்ணின் கட்டற்ற நிலையும், தந்தை வழிச் சமுதாயத்தில் கற்பில் கட்டுண்டு, கண்ணீர்ச் சிறை இருந்து, கற்சிலையாக்கப் பட்டுக் கடவுளாக்கப்பட்ட நிலையையே பல கதைகள் வாயிலாகக் கொற்றவை யும் கூறிக் கண்ணீர் வடிக்கின்றது. கோவலன் கொலை தவிர்த்து பல்வேறு காரணங்களால் இன்னல்களுக்கு ஆளான மதுரை மக்களில் ஆண்கள் வாளாதிருக்க, ஆயிரமாயிரம் பெண்கள் கடவுள் தன்மை பெற்று மன்னனை யும், மதுரையையும் அழித்தமை எவ்வாறு தமிழ்ப் பெண்ணிய அழகியல் ஆகும் ?

கொற்றவை : பார்வை ஒன்றின் முடிவு

பார்வை : 1

கொற்றவை : படைப்புத்தடத்தில் ஒரு பயணம்

கொற்றவையின் இயல் பகுப்புச் சிறப்பையும், உள்ளடக்கத்தையும் விளக்கிச் சிலப்பதிகாரத்தை, கண்ணகி வரலாற்றுக் காலத்துக்கு ஏற்ற முறையில் மறுவாசிப்புக்குள்ளாக்கிப் புலமை மிகுந்த செறிவான நடையில் எழுதப்பட்டுள்ளது என்பது இப்பார்வையின் முடிவு.

பாண்டியனின் அரசாட்சியில் பல் குழுவும், உட்பகையும் நாள்தோறும் நடந்த அரசனின் செயலும் ஆட்சிப் பொறுப்பிலிருப்போருக்கு அணுக்கமான வரின் தலையீடும், அமைதியற்ற சூழலில் சிலம்பணி விழாக்களும், பணம் படைத்தவரின் ஆதிக்கமும் இக்காலத்துக்குரிய அரசியல் பின்னணியில் இடம் பெறுகின்றன என்பதும் புலமையும் செறிவும் மிக்க நடை என்பதும் உண்மை. ஆனால், பெண்ணுலகைப் பொருத்தவரை, இப்பார்வை உண்மைக்கு மாறானதே.

பார்வை : 2

பெண்ணிய நோக்கில் தமிழ்ச் சமூக வரலாற்றின் மறுவாசிப்பு

பழையன கொல்லும் கொற்றவை, முடிவற்ற மாற்றங்களின் தோற்றங்களா கவும் விளங்குவதை வெளிக்கொணர்ந்துள்ளார் என்பதால் நம் அனைவரின் முதன்மைக் கவனத்தைப் பெறுகின்றார் என்கின்றது இரண்டாம் பார்வை.

பெண்ணின் கற்பு, அதன் அடிப்படையிலான கடவுட் தன்மை எனும் பழைய வற்றை கொற்றவை ஆசிரியர் சொல்லவில்லை. மாறாகத் தம் எழுத்தாற்ற லாலும் தமிழ்க் கவிதைக் காவிய நடையாலும் புதுப்பித்து நிலைநாட்டுகின்றார் என்பதையே கொற்றவை காட்டுகின்றது. பார்வைகளும் பெண்ணிய நோக்கி லான தமிழ்ச்சமூக வரலாற்றின் மறுவாசிப்பு, படிப்போரைத் தன்வயப்படுத்திப் பின்னோக்கியே கொண்டு செல்கின்றது.

பார்வை : 3

அன்னையின் கரங்களில் துலங்கும் தமிழ் மானுடப் பரப்பு

இளங்கோவிடமும், படிந்த பார்ப்பனக் கருத்தியலை மீட்டு ஒதுக்கிவிட்டு, அசலான தமிழ் மரபொன்றைக் கொற்றவையில் கொண்டு வருகின்றார் என்பது மூன்றாம் பார்வையின் கணிப்பு.

இறையனார் களவியல் கூறும் செய்திகளின் அடிப்படையிலேயே தமிழ் வரலாற்றை நாம் போற்றுவதே பார்ப்பனியரின் மொழி ஆளுமையிலிருந்து விடுபடாமையைக் குறிக்கும். களவியல் கூறும் கற்பனைச்செய்திகளுக்கும் அப்பாற்பட்ட தமிழின் மிகுந்த தொன்மையையும், தனிச் சிறப்பையும் ஆராய்ந்து நிறுவுவது தமிழ் இலக்கிய ஆர்வலர், ஆசிரியர் ஆய்வாளர் முன்நிற்கும் உடனடிப்பணியும் கடமையும் ஆகும். பார்ப்பனர் உள்நோக்குடன், தமிழுக்கு இறைத்தன்மை ஏற்றிப் புனைந்துரைத்துள்ள சங்கம், அதன் காலம். கடவுள் தலைவர்கள் மற்றும் அகத்தியர் போன்றோரின் கதைகளைத் தமிழாக்குவதில் தமிழுக்குப் பெருமையோ சிறப்போ இல்லை. இவற்றுக் கெல்லாம் மூத்ததும் முதிர்ந்ததும் தமிழ் என்பதைத் தமிழ் ஆர்வலர் உணர்தல் வேண்டும். கொற்றவையின் இனிய செந்தமிழ் நடையையும், தூய, தமிழ்ச் சொற்களையும், இலக்கிய வளத்தையும் போற்றுவதற்குப் பெரும்பாலும் ஆரியச் சொற்களையே கையாளப்பட்டு உள்ள இப்பார்வை பார்ப்பனக் கருத்தியலை இளங்கோவிடமிருந்து கொற்றவை மீட்டு அசலான தமிழ் மரபொன்றை நிறுவியுள்ளதாகக் கூறுகின்றது. தமிழ் மரபுத் தொன்மங்களைக் கொற்றவை மீட்டுள்ளது என்பது உண்மையே. அய்ந்தாம் கட்டுரை கூறுவது போன்று மீட்டெடுத்த தமிழ் மரபுகளை ஆரியத்துக்கே நீர் வார்த்துள்ள போது, தமிழ் மரபை கொற்றவை நிறுவியுள்ளது என்பது மேலோட்டமான பார்வையே ஆகும்.

மேலும், திராவிடக்கட்சிகளின் தமிழ் பற்றி இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. 1967க்குப் பின், இக்கட்சிகளின் தமிழ் நீர்த்துப்போய் மேடைத்தமிழ் மட்டு மாகி அரசியல் பற்றில் அடங்கிவிட்டது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஆயினும் தமிழ் இலக்கியங்கள் சிலவற்றைப் பார்ப்பனர் தவிரப் பிறரும் பெண் களும் தொடவும் கூடாது என்ற மொழி ஆதிக்கத்தி லிருந்து, அவற்றை மீட்ட தும் ஆரியத்தமிழே. தமிழ் என்றிருந்த நிலையில் எளியவரும் தமிழ் பேசவும், புரிந்துகொள்ளவும் வைத்த இக்கட்சிகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட இயலாது.

பார்வை : 4

கொற்றவை - நயவுரை

வன்புலியின் உக்கிரம், களிற்றின் விடாய் வேட்கை, அரவுகளின் நெளிவு, மறிகளின் நுண்மை, தோகை மயிலின் ஆயிரம் விழிகள் போன்றவற்றுடன்

இந்நெடும்பாட்டை நோக்கல் வேண்டும். ஓயாத காதல் கொண்ட நெஞ்சும், சுவைத்துக் களி ஏறிய காமமும் கொண்ட நோக்கு ஒன்றாலேயே கொற்றவையை முகர்ந்து வாரிப் பருகிட இயலும். இயலவில்லையெனின் இந்நெடும்பாட்டு தலைவனைப் பிரிந்த தலைவியின் கருங்கால் வெண்குருகு மேயும் வெய்ய முலைகளென உணர்வுடைந்து, நலிந்து வீழ்வர் என்பதே மெய்யாகும் என்பேன் என்கின்றது நான்காம் பார்வை. கொற்றவையின் எழில்மிகு நயத்தை நயவுரையாக இப்பார்வை இவ்வாறு கூறியுள்ளமை, நூலின் ஏனைய சிறப்புக்களுக்கு இழப்பு என்பதைத்தவிர வேறு எதுவும் கூறுவதற்கில்லை.

பார்வை : 5

சிலப்பதிகாரம் - கொற்றவை இணைவும் விலகலும்

ஜெயமோகனின் கொற்றவை இறைக்கொள்கையை முன்னிலைப் படுத்தியே கதையை நடத்திச் செல்கின்றது. ஆதியாகவும் அந்தமாகவும் குமரியாகவும் கொற்றவையாகவும் காப்பியம் நெடுகவும் குலக்கதைகளில் வழிபடும் பெண் தெய்வங்களாகவும் இவைகளே அறம் காக்கும் அன்னையர் என விளித்து இறுதியில் கொற்றவைக் கோலத்தில் நிறுவப்படும் கண்ணகி வரலாறாகச் சொல்லப்படுகிறது. படிக்கும் வாசகனை ஈர்க்கும் கவிதை வரிகளில் அவற்றின் பொருள் ஆழங்களில் மூழ்கி எழுவதற்கான சிறப்புக்களில் மனம் திளைக்கலாம். ஆனால் உலக வரலாற்றை முன்னுக்கு நகர்த்திச் செல்லும் சாதனம் மதமே என்று கருதுகிற கண்ணோட்டம் கடைசியில் அப்பட்டமான மாயாவாதத்தில்தான் போய்முடியும் என்பது தெளிவு என்ற புரிதலோடு படிக்கப்பட வேண்டிய நாவல் என்ற முடிவை அய்ந்தாம் கட்டுரை கூறுகின்றது. இதுவே உண்மை. இந்த உண்மையை ஏனைய நான்கு கட்டுரைகளும் சுட்டிக்காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இளங்கோ, சேரன் செங்குட்டுவனின் இளவல் என்பதற்கும், வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சேரனின் பத்தினிக்கடவுள் வழிபாடு வேறு இலக்கியத்திலும் இடம்பெறவில்லை. இந்தநிலையில், பிற்கால சமயம் சார்ந்த ஐயப்பன் கற்பனையை இளங்கோவுடன் இணைத்து இளங்கோவே ஐயப்பன் என்றுரைக்கின்றது கொற்றவை. இம்மாற்றம் எதற்கு ? இதனால் என்ன பயன் என்பது ஆய்வுக்குரியது.

படைப்புகளில் பார்வை என்பது மேலோட்டமான பார்வை இன்றித் திறனாய்வு அடிப்படையிலான பார்வையையே குறிக்கும். திறனாய்வும் ஓர் இலக்கியம் மட்டுமல்லாது இலக்கியத்தின் குறைகள் நீக்கி நிறைகளை வலுப்படுத்துவதுமாகும். படைப்பாளர் வேறு, படைப்புகள் வேறு. இவர்களை நாம் நோக்குவது வேறு வேறு வகையிலாகும். நூலின் நிறைகள் மட்டுமே பார்வை ஆகுமானால், அது படைப்பாளரை ஏமாற்றுவதாகும். படைப்பாளர், படைப்புகளின் குறைகளைச் சுட்டுவதைத் தம்மீது குறை காண்பதாகக் கொள்ளுதலும் தவறு. நிறைகளை விடுத்துக் குறைகளையே காண்பதும்

சரியான பார்வை ஆகாது. நடுநிலைப் பார்வையே நூலின் உண்மையை எடுத்துரைக்கவல்லது என்பதைத் தமிழ் திறனாய்வு உலகம் உணராமை கெடுமொழிக் கேடு என்றே கொள்ள வேண்டும்.

ஈடுஇணையற்ற கம்பரின் கவித்திறன், மனிதனும் மன்னனுமாகிய இராமனைக் கடவுளாக்கி வீணானது போன்றதை ஒக்கும் ஜெயமோகனின் எழுத்தாற்றலும், தமிழ் அறிவும், கற்பனைத்திறமும், பல்துறைப் பன்னூற்பயிற்சியும் அன்றைய சூழலில் உண்மையாக இருந்திருக்கலாம் என்று கொண்டாலும், சமயமும் அதனடிப்படையிலான மூடநம்பிக்கையும் விடுபடுவதோடு, பெண்ணைப் பெண்ணாக மதித்தாலேபோதும், கடவுளாக்க வேண்டாம் என்று ஓங்கி ஒலிக்கும் உரத்தகுரலுக்கு மாறானதாகவே அமைந்து முழுப்பயனை இழந்து நிற்பது வருத்தம் தரும் உண்மை.

ஞானியின் கடிதம்

பெறுநர்

முனைவர் நளினிதேவி, மதுரை.

மதிப்பிற்குரியீர்,

கொற்றவை - சொல்லாத செய்திகள் எழுதவேண்டிய கட்டுரைதான். அதுவும் பெண்ணியத்தில் நம்பிக்கையுடைய நீங்கள் அவசியம் எழுத வேண்டிய கட்டுரை. அறிவன் கொற்றவை என்ற ஆக்கத்தினுள் சமயச்சார்பு கண்டு எழுதியதை நானும் ஏற்றுக்கொண்டேன். சுதாகரின் பார்வை பின்நோக்கிய பார்வை என்று குறிப்பிடுகிறீர்கள். வேணுகோபாலின் பார்வைக்குள் ஆரியத்தை மறுக்கிற தமிழியப் பார்வையுண்டு என்றாலும் அதனுள்ளும் பார்ப்பனியத்தையே நீங்கள் காணுகிறீர்கள். இம்முறையில் நீங்கள் தெரிவித்துள்ள விமர்சனங்களை நான் மதிக்கிறேன். நானும் ஒரு திறனாய்வாளன் என்ற முறையில் பிறர் முன்வைக்கும் புதுப்பார்வைகளை நான் பெரிதும் வரவேற்கிறேன். இருந்தபோதிலும் என் சார்பில் சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கண்ணகியின் கதையை நம்கால நோக்கில் மறுபடைப்பு என்று செய்யும் பொழுது தமிழ் மரபுக்குள் பெரிதும் இடம்பெற்ற கண்ணகி பற்றிய படிமத்தை முற்றிலும் தகர்க்கும் முறையில் எழுதுவது எனக்கு உடன்பாடில்லை. இளங் கோவடிகளின் காலம் எது என்பதைச் சரிவர நம்மால் தீர்மானிக்க இயல வில்லை என்றாலும் ஒருவகையில் தமிழ்ச்சமூகம் சில வடிவங்களில் தன் னைப் புதுப்பித்துக் கொண்ட காலம் என்பதில் ஐயமில்லை. சங்ககாலச் சமுதாயத்தைக் காட்டிலும் சமய உணர்வு குறிப்பாக சமணத்தின் மூலமும் அழுத்தம் பெற்ற காலம். சங்ககாலச் சமூகத்தின் குறைபாடுகள் சிலவற்றை வெளிப்படையாக சாடவேண்டிய தேவையும் ஏற்பட்டிருந்த காலம். இளங்கோ வடிகள் தன் சமகாலத் தேவைகளை உணர்ந்து தொன்மையான கண்ணகி யின் கதையை தானும் ஒரு மறுபடைப்பெனச் செய்திருக்கிறார். அரசவையில் நடனமாடிய பெண்ணின்மீது மனத்தைப் பறி கொடுத்த மன்னன் காம உணர்வுக்குத் தன்னை இழந்தவன். ஆகவேதான் கோப்பெருந்தேவியின் சினத்துக்கு அஞ்சியதோடு பொற்கொல்லன் சொன்ன சொல்லை ஆராயா மல் நம்பி மனைவியின் ஊடல் தீர்க்க ஒரு வாய்ப்பு கிடைத்ததென்று நம்பிய அரசனின் செயல் பல தீயவிளைவுகளுக்குக் காரணமாக அமைந்தது. இந்த உண்மையை இளங்கோ குறிப்பாக உணர்த்த, ஜெயமோகன் இதற்குள் ஆழமாக நுழைந்து தன் படைப்பை விரிவுபடுத்தி இருக்கிறார். நானும்

சிலம்பைக் கற்றறிந்த போதிலும் இந்த உணர்வு எனக்குள் முன்பு அழுத்தம் பெறவில்லை.

தெய்வம் உதவிக்கு வரவில்லை. மதுரையில் சான்றோர்களும் தீமையைத் தடுக்கவில்லை. பெண்களும் ஆவேசம் கொள்ளவில்லை. இத்தகைய சூழலில் கண்ணகி கொதித்தெழுகிறாள். இத்தகைய நகரம் தானே அழிந்து கொண்டிருக்கும் நகரம். ஒருவர் தீ வைத்தாலும் நகரம் பெருநெருப்பில் அழிந் துவிடும். இப்படி இருந்த ஒரு சூழலில்தான் கண்ணகி கொதித்தெழுகிறாள். இளங்கோவின் இவ்வகைச் சித்திரிப்பு நம் நெஞ்சை நெகிழ்விக்கிறது. கண்ணகி வழக்குரைத்தவுடன் மன்னன் சாவானா ? மனைவியும் உடன் சாவாளா ? என்றும் நமக்குள் ஐயம் எழக்கூடும். கண்ணகி மதுரையை எரிக்க முடியுமா ? அக்னிதேவன் உதவிக்கு வருவானா ? முலையைத் திருகி யெறிந்தால் தீப்பற்றுமா ? இப்படியும் சில கேள்விகள் வாசகருக்குள் எழலாம். நாம் படிப்பது வரலாறு அன்று, காவியம். புனைவுகளின்றிக் காப்பியம் இல்லை. புனைவுகளை உடனே பொய் என்று ஒரு பகுத்தறிவுவாதி கூறிவிடலாம். ஒரு திறனாய்வாளன் கூறமாட்டான். இது கவிஞனின் நீதியென்பான். தெ.பொ.மீ. இப்படித்தான் கூறினார். இப்படித் தொடர்ச்சியான அநீதி நிலவும் சமூகம் அழித்தற்குரியது. ஒருவகையில் இது நம் காலத்திற்கும் தேவையான நீதி. இதை வன்முறையென்று மா.பெ.சி. கூறினார். எத்தனை வன்முறைகள் மீது கட்டப்பட்ட சமூகம் இது. இந்த வன்முறைக்கெதிராக நாம் செயல்படுத்தும் வன்முறை எப்படி அநீதியாக முடியும். மணிமேகலையில் சாத்தனாருக்கும் கண்ணகி பற்றி ஒரு விமர்சனம் இருந்தது. கண்ணகி சினந்து மதுரையை எரித்தாள். ஆகவே அவளுக்கு மறுபிறப்புண்டு என்றார் சாத்தனார். சாத்த னாரின் சமயம் அப்படித்தான் அவருக்குக் கற்பித்தது.

ஒருத்தி மதுரையை அழிக்கமுடியுமா ? என்பதும் ஒரு கேள்வி. இளங்கோ இப்படிக் கூறியிருந்தாலும் எனக்குள் இன்னொரு பார்வை இருந்தது. சங்கத்தை அடுத்த காலத்தில் நெருக்கடிகள் மிக்க சமூகச்சூழல். தொடர்ச்சி யான போர்க்கொடுமைகள், கடுமையான வறுமை, வணிகர், பரத்தையருக் கும் மிகுந்த செல்வாக்கு. இத்தகைய சமூகச் சூழல் அநீதிகளுக்கு விளை நிலம். இத்தகைய சூழலுக்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவாக இருக்க முடியாது. பல திசைகளிலிருந்து கலகங்கள் மூளும். இத்தகைய சூழலில்தான் கண்ணகியின் மதுரை எரிப்பு நிகழ்கிறது. மீண்டும் இன்னும் நாம் என்ன பார்க்கிறோம். குறிப்பிட்ட வரலாற்றுச்சூழல் குறித்து இளங்கோ சொல்ல வில்லை. நமக்கு இந்த ஆய்வு தேவை. இதுபற்றி நானும் எழுதியிருக் கிறேன். இத்தகைய சூழலில் களப்பிரர் எழுச்சி பெற்றனர். இந்தச்சூழல் தமிழகம் முழு வதும் நிலவியது. புகாரும் இப்படித்தான் அழிந்திருக்க வேண்டும். இளங்கோ வடிகளும் திரும்பத்திரும்ப ஒன்றைச் சொல்கிறார். அரசனை இழந்த சமூகம் இளவரசனுக்காகக் காத்திருந்தது. இருள் நிறைந்த சூழலில் மதியம் தோன்றி யது போல என்று கூறியிருக்கிறார். (வரிகள் எனக்கு நினைவில் இல்லை).

எத்தகைய நெருக்கடிகள் மிகுந்த சூழலில் மதுரை அழிந்திருக்க வேண்டும் என்பது பற்றி ஜெயமோகன் முன்வைக்கும் விரிவான காட்சி எனக்கு வியப் பைத் தருகிறது உண்மைதான். சில இனக்குழுக்கள் மேலேவர, அடிபட்ட, அடிமைப்படுத்தப்பட்ட இனக் குழுக்கள் கலவரத்தோடு காத்திருக்க, மேலே ழுந்த இரண்டு இனக்குழுக்களுக்கிடையிலும் அரசனுக்கு சார்பாக ஒரு குழு, அரசியோடு இன்னொரு குழு என்ற முறையில் கடும் மோதல்கள் நிகழ, இத்தகைய கடும் நெருக்கடிச்சூழலில் ஒருவர் தீ வைத்தால் போதும் நகரம் பற்றி எரியும். ஜெயமோகனின் இத்தகைய சித்திரிப்பு எனக்குப் பெரும் வியப்பளிக்கிறது. கூடியவரை இது வரலாற்றுக்கு ஒத்த காட்சிப்படுத்தல் என்றே கருதுகிறேன். இதுதான் வரலாறு என்று நம்மால் சாதிக்கமுடியாது என்பதும் உண்மைதான்.

மதுரைப்பெண்கள் தீப்பந்தத்தோடு திரண்டெழுந்தார்கள். ஆண்கள் என்ன செய்தார்கள் என்பதும் ஒரு கேள்வி. எனக்குள் ஒரு வகையான புரிதல். நம் காலச் சூழலிலும் எல்லா அநீதிகளுக்கும் ஆண்கள் ஒத்துப் போய்க் கொண்டே இருக்கிறார்கள். அநீதிகளோடு ஒத்துப்போகும் ஆண்கள் பெண்களை அதிகம் கொடுமைக்கு உள்ளாக்குகிறார்கள். தலித் மக்களும் இதேபோலத்தான் கொடுமைகளுக்குள்ளாகிறார்கள். இப்படிக் கொடுமை களை, அநீதிகளை, ஆட்சி அதிகாரம், தேசம் என்று ஆகிவிட்ட நிலையில் பெண்கள் ஒருநாள் நிச்சயம் திரண்டெழுவார்கள். பெண்கள் ஏற்றிய தீ அப்புறம் அணையாது. ஆண்களும் சும்மா இருக்கமுடியாது. அந்நிலையில் எல்லாமே ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும். இதுதான் கூடியவரை இன் றைக்கு சரியான பெண்ணியப் பார்வையாகவும் இருக்கமுடியுமென நம்பு கிறேன். ஜெயமோகனுக்குள்ளிருந்தும் வெளிவரும் பார்வை, இத்தகையது தான் என்று கருதுகிறேன்.

இளங்கோவுக்குள்ளும் சமய உணர்வு இருந்தது. அது சமண சமய உணர்வு. (ஆசிவகம் என்று நெடுஞ்செழியன் ஆராய்ந்துரைக்கிறார்). சமணர்களின் சமயத்தில் முழுமுதல் கடவுளுக்கு இடமில்லை. நிலம், பொழுது எனப்படும் முதற்பொருள், இவற்றில் கருக்கொண்டு உருவாகும் எண்ணற்ற கருப்பொருட்கள் ஆகிய அனைத்துக்கும் முதற்காரணமான இவை அனைத் தையும் படைப்பவனாகிய இறைவன் என்ற கருத்து சமணத்திற்கு உடன் பாடில்லை. தொல்காப்பியர் கூறுவதுபோல் கருப்பொருட்களில் ஒன்று தெய்வம். அதாவது மனிதனுக்குள்ளிருக்கும் தெய்வம். நடுகல்லில் இடம் பெற்ற தெய்வம். முன்னோர் வழிபாடு என்பதில் இடம்பெற்றுள்ள தெய்வம். இத்தகைய தெய்வக்கருத்து இனக்குழு சமூகக்காலத்திலேயே மெல்ல மெல்ல உருவாகி அப்புறம் வரலாற்றுக் காலத்தில் பெரும் தெய்வமாகிறது. சமணர்கள் அருகனை தெய்வம் என்கிறார்கள். அருகன்தான் நமக்கு உலகை அறிவித் தான். அறங்களை வகுத்தான். உயிர்களை வகைப்படுத்தினான். எல்லா வற்றுக்கும் பெயரிட்டான். இவன்தான் ஆதிபகவன். மொழிக்கு அகரம்

போன்றவன். இந்த தெய்வம் உலகத் தோற்றத்திற்கு முன்பு இருந்ததில்லை. தவம் செய்த முனிவன் பிறகு தெய்வமாகிறான். தேவனாகிறான். அக்கிர மம் செய்தவன் நரகனாகிறான். உயிர்களுக்குப்பல பிறப்புண்டு. நல்வினை, தீவினைகளுக்கு ஒத்தபடி பிறப்புக்கள் ஏற்படும். இது சமணர்களின் தெய்வக் கருத்து. வள்ளுவருக்கும் இக்கருத்துத்தான் உடன்பாடு என்று கருதுகிறேன். இந்த தெய்வம் மனித எல்லைக்குள் இருக்கிற தெய்வம்.

தெய்வம் என்ற கருத்து தொன்மையான எல்லா சமூகத்தாருக்குள்ளும் இருந்த கருத்தென்றே நம்புகிறேன். ஒருவகையில் மனித இலட்சியங்களின் உயர் வடிவம் இந்த தெய்வமாகலாம். மனித எல்லைக்கு வெளியில் சென்று மனிதனை, உலகை ஆட்டுவிக்கிற தெய்வம் பின்னர் முழு முதல் தெய்வம் என்று ஆனது. மனித தர்க்கத்தின் ஒருவகையான நீட்சி அல்லது திரிபு தெய் வம் பற்றிய இந்தக் கருத்துத்தான் இன்று நம் சமூகத்தைச் சீரழிக்கிறது. சமணர்களும் இக்கருத்தை மனித எல்லைக்குள் நிறுத்தினார்கள் என்று தோன்றவில்லை. சமணர்களும் அருகனுக்குக் கோவில் கட்டினார்கள். உரு வம் வைத்தார்கள். திருவிழாக் கொண்டாடினார்கள். புராணங்கள் எழுதி னார்கள். கருமம், மறுபிறப்பு, மேலுலகம், சடங்கு என்றெல்லாம் சமணர்கள் வகுத்தார்கள். இந்தச்சமணம் நமக்கு வேண்டாம். விதி, ஊழ்வினை, பாவம், புண்ணியம் என்பனவெல்லாம் நமக்கு இன்றும் தேவைப்படும் கருத்துக்கள் அல்ல.

நான் சொல்ல வருவது இதுதான். தெய்வம் என்றவுடன் ஆரியம் என்று பேசுவது பொருத்தமில்லை. தமிழனுக்கும் தெய்வம் உண்டு. தமிழனின் தெய்வம், தொல்காப்பியர் கூறிய தெய்வம், வள்ளுவர் விளக்கிய தெய்வம் என்ற அளவில் வைத்துக்கொள்வது போதும். இக்கருத்தையும் பகுத்தறிவு வாதிகள் மறுக்கத்தான் செய்கின்றனர். இப்படி என்னால் மறுக்கமுடியாது. தமிழ் என்ற மொழி ஒரு கருவி தானே. இது எப்படி தமிழ்த்தாயாக முடியும் என்று மார்க்சியரும் விவாதிக்கின்றனர். தமிழ் என்பது ஒரு கருவி. வலுமிக்க கருவி. என்னையும் படைக்கிற கருவி. என்னையும் ஆளுகின்ற கருவி. தமிழுக்குள் நான் இருக்கிறேன். தமிழ் படைத்திருக்கிறது, வாழ்விக்கிறது. தமிழ் எனக்குத் தாய் மட்டுமல்ல. தெய்வம். இதற்காக தமிழ்த்தாய்க்கு உருவம் வைத்துக்கொள்ள மாட்டேன். கோயில் கட்டமாட்டேன். தமிழ்த்தாய் வாழ்த்து எனக்குப் பிடிப்பதில்லை. தமிழ் இந்த அளவுக்கு என்னை வசப்படுத்தியிருக் கிறது. தமிழைச் சரிவரக் கற்றவன் தமிழுக்கு வசப்படுவான். தமிழ் எனக்குத் தாய்போலத்தான். தமிழர் அல்லாதவருக்கு அவரவர் தாய்மொழி. நான் இப்படிச் சொல்வது பகுத்தறிவுவாதிக்குப் புரியாது. ஆனால் பகுத்தறிவு வாதிக்குப் பெரியார் தெய்வமாகி விட்டார். (பலருக்குப் பணம் தெய்வம், அதி காரம் தெய்வம், கலைஞர் தெய்வம். இவையும் பகுத்தறிவுக்கு ஒத்துவருமா புரியவில்லை). நான்கூட இப்படிச் சொல்வேன். மார்க்ஸ் எனக்குத் தெய்வம், லெனின் எனக்குத் தெய்வம். இவர்கள் தெய்வங்கள் அல்ல என்று தெரிந்து

தான் சொல்லுகிறேன். என் ஆளுமைக்குள் இவர்கள் இருக்கிறார்கள். என் ஆளுமையை உருவாக்கியதில் இவர்கள் பங்கு அதிகம். கூடவே சொல்வேன். இயற்கை தெய்வம். (என் எழுத்தும் தெய்வம் என்று பாரதி ஏன் சொன்னான்).

கண்ணகி புரட்சிக்காப்பியம் படைத்தவர் பாரதிதாசன். அதில் இறுதியில் ஒரு காட்சி. கண்ணகிக்கு சிலை செய்கிறான் சிற்பி. அவனுக்குள் கண்ணகி எழுந்திருக்கிறாள். கண்ணகிக்கு அவன் வசப்பட்டிருக்கிறான். இறுதியாக சிற்பம் இப்படி உருவாகிறது. அருள் புரிகிற கோலத்தில் கண்ணகி. கண்ணகி தன் கை முத்திரையால் அருள் புரிகிறாள். சிற்பி ஒரு கலைஞன். அவன் ஒரு படைப்பாளி. படைப்பின் ரகசியம் தெரிந்தவன். தன்னை அறியாமல் கண்ண கியை இவ்வாறு படைக்கிறான். பாரதிதாசன் பகுத்தறிவுவாதியும்தான். அதேசமயம் கலைஞன் பாரதிதாசனுக்குப் படைப்பு வேண்டும், கலை வேண் டும், கருணை வேண்டும். தமிழும் வேண்டும். இந்த உணர்வைச் சமய உணர்வு என்று சொல்லி ஒதுக்கிவிடலாமா ? தூக்கி எறிந்து விடலாமா ? இயலாது என்றே கருதுகிறேன். வாழ்வில் இது ஓர் உள்ளுணர்வு. மன ஆழத் தில் படிந்திருக்கிற உணர்வு. இந்த உணர்வின் ஆழம் பல சமயம் நமக்குத் தெரியாது. சி.ஜே. யங் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். நனவிலி மனம் என்று இதற்கு அவர் பெயரிட்டார். இது சமூகத்தின் கூட்டுமனம். தொன்மங்கள் இங்கிருந்துதான் உருவாகின்றன. பிரபஞ்சம், இயற்கை, மனிதன், வாழ்க்கை, தந்தை, தாய் முதலிய எல்லாவற்றையும் ஒரு புள்ளியில் வைத்து குவிக்கிற மனம் இது. இந்த மனத்தோடு ஒன்றியிருக்கும் வரை நமக்கு உயர்வகையான வாழ்க்கை சாத்தியம். ஒன்றாகக் காணும் காட்சி சாத்தியம். 'காக்கை, குருவி எங்கள் சாதி' என்று கொண்டாடுவது சாத்தியம். இன்னும் இதுபற்றி நான் எவ்வளவோ சொல்லலாம். நிறுத்திக் கொள்கிறேன். இது மனித உணர்வு. மனிதனுக்கு மட்டும் வாய்த்திருக்கிற உணர்வு. வள்ளுவர், வள்ளலாருக்கு மட்டும் வாய்த்த உணர்வன்று இது. எல்லோருக்கும் உள்ள உணர்வு. நாம் தெய்வம் என்று வழிபடுகிறபோது இந்த மனத்தின் ஆழத்திற்குள்தான் செல் கிறோம். இசை இங்கிருந்துதான் பிறக்கின்றன. கலைகள் இங்கிருந்துதான் பிறக்கின்றன. இந்த உணர்வின் எல்லையைத் தொட்டவனுக்கு மரண மில்லை. இவனுக்கு எதுவும் சாத்தியம்.

ஜெயமோகன் எழுதுவது கண்ணகியின் கதை மட்டுமல்ல. கொற்றவை யின் கதை. கொற்றவை தமிழ்த்தெய்வம். தமிழர்களின் தாய்த்தெய்வம். போர்த்தெய்வம். இந்த தெய்வத்தின் தோற்றத்தை எங்கிருந்து கண்டறிவது. தமிழர்களின் தொன்மைத்தாயகம் குமரிக்கண்டம் என்கிறோம். இது எந்த அளவுக்கு வரலாற்று உண்மை என்பது பற்றி எனக்கும் உறுதியாகத் தெரி யாது. ஆனால் ஒரு நூற்றாண்டுக் காலமாக இதை நம்புகிறோம். இதற்கு ஆதாரங்களெனப் பலவற்றை நம் அறிஞர்கள் / பிறநாட்டு அறிஞர்கள் எவ்வ ளவோ சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆய்வுக்குள் சென்று எனக்கு இறுதி உண்மை எது என்று அறியமுடியாது. தமிழ் என்பது இன்று நம் காலத்தில்


நம்மை இறுகப் பற்றியிருக்கிற ஒரு தொன்மம். ஒரு அரசியல். ஆரியத்திற்கு எதிரான அரசியல். மேற்குலகிற்கும் எதிரான அரசியல். இதன் காரணமாக தொன்மைக்குள் என்னைத் தேடுகிறேன். எங்கள் இனம் ஒரு தனி இனம். எங்களுக்குத் தொன்மையான வரலாறு உண்டு (எந்த இனமும் தேடிச் சென்றால் ஒரு தொன்மையைக் கண்டுபிடிக்க முடியும்). அந்தத் தொன்மைக் காலத்தில் எல்லோரும் ஒருதாய் மக்கள். அந்த மக்களுக்குள் ஆதிக்கம் இல்லை, பிரிவினை, பிளவுகள் இல்லை. பிளவுகளும் பிரிவினைகளும் ஆதிக்கங்களும் இறுகிக்கிடக்கிற இன்றைய உலகிலிருந்து விடுபட்டு நம் தொன்மைக்குள் செல்கிறோம். அங்கிருந்து நம்மை உயிர்ப்பித்துக்கொள்ள வேண்டும். அங்கிருந்து நாம் ஆரியனோடும் மேற்கத்தியனோடும் பேசவேண்டும். உங்கள் ஆதிக்கம் எங்களை அழிக்கிறது. எங்கள் வரலாற்றை, வாழ்வை, நிலத்தை, எங்கள் தாய்மார்களை அழிக்கிறது. எங்களை அழிக்கும்போதே நீங்களும் உங்களை அழித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் பிசாசுகளாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். இந்த உண்மை உங்களுக்குத் தெரியாது. உங்கள் தாய்மார்களுக்குத் தெரியும். உங்கள் பெண்களுக்குத் தெரியும். எங்கள் தொன்மைக்குள்ளிருந்து எங்களைப் புதுப்பித்துக்கொண்டு போர்க்கோலம் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. ஆகவே எங்களை எங்கள் தொன்மங்களுக்குள்ளும் தேடுகிறோம். பல நூற்றாண்டு களுக்கு முன்பே, பல ஆயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்பே இறுகிப்போன தொன்மங்களுக்குள் எங்கள் வாழ்வை, வரலாற்றை நாங்கள் தேடுகிறோம். தொன்மங்கள் தம்மைத் திறந்துகொள்கின்றன. முருகனும் சிவனுக்குள் சிவனும் எங்களுக்குள் உயிர்த்துக் கொள்கிறார்கள். கொற்றவை எங்க ளுக்கு முகம் காட்டுகிறாள். சாத்தன் முதலியவர்களையும் தேடுகிறோம். மதுரைக்குள்ளிருந்தும் புகார், கொற்கை, வஞ்சி எனப் பல இடங்களிலும் ஊர்களிலிருந்தும் தேடுகிறோம். தொன்மைக்கால உறவினர்களோடு உரை யாடுகிறோம். எங்களுக்குள் நாங்களே இறங்கித் தேடும்போது நாங்கள் காண்பனவெல்லாம் எந்த அளவுக்கு உண்மைகள். உறுதி சொல்வதற் கில்லை. எல்லாமே புனைவுகள் என்று புரிந்துகொள்கிறோம். நீங்களும் நானும் புனைவுகள், வாழ்க்கை, வரலாறு என்பனவும் புனைவுகள். பிரபஞ்சம் உட்பட எல்லாமே மனிதர்களாகிய நாம் செய்து கொண்ட புனைவுகள். தமி ழோடும் சார்ந்த புனைவுகள். பெண் தன்னை அழகுபடுத்திக் கொள்வது மாதிரி எல்லா மனிதர்களும் தம்மை இப்படித்தான் புனைவுகள் மூலம் படைத்துக்கொள்கின்றனர். காதல் என்றும் வீரம் என்றும் வெற்றியென்றும் தோல்வியென்றும் இனம் என்றும் தேசம் என்றும் புனைவுகள். இந்தப்புனைவு களுக்குள் நான் இன்றும் இருக்கிறேன். கோவலனும் பாண்டியனும் கூட எனக்குள் இருப்பவர்கள். கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி, மணி மேகலை, என்பவர்களோடும் நாம் வாழ்ந்திருக்கிறோம். வாழ்கிறோம். புனைவுகள் என்பவை பொய்யல்ல. வாழ்க்கையை, வரலாற்றைத் திறந்து கொண்டு நெடுந்தொலைவு பயணம் செய்ய நமக்கு வாய்த்த கண்கள், கருவி

கள். வீடு, திருமணம், தந்தை, தாய் என்பனவும் இவ்வகையில் புனைவுகள். புரிந்துகொண்டால் அது பெரும்பேறு. இல்லையென்றால் சாபக்கேடு.

இறுதியாக இன்னும் சில. தமிழ் வரலாற்றுக்குள் கண்ணகி தொடர்ந்து வாழ்கிறாள். தமிழ் வரலாறு என்பது குமரிக்கண்டம் தொடங்கி கேரளம் வரை மட்டுமல்ல ஈழத்தினுள்ளும் கிழக்குக்கடற்கரை வரை நீள்வது. கேரளத்திலும் கண்ணகி வாழ்கிறாள். மட்டக்களப்பிலும் கண்ணகிக்கு கோயில் உண்டு. விழாக்கள் உண்டு. பாடல்கள் உண்டு. (ஜெயமோகன் ஈழத்திற்குள் செல்ல வில்லை). ஒரு பெண் தாயாக இருக்கிறாள் என்பது போலவே அவளுக்குள் கண்ணகியும் கூடவே கொற்றவையும் (காளியும்) இருக்கிறாள் என்பதும் உண்மை. பெண்ணின் இந்தக் கொற்றவைக் கோலத்தை நம் இல்லங்களில் அடிக்கடி சந்திக்கிறோம். தேசத்திற்குள்ளும் இவள் தன்னை எழுப்பிக் கொள்ளவேண்டும். தமிழ் மக்களுக்குள் உறைந்திருக்கிற எத்தனையோ படிமங்களிலொன்று நீலி. தமிழ் இலக்கியங்களுக்குள் மட்டுமல்லாமல் நம் கோவில்களிலும் நீலியைக் காண்கிறோம். பெண்ணை அவமதிக்கிறபோது அவள் பேயாகிறாள். ஆணை தண்டிக்கிறாள். கண்ணகிக்குள்ளும் குடி புகுந்த நீலிதான் மதுரையில் வெடிக்கிறாள். புகாரிலிருந்த கண்ணகிக்குள் நீலி இல்லை. இடைவெளியில்தான் இவள் இணைந்து கொள்கிறாள். நீலி இல்லாமல் கண்ணகிக் கதையைச் சொல்லமுடியாது. ஜெயமோகனுக்கு நீலியைப் பெரிதும் பிடிக்கிறது. (காடு நாவலில் நீலியின் ஆட்சியை விரி வாகக் காண்கிறோம்). எனக்குள்ளும் இன்னொரு கேள்வி. சாத்தன் தமிழ் தெய்வம்தான். சாத்தன்தான் ஐயப்பனானான். ஐயப்பன் தமிழ்க் கடவுள். கடவுளருக்குள் பேதம் காணாமல் தமிழ் மக்களும் ஐயப்பனை தரிசிக்கிறா கள். கோவில், வழிபாடு, சடங்கு என்பனவெல்லாம் சகித்துக் கொள்ளத்தான் முடியவில்லை). இளங்கோவடிகள் பற்றியும் பல வகையான ஆய்வுகள் தொடருகின்றன. இளங்கோவைச் சமணர் என்று பார்த்திருக்கிறோம். புத்த சமயத்தவராக ஜெயமோகன் பார்க்கிறார். (ஏன் பார்க்கக் கூடாது) பார்ப்பதால் நிறைவு வந்தால் சரி - வரவில்லை.

-ஞானி

கோயில் கல்வெட்டில் உள்ள ஒரு சிலம்பு சிற்பம்



(முன் அட்டை தொடர்ச்சி...)

இதே நிலை நீடித்தால் எதிர்காலத்தில் பத்தினித் தெய்வமான கண்ணகியை வழிபடும் உரிமை பறிபோய்விடும் எனப் பக்தர்கள் பேசுவதைக் கேட்க முடிந்தது.

தமிழர்கள் ஏற்கனவே முல்லைப் பெரியாறு, காவிரி, பாலாற்றுச் சிக்கலில் தங்கள் உரிமைகளை இழந்திருக்கும் இவ்வேளையில் கண்ணகி கோயில் வழிபாட்டு உரிமையையும் இழந்துவிடாமல் பாதுகாத்துத் தருவது அரசின் கடமை.

தமிழக இந்து அறநிலையத்துறை சார்பாகப் பல்வேறு பணிகள் நடந்து வருவதை மக்கள் அறிவர். ஆனால் தமிழர்களின் பண்பாடு சார்ந்த கோயில்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை அண்மையில் வந்துள்ள செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

மதுரை திருமலை நாயக்கர் மகாலை மேம்படுத்த ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அரசு இசைவளித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் நாமக்கல் ஆஞ்சநேயருக்குத் தங்கத்தேர் ரூ. 15 கோடி செலவில் செய்யப்பட்டு தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றுள்ளது. அதில் சில அமைச்சர்களும் கலந்துகொண்டனர் என்ற செய்தி வெளியாகியுள்ளது. இதுபோன்று கண்ணகி கோயிலைப் பேணிக்காக்க அரசு எந்த ஒதுக்கீடும் செய்யாதது ஏன்? என்பது போன்ற வினா தமிழர்களிடையே எழுந்துள்ளது.

தமிழக - கேரள கானகத்துறைக்கு இடையே தமிழக எல்லையில் தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ளது கண்ணகி கோயில். கேரள எல்லை வழியாகச் செல்லாமல் தமிழக எல்லைப் பகுதியான லோயர் கேம்ப் அருகிலுள்ள பழியன்குடிசை வழியாக நடந்து சென்ற பக்தர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகமாக இருந்தது. இப்பாதை வழியாகச் சென்றால் கேரள அரசு தமிழகப் பக்தர்களை தடுத்து நிறுத்த உரிமையில்லை. கோயில் அமைந்திருப்பதும், கோயிலுக்குச் செல்லும் வழியும் தமிழக எல்லைக்குள் இருப்பதால் பக்தர்கள் எப்போதும் சென்று அச்சமின்றி வழிபட்டு வர முடியும். இதற்குத் தமிழக அரசு பழியன் குடி வழிப்பாதையை சீரமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும் என்பது பக்தர்களின் வேண்டுகோளாக உள்ளது. இந்து அறநிலையத்துறை பல்லாயிரம் கோடி செலவழித்துப் புதிய கோயில்களை உருவாக்குவதை விட நமது முன்னோர்கள் வழிபட்ட கோயில்களைப் புதுப்பிப்பதால் தமிழர்களின் பண்பாடு பாதுகாக்கப்படும்.

ஆதிக்கச் சக்திகளின் பேச்சைக் கேட்டு அப்படியே இந்து அறநிலையத்துறை செயல்படுமானால் தமிழர்களின் பண்பாடு சார்ந்த கோயில்கள் அழிக்கப்பட்டுவிடும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். இதுபோன்ற அறியாமைச் செயல்களினால் கடந்த காலத்தில் நால்வர் பாடல் பெற்ற திருத்தலங்களெல்லாம் வழிபாடு இன்றியும், பாழடைந்தும் இளைய தலைமுறையினர் அறிய முடியாத வகையிலும் சிதைந்து காணப்படுகின்றன.

கண்ணகி கோயிலை உயிர்ப்பித்து விட்டால் அதை யாராலும் அகற்ற முடியாது. கோயிலை உயிர்ப்பிப்பதா? வேண்டாமா? என்பதை தமிழக அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

(நன்றி : தமிழ்ச் சான்றோர் பேரவை, மே 2008)

பதிப்புரை

நண்பர் ஜெயமோகனின் 'கொற்றவை' நாவல் குறித்து கொற்றவை - 'படைப்பும் பார்வையும்' பற்றிய கட்டுரைகள் தமிழ்நேயம் 31-இல் இடம் பெற்றன. மேலும் சில கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

இடையில் நம் மரியாதைக்குரிய நண்பரும் பேராசிரியரும் ஆகிய முனைவர் லூர்து அவர்கள் காலமான செய்தி தமிழியல் ஆய்வில் அக்கறையுடைய அனைவரையும் பெரிதும் வருத்துகிறது. தமிழ்நாட்டில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்கு அவர் முன்னோடியாக இருந்ததுடன் இத்துறையில் அசலான ஆய்வுகள் பலவற்றை வெளியிட்டு இருந்தார். பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியில் அமைந்துள்ள நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுத்துறை லூர்து அவர்களின் நினைவையும் அவர் விட்டுச் சென்ற மாபெரும் நூலகத்தையும் காத்து வைக்கும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

கொடுங்காலூர் பகவதி அம்மன் கோவிலில் அடைக்கப்பட்டிருக்கும் ஓர் அறைக்குள் இருக்கும் கண்ணகி தொடர்பான தொன்மைச் சின்னங்கள் குறித்து ஆய்வு செய்த கேரள அறிஞர் ஒருவர் 1930-ல் வெளியிட்ட The Sacrad Chamber என்ற நூலைப் படித்து பெரும் வியப்புற்ற பேராசிரியர் லூர்து அவர்கள், இந்த நூல் கருத்துக்களைத் தொகுத்து தமிழ்நேயத்துக்கு கட்டுரை தருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் கட்டுரைக்காகக் காத்திருந்த எனக்கு அவர் காலமான செய்தி பேரிடியாக வந்தது.

மேலும் ஒரு செய்தி, தமிழக-கேரள எல்லையில் 4700 அடி உயர மலைப்பகுதியில் அமைந்துள்ள மங்களாதேவி கண்ணகி கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை முழுநிலவு நாளன்று நடைபெறும் விழாவிற்கு இந்த ஆண்டும் கேரள அரசு செய்த இடையூறுகளை இதழ்கள் வழியே நண்பர்கள் அறிந்திருப்பார்கள். கண்ணகி கோயில் தமிழ் மக்களுக்குத்தான் சொந்தம் என்பதற்கு ஆவணங்களும், கல்வெட்டுக்களும் சான்றுகளை அள்ளித் தருகின்றன. இவை குறித்த விவரங்களை கரூர் பூ.அர. குப்புசாமி அவர்களும் ஓவியர் பரணன் அவர்களும் தமிழ்நேயத்திற்கு அக்கறையோடு அனுப்பினர். (இடமின்மையால் வெளியிட இயலவில்லை). அவர்களுக்கு நம் நன்றி. தமிழர் உரிமைகளைத் தொடர்ந்து விட்டுக்கொடுக்கிற தமிழக அரசு இந்தச் சிக்கலிலும் கண்களையும், காதுகளையும் மூடிக்கொண்டிருப்பது தமிழர்களுக்கு இழைக்கும் பெரும் கேடு. ஓவியர் பரணன் அனுப்பிய கண்ணகி கோயில் பற்றிய சில படங்களையும், தமிழ்ச் சான்றோர் பேரவைக் கட்டுரையையும் இந்த இதழில் வெளியிடுகிறோம்.

தமிழ் அறிஞர்கள், சிந்தனையாளர்கள் குறித்து (எஸ்.வி.ஆர், அ.மார்க்ஸ், தமிழவன், நெடுஞ்செழியன், அறவாணன் முதலியோர்) விரிவான கட்டுரைகளைத் தமிழ்நேயம் தொடர்ந்து வெளியிட உள்ளது. நண்பர்கள் ஒத்துழைப்பைப் பெரிதும் வேண்டுகிறோம்.

1-6-2008 - ஞானி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : கி. பழனிச்சாமி [ஞானி]
24, வி.ஆர்.வி. நகர், ஞானாம்பிகை ஆலை (அஞ்சல்),
கோயம்புத்தூர் - 641 029 தொலைபேசி : 0422 - 2648119

மயூரா அச்சகம், கோவை 9. தொலைபேசி : 93607 89001